# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 27 செவ்வாய்க்கிழமை (10.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 165





03 எமது வீரர்கள் சாதிப்பார்கள்





04 பெயரளவிலேயே தமிழ்த் தேசிய மொழி





16 இராஜதந்திரப் போர் அரசுக்கு இனி


# வெளிநாடுகளின் குற்றச்சாட்டுக்களை ஆதரித்தால் உங்களுக்கு அழிவு வரும்

## தமிழர்களை எச்சரிக்கிறார் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ

யாழ்ப்பாணம், மே 10

வெளிநாடுகள் இலங்கை மீது சுமத்தும் போர்க்குற்றச்சாட்டுக்களுக்குத் ''வெறும் டொலர்களுக்காகவோ சுயலாபங்களுக்காகவோ துணை போகாதீர்கள். அறிக்கைகள் விட்டோ, வேறு வழிகளிலோ வெளிநாடுகளின் குற்றச்சாட்டுக்களுக்கு ஆதரவு தெரிவித்தால் அது உங்கள் அழிவுக்கே வழிவகுக்கும்'' என்று தமிழர்களை எச்சரித்துள்ளார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும் ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ. ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பிலேயே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். (29ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர் குழு அறிக்கையை ஆதரித்து கனடாவில் தமிழர்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே 10

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதரவாக கனடாவில் உள்ள தமிழர்கள் நேற்றுமுன்தினம் ரொறன்டோ நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தில் நடந்த போர்க் குற்றங்கள் தொடர்பாக, நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை பரிந்துரைத்துள்ளவைகளை அடிப்படையாகக் கொண்டு சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வர்கள் வலியுறுத்தினர்.

ரொறன்டோவில் உள்ள (29ஆம் பக்கம் பார்க்க)

## தமிழரை நிர்ப்பந்தித்து கையொப்பம்; கூட்டமைப்பு வன்மையான கண்டனம்

யாழ்ப்பாணம், மே 10

தமிழ் மக்களின் விருப்பத்துக்கு மாறாக, - ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக - பிரதி அமைச்சர் ரத்நாயக்கா தலைமையிலான குழுவினர் பொதுமக்களை நிர்ப்பந்தித்து கையொப்பம் பெற்றமை ஜனநாயக விரோதமான செயற்பாடாகும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் செயலாளர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாகக் கூறிக் கொண்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரதியமைச்சர் ரத்நாயக்க தலைமையிலான குழுவினர் யாழ். நகர வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபட்ட பொதுமக்களிடம் கையொப்பம்

(32ஆம் பக்கம் பார்க்க)



இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தொடர்ந்த அகதி வாழ்க்கையை முடித்துக்கொண்டு மீண்டும் தம் சொந்த நிலங்களுக்கு திரும்பிய வலி.வடக்கு மக்கள். (மேலும் படங்கள், செய்தி 30 ஆம் பக்கத்தில்)

## கூட்டமைப்பு-அரச தரப்பு பேச்சுகளில் முஸ்லிம் தரப்புக்கும் இடம்வேண்டும்

### பஷீர் சேகுதாவூத் கோரிக்கை

கொழும்பு, மே 10

யுத்தம் நடைபெற்ற காலத் தில் பாதிப்புக்கு உள்ளான ஒரு சமுதாயம் என்ற அடிப்படையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்கும் இடையில் நடை பெறும் பேச்சுகளில் முஸ்லிம் தரப்பையும் இணைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் பேச்சுகள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

- இப்படி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தகப் பிரதி அமைச்சருமான பஷீர் சேகுதா வூத் தெரிவித்துள்ளார்.

அவர் கூறியவை வருமாறு:-

உலகம் பூராவும் நடைபெற்ற சகல பேச்சுகளிலும் பகிரங்கத் தன்மை பேணப்படாத பேச்சுகள் தோல்வியில் முடிவடைந்துள் எமை வரலாறாகும். பிரச்சினைகளுக்கு உள்ளாகியுள்ள இரு தரப்புகளுடனும் பேச்சுகள் நடைபெறுகின்ற பொழுது அது குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும். (29ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக மாணவருக்கு மாவை. கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

பல்கலைக்கழக மாணவர் கள் இராணுவ, பொலிஸ் பிரசன்னத்துக்கு இடமளிக்காத வகையில் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார் மாவை சேனாதிராசா.

யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையிலான மோதல் செய்திகள் எமக்கு மிகுந்த வேதனையளிக்கின்றன. எதிர்

(29ஆம் பக்கம் பார்க்க)

# 13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின்மூலமே தீர்வு இணக்கம் குறித்து ஏனைய கட்சிகளுடனும் பேச்சு

## அரசு-கூட்டமைப்பு ஒருங்கிணைப்பு செயலாளர் சஜின் டி வாஸ் தெரிவிப்பு

கொழும்பு, மே 10

13ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் அடிப்படையிலேயே இனப்பிரச்சி னைக்குத் தீர்வு காணப்படும். இந்தியாவும் இதனையே ஆதரிக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரச தரப்புக்கும் இடையிலான பேச்சுகளில் எட்டப்படும் இணக்கம் குறித்து ஏனைய கட்சிகளுடனும் அரசு பேச்சு நடத்தும்.

வெளிவிவகார அமைச்சின் செயற்பாடுகளைக் கவனிக்கும் ஜனாதிபதியின் இணைப்புச் செயலாளரும், கூட்டமைப்பு-அரச தரப்புப் பேச்சுகளின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சஜின் டி வாஸ் குணவர்தன மேற்கண்டவாறு கூறினார்.

கொழும்பில் வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களுடனான சந்திப்பு நேற்று நண்பகல் சினமோன் கிராண்ட் ஹோட்டலில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் பந்துல ஜெயசேகரவும் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் அரச தரப்பு - தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பேச்சு, இலங்கை வரும் இந்தியக்குழு, மாகாண சபை அதிகாரங்கள், செனட் சபை அமைப்பு உட்பட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

பத்திரிகை ஆசிரியர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் சஜின் டி வாஸ் குணவர்தன தெரிவித்தவை வருமாறு:-

13ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு இணங்கவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். இந்தியாவும் இதனையே ஆதரிக்கிறது. பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்



(29ஆம் பக்கம் பார்க்க)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கர்ஜித்தன சென்னைச் சிங்கங்கள்; பேச்சிழந்தது ராஜஸ்தான் றோயல்ஸ்

-அருண்மொழி-

ஜெய்பூரில் நடந்தது ஐ.பி.எல்லின் 52 ஆவது ஆட்டம். வென்றார் வோர்ன் நாணயச் சுழற்சியில். பணித்தார் டோனியை துடுப்பெடுத்தாட.

வந்தனர் மைக் ஹஸி - முரளி விஜய். ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள். வீசினார் மெனேரியா முதலாவது ஓவர். அதிரடியுடன் ஆரம்பமானது சென்னையின் கணக்கு. முதலாவது பந்து ஹஸியின் தயவால் தொட்டது எல்லையை. அளவான அதிரடிகளுடன் முன்னேறியது ஆட்டம். நான்காவது ஓவர் வீசினார் வொட்ஸன். முதலாவது பந்திலேயே தவறவிடப்பட்டது விஜயின் ஆட்டமிழப்புச் சந்தர்ப்பம். கிடைத்த பலனை பயன்படுத்திக் கொண்டது சென்னை.

ஐந்தாவது ஓவர் வீசினார் அமிர் சிங். அடிக்கப்பட்டது மூன்று பவுண்டரி. ஆறாவது ஓவரில் சென்னையின் ஓட்ட எண்ணிக்கை தொட்டது ஐம்பதை. போத்தாவின் பந்து வீச்சில் ஹஸியின் ஆட்டமிழப்பை. மறுத்து விட்டார் நடுவர். வோர்ன் வீசினார் ஏழாவது ஓவர். ஆட்டத்தின் முதலாவது சிக்ஸர் தொட்டது எல்லையை. அடித்து அசத்தியவர் முரளி விஜய். நிறைவடைந்தது ஒன்பது ஓவர்கள். பெறப்பட்டது 77 ஓட்டங்கள். பத்தாவது ஓவர் வீச வந்தார் போத்தா. பலன் கிடைத்தது அவரின் பந்து வீச்சுக்கு. ஓங்கி அடிக்க சுழன்றது ஹஸியின் துடுப்பு. பட்டுக் கொள்ளவில்லை பந்து. வீழ்த்தி விட்டது விக்கெட்டை. 30 பந்துகளில் 46 ஓட்டங்கள் பெற்றார் ஹஸி. நுழைந்தார் ரெய்னா. இணைந்தார் விஜயுடன். அதே ஓவரில் ஒரு காட்டு காட்டினார் விஜய். எழுந்த பந்து விழுந்தது எல்லைக்கு வெளியே.

ரெய்னா - விஜய் இணைந்தவுடன் நிதான ஆட்டம் ஒரிரு ஓவர்களுக்கு. போகப் போகப் பறந்தது அதிரடிகள். 72 பந்துகளில் சென்னையின் ஓட்ட எண்ணிக்கை தொட்டது 100 ஓட்டங்களை. திரிவேடி வீசினார் பதின்மூன்றாவது ஓவர். சிக்ஸர், பவுண்டரி அதிரடியாக அடித்தார் விஜய். ஓட்ட விகிதம் ஏறியது. விஜய் விளாசினார் சிக்ஸர். தொட்டார் 50 ஓட்டங்களை.



விஜய்

களத்தடுப்பில் மொத்தமாய் சொதப்பியது ராஜஸ்தான். வாய்ப்பை பயன்படுத்தி ஓடி முடிக்கப்பட்டது ஓட்டங்கள். வேகமாய் ஓடி அசத்தி ஓட்டங்களை எடுத்தது இந்த ஜோடி. கவனமிழந்தார் விஜய். முடிந்தது அவரது ஆட்டம். ரன் அவுட்டில் 53 ஓட்டங்களுடன் வெளியேற்றம் விஜய். 40 பந்துகளில் 2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடக்கம்.

அடுத்து நுழைந்தார் சென்னையின் தலை. டோனி. விக்கெட் இழப்பு. 16 ஆவது ஓவரில் வெளிப்பாடு. போத்தாவின் ஓவர் அடக்கி வாசித்தது சென்னை. புலி பதுங்குவது பாய. புரிய வைத்தது சென்னை அடுத்த ஓவரில். திரிவேடியின் ஓவர். டோனி வெழுத்தார் சிக்ஸர். கூரையில் தங்கியது பந்து. ஆட்டம் இறுதியை நெருங்க சென்னையின் எழுச்சி உச்சம். பவுண்டரிகள் அளவு கணக்கின்றி அரங்கை அலங்கரித்தது. அமிர் வீசினார் 19 ஆவது ஓவர். ரெய்னா ஓங்கித் தாக்க முயன்றார். பாவம் பறிக்கப்பட்டது அவர் விக்கெட். 27 பந்துகளில் 43 ஓட்டங்கள்.

இறுதியில் இருபது ஓவர்களில் சென்னை பெற்றுக்கொண்டது 196 ஓட்டங்கள். இழந்தது 3 விக்கெட்டுக்கள். 19 பந்துகளில் 41 ஓட்டங்கள். இது டோனியின் கணக்கு. 3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கின அதனுள். பந்து வீச்சில் அள்ளிக் கொடுத்தனர் ராஜஸ்தான் வீரர்கள்.

பலமான இலக்கு. எட்ட முடியுமா ? ஏக்கத்துடன் தொடங்கியது ஆட்டம். வொட்ஸன் - ராவிட் வந்தனர் களத்துக்கு. ஆரம்ப ஓவர்கள் ஓங்கியது ராவிட்டின் கை. நான்காவது ஓவரில் வீழ்ந்தது ராவிட் விக்கெட். பொலஞ்சர் முடிவுக்கு கொண்டு வந்தார் அவர் ஆட்டத்தை. 16 பந்துகளில் பெற்றுக் கொடுத்திருந்தார் 20 ஓட்டங்கள்.


ராஹானே வந்து இணைந்தார் வொட்ஸனுடன். ராஹானே கைக்கு மாறியது ஆட்டம். வந்த வேகத்தில் பிராவோவின் ஓவரில் பறந்தது இரண்டு பவுண்டரிகள். மறுமுனையில் அஸ்வினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது வொட்ஸனின் ஆட்டம். 39 பந்துகளில் ராஜஸ்தான் பெற்றது 50 ஓட்டங்கள்.

ரெயிலர் நுழைந்தார். பெற்றார் 6 ஓட்டங்கள். மோர்கல் முடித்தார் ஆட்டத்தை. வந்தார் மெனேரியா. எடுத்தது 2 ஓட்டங்கள். வீழ்த்தப்பட்டது விக்கெட். 10 ஓவர்களில் 70 ஓட்டங்களில் இழந்தது 4 விக்கெட்டுக்கள்.

ராஹானே அதிரடி தொடர்ந்தது. 33 பந்துகளில் அடித்தார் அரைச்சதம். பிராவோவின் ஓவரில் திரும்பினார் பவிலியன். 36 பந்துகளில் ராஹானே பெற்றுக் கொடுத்தது 52 ஓட்டங்கள். மத்தியவரிசையில் போத்தா - றோட் மத்திம ஆட்டம். சென்னையின் பந்து வீச்சுக்கு முன்னால் திணறியது ராஜஸ்தான்.

133 ஓட்டங்களுடன் மடிந்தது ராஜஸ்தான். பொலஞ்சர் வீசினார் 4 ஓவர்கள். வீழ்த்தினார் 3 விக்கெட்டுக்கள். கொடுத்தது 22 ஓட்டங்கள். அஸ்வின் 24 ஓட்டங்களில் சரித்தார் 2 விக்கெட்டுக்கள். ரெய்னா வீசியது மூன்று பந்துகள். விழுந்தது இரண்டு விக்கெட்டுக்கள். ஓட்டங்கள் வழங்கவில்லை.

ஆட்ட நாயகனாய் முரளி விஜய் தெரிவு.



ரஹானே ஆட்டத்தில்

## இன்றைய ஆட்டம்

- டெக்கான் சார்ஜஸ் எதிர் புனே வாரியர்ஸ் ( மாலை 4 மணி )
- பஞ்சாப் கிங்ஸ் லெவன் எதிர் மும்பை இந்தியன்ஸ் (இரவு 8 மணி)

## அதிகூடிய ஓட்டம்

- சேவாக் – டெல்லி (11 ஆட்டங்கள் 424 ஓட்டங்கள்)
- மைக் ஹஸி – சென்னை (9 ஆட்டங்கள் 388 ஓட்டங்கள்)
- டெண்டுல்கர் – மும்பை (10 ஆட்டங்கள் 365 ஓட்டங்கள்)

## அதிகூடிய விக்கெட்டுக்கள்

- மலிங்க – மும்பை இந்தியன்ஸ் (10ஆட்டங்கள் 24 விக்கெட்டுக்கள்)
- பொலஞ்சர் – சென்னை (8 ஆட்டங்கள் 13 விக்கெட்டுக்கள்)
- ராகுல் சர்மா – புனே (10 ஆட்டங்கள் 13 விக்கெட்டுக்கள்)

DLF INDIAN PREMIER LEAGUE

# பாதுகாப்பு வழங்கத் தயார்; பெயர்களை வெளியிடத் தயாரா ? - அளுத்கமகே

ஆட்ட நிர்ணய சதியுடன் தொடர்புடையவர்களின் பெயர்களை வெளியிடும் பட்சத்தில் திலகரட்னவுக்கு முழுப் பாதுகாப்பு வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

பெயர்களை வெளியிடுவதற்கு முறையான பாதுகாப்பு அவசியம் என்று ஹசான் அண்மையில் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார். இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியிருப்பதாக விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடகத்துறைச் செயலரின் கையொப்பத்துடன் வெளியான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் தொடர்பில் ஹசான் திலகரட்னவுக்கு சிறந்த ஈடுபாடு இருக்குமானால் இந்தக் கடுமையான குற்றச்சாட்டுடன் தொடர்புடைய நபர்களின் பெயர்களை வெளியிட்டு கிரிக்கெட்டின் மகத்துவத்தை பாதுகாப்பது அவரது கடமை.

விசாரணைகளை முன்னெடுக்க அறிந்த சகல விடயங்களையும் முன்வைக்குமாறு ஹசானுக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் கோருவதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஹசான் விடுக்கும் கோரிக்கையை எழுத்து மூலமாக பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்குமாறு கேட்டுக்கொள்வதாக அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(15)

## DLF INDIAN PREMIER LEAGUE அணிகளின் நிலைகள்...

| அணி | M | W | L | T | N/R | Net/R/R | P |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 10 | 08 | 02 | 0 | 0 | + 0.735 | 16 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.509 | 14 |
| கொல்கத்தா நைட் ரைடர்ஸ் | 11 | 07 | 04 | 0 | 0 | + 0.464 | 14 |
| றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் | 10 | 06 | 03 | 0 | 1 | + 0.786 | 13 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 11 | 05 | 05 | 0 | 1 | - 0.504 | 11 |
| கொச்சி ருஸ்கேர்ஸ் | 11 | 05 | 06 | 0 | 0 | - 0.624 | 10 |
| டெல்லி டெயாடெவில்ஸ் | 11 | 04 | 07 | 0 | 0 | - 0.312 | 08 |
| புனே வாரியர்ஸ் | 10 | 03 | 07 | 0 | 0 | - 0.070 | 06 |
| டெக்கான் சார்ஜஸ் | 10 | 03 | 07 | 0 | 0 | - 0.125 | 06 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 09 | 03 | 06 | 0 | 0 | - 0.934 | 06 |

# நாடு திரும்பினார் யுனிஸ்

மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக அங்கு சென்றிருந்த பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர் யுனிஸ்கான், சகோதரர் மரணமடைந்ததால் உடனடியாக பாகிஸ்தான் திரும்பினார்.

யுனிஸ்கானின் மூத்த சகோதரரான சம்ஷாத் கான் ஜெர்மனியில் மரணமடைந்தார். பாகிஸ்தானில் நடைபெறும் சகோதரரின் இறுதிச்சடங்கில் கலந்துகொள்வதற்காக அவர் நாடு திரும்ப அந்த நாட்டு கிரிக்கெட் வாரியம் அனுமதி அளித்தது. இதையடுத்து அவர் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் திரும்பினார்.

(15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது வீரர்கள் சாதிப்பார்கள்

இலங்கை கிரிக்கெட் அணியின் இளம் வீரர்களுடன் சென்று இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை வெற்றிகொள்ள முடியுமென்ற நம்பிக்கை இருப்பதாக இலங்கை கிரிக்கெட் அணியின் புதிய தலைவர் திலகரட்ண டில்சான் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் சுழல் நட்சத்திரம் முத்தையா முரளிதரன் போன்ற அனுபவசாலிகள் இல்லாத அணியுடன் சென்றாலும், இங்கிலாந்துக்கு எதிராக கடந்த காலங்களில் பெற்ற வெற்றிகளைத் தொடர்ந்தும் தக்கவைக்க இந்தப் போட்டியை ஒரு சவாலாக எடுத்துக் கொள்ளப்போவதாக அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்து புறப்பட முன்னர் இலங்கையணியின் சகவீரர்களுடன் போட்டி பற்றி ஆராயவிருப்பத்துடன் தொடரை வெல்வது என்ற இலக்குடன் மாத்திரமே இங்கிலாந்து புறப்படவிருப்பதாகவும் டில்சான் தெரிவித்தார்.

இளம் வீரர்களுக்கு நாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். இந்தச் சந்தர்ப்பத்தை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும். இங்கிலாந்து அணி வீரர்களின் துடுப்பாட்ட வரிசை பற்றி எனக்கு நன்கு தெரியும். எனினும் எமது அணி வீரர்களின் வேகப்பந்து மற்றும் சுழல்பந்து வீச்சாளர்களால் அவர்களை சமாளிக்க முடியும் என்றும் எமது இளம் வீரர்கள் தமது திறமையை வெளிக்காட்டுவார்கள் என நான் முழுமையாக நம்புகின்றேன் என்றும் அவர் தெரிவித்தார்.

# தோல்வியை தழுவினார் நடால்

மாட்ரிட் திறந்த ரென்னிஸ் போட்டியில் சேர்பியா வீரர் நோவக் சம்பியன் ஆனார்.

அவர் இறுதிப் போட்டியில் ஸ்பெயினைச் சேர்ந்த ரபேல் நடாலை 7-5, 6-4 செட் கணக்கில் தோற்கடித்தார். சொந்த மண்ணிலேயே நடால் தோல்வியைத் தழுவியுள்ளார்.

மாட்ரிட் ஓபனில் கடந்த ஆண்டு சம்பியனான நடாலுக்கு இந்தத் தோல்வி பெரும் அதிர்ச்சியைத் தந்தது. ஜோவிக் இந்த 2011 ஆம் ஆண்டில் இதுவரை 32 ஆட்டங்களில் ஆடி அனைத்திலும் வெற்றிவாகை சூடியவராக உள்ளார்.

மாட்ரிட் திறந்த சம்பியன் பட்டம் வென்றாலும் வரவிருக்கும் பிரான்ஸ் ஓபன் ரென்னிஸ் போட்டியில் பரிசுக் கிண்ணம் வெல்வதற்கு நடாலுக்கே வாய்ப்பு உள்ளது என்று ஜோவிக் தெரிவித்தார். களிமண் தரை ஆடுகளத்தில் நடாலுடன் இதுவரை 10 ஆட்டங்களில் ஜோவிக் ஆடி உள்ளார். இருப்பினும் தற்போது தான் முதன் முறையாக நடாலை வென்றுள்ளார். இந்தத் தோல்வி மூலம் நடாலின் 37 ஆட்ட தொடர் வெற்றிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.


இந்த ஆண்டில் ஜோவிக் பெற்ற 6 ஆவது சம்பியன் பட்டம் மாட்ரிட் திறந்த சுற்று வெற்றியாகும். 24 வயது நடால் தற்போது உலககின் முதல்தர ரென்னிஸ் வீரராக உள்ளார். 23 வயது சேர்பிய வீரரின், அதிரடி ஆட்டம் ரபேல் நடாலை யோசிக்க வைத்துள்ளது.

பிரான்ஸ் திறந்த ரென்னிசில் ஜோவிக் சம்பியன் ஆனது இல்லை. செம்மண் ஆடுகளமான ரோலண்ட் காரசில், ஜோவிக் 2 முறை அரை இறுதியில் ஆடியுள்ளார். நடால் பிரான்ஸ் திறந்த சுற்றில் இதுவரை ஒரு முறை மட்டுமே தோற்றுள்ளதால் அங்கு அவர் மீண்டும் வெற்றி பெறுவார் என்று ஜோவிக் தெரிவித்தார்.(15)

# தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது மகிழ்ச்சியளிக்கிறது

ஐ.பி.எல் போட்டியில் யுவராஜ் சிங் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணி தொடர் தோல்விக்கு நேற்று முன்தினத்துடன் முற்றுப் புள்ளி வைத்தது. 7 போட்டிகளில் தொடர்ந்து தோற்ற அந்த அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவன் பஞ்சாப்பை வீழ்த்தி தோல்விக்கு முற்றுப் புள்ளி வைத்தது.

முதலில் விளையாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியால் 20 ஓவரில் 8 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 119 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. ஷோன் மார்ஷ் அதிக பட்சமாக 32 ஓட்டங்கள் எடுத்தார். பார்னல், மைக்கேல் மார்ஷ், ராகுல் சர்மா, புவனேஷ் குமார் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.




பின்னர் விளையாடிய புனே வாரியர்ஸ் 17.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 120 ஓட்டங்கள் எடுத்தது. அணித்தலைவர் யுவராஜ் சிங் 35 ஓட்டங்களும், மனிஷ் பான்டி 28 ஓட்டங்களும் எடுத்தனர். இது புனே வாரியர்ஸ் அணி பெற்ற 3 ஆவது வெற்றியாகும். அந்த அணி ஏற்கனவே பஞ்சாப், கொச்சி அணிகளை வென்று இருந்தது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 6 ஆவது தோல்வியைத் தழுவியது. இந்த வெற்றி குறித்து புனே வாரியர்ஸ் அணித்தலைவர் யுவராஜ் சிங் கூறியதாவது:-

தொடர் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைத்தது மகிழ்ச்சி அளிக்கின்றது. வெற்றியை எதிர்பார்த்து இருந்தேன். அதிர்ஷ்டமோ அல்லது துரதிருஷ்டமோ எனது சொந்த மண்ணில் இந்த வெற்றி கிடைத்தது. தொடர்ந்து 7 போட்டிகளில் எப்படித் தோற்றேன் என்பது தெரியவில்லை. பந்து வீச்சாளர்கள் மிகவும் சிறப்பாக வீசி பஞ்சாப் அணியை 119 ஓட்டங்களுக்குள் கட்டுப்படுத்தினார்கள். தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டோம். அடுத்து வரும் ஐ.பி.எல் போட்டிகளில் இதை விட சிறப்பாக விளையாடுவோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

தோல்வி குறித்து கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் கூறும்போது, 119 ஓட்டங்கள் என்பது போதுமான இலக்கு இல்லை. புனே வாரியர்ஸ் பந்துவீச்சு சிறப்பாக இருந்தது என்று கூறினார். (15)

# சம்பியன் ஆனார் சீன வீராங்கனை



மலேஷிய திறந்த கிராண்ட் பட்மின்ரன் போட்டியின் இறுதிச் சுற்றில் சீன வீராங்கனை ஜின் வாங், சாய்னாவை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றார். மலேஷியாவில் உள்ள கெடாக் நகரில் மலேசிய திறந்த கிராண்ட் பிரிக்ஸ் கோல்ட் பட்மின்ரன் தொடர் நடக்கின்றது. இருவருக்கும் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் சீன வீராங்கனை ஜின் வாங் இந்திய வீராங்கனை சாய்னா நேவலை 13-21, 21-8, 21-14 என்ற செட் கணக்கில் வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றார்.

கடந்த ஆண்டில் இந்திய திறந்த கிராண்ட், சிங்கப்பூர் திறந்த ப[illegible] என்று பல்வேறு [illegible] வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (15)

## மலிங்கவுக்கு அபராதம்



ஐ.பி.ல் விதிமுறைகளை மீறியதாக மும்பை இந்தியன்ஸ் வீரர் லசித் மலிங்கவுக்கு ஆட்ட ஊதியத்தில் 5 சதவீதம் அபராதமாக விதிக்கப் பட்டுள்ளது.

மும்பையில் சனிக்கிழமை நடை பெற்ற டெல்லி டேர் டெவில்ஸுக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீசிய மலிங்க, இரண்டு முறை 'புல் டோஸ்' (இடுப்புக்கு மேலாக) பந்துகளை வீசினார்.

இதையடுத்து ஐ.பி.எல் விதிமுறைகளை மீறியதாக மலிங்கவுக்கு அபராதம் விதித்தார் ஆட்ட மத்தியஸ்தர் ரொஸன் மகாநாம. (15)

# பாகிஸ்தான் அணிக்குள் உட்பூசல்

ஒரு நாள் சர்வதேச போட்டிகளுக்கான பாகிஸ்தான் அணியின் தலைவர் சயிட் அப்ரிடிக்கும் அந்த அணியின் பயிற்றுநர் வக்கார் யூனிஸுக்கும் இடையில் மோதல் ஆரம்பித்துள்ளது.

மே.தீவுகளுக்கு சுற்றுலா மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி அங்கு நடைபெற்ற ஒருநாள் சுற்றுப் போட்டியில் 3-2 என்ற அடிப்படையில் வென்றது. ஆனாலும் அணித் தேர்வு விடயத்தில் பயிற்றுநர் வக்கார் யூனிஸ் தலையிடுவதாக சயிட் அப்ரிடி விசனம் தெரிவித்துள்ளார். இந்த விடயம் குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் இஜாஸ் பட்டிடம் தான் முறையிடவுள்ளதாகவும் அப்ரிடி நேற்றுத் தெரிவித்துள்ளார்.

'பயிற்றுநருடனான மோதல் தீர்க்கப்பட முடியாத விடயமல்ல என்ற போதிலும் ஒவ்வொருவரும் மற்றவர்களின் விடயத்தில் தலையிடாமல் தமது வேலை செய்ய வேண்டும் என்று நான் கூற [illegible]' இவ்வாறு அப்ரிடி தெரிவித்து[illegible] முன்னாள் அணித்தலைவ[illegible] பயிற்றுநருமான வக்கார் [illegible] மோதல் காரணமாக கன[illegible] இரு போட்டிகளிலும் விளையாடுவதற்கும் அப்ரிடி மறுத்ததாக செய்திகள் வெளியாகின. எனினும் அவர் அந்தப் போட்டிகளில் பங்குபற்றினார்.


இந்தத் தொடரின் முதல் 3 போட்டிகளிலும் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்ற நிலையில் கடைசி இரு போட்டிகளில் மேற்கிந்திய அணி வென்றமை குறிப் பிட[illegible] (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10 மே 2011 செவ்வாய்க்கிழமை

# பெயரளவிலேயே தமிழ் தேசியமொழி; அப்படி என்ன வலு உண்டு அதற்கு?

## யாழ்.வரும் அமைச்சருக்கு இது சமர்ப்பணம்



சிங்களமும் தமிழும் இந்த நாட் டின் தேசிய மொழிகளாக அரசியல் ரீதி யாக அங்கீகரிக்கப்பட்டு - வடக்கு, கிழக் கில் தமிழ் மொழியை நிர்வாக மொழி யாக ஏற்றுக்கொள்ளப்பட்டு- சுமார் 35 ஆண்டுகள் கடந்த போதும் தேசிய மொழி யான தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்து இது வரை காலமும் கிடைக்கப் பெற வில்லை.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளுக்கு தமிழ் மக்கள் தமது அலுவல்களை நிறைவேற்ற தமிழ் மொழியில் விண்ணப்பித்தால் அவற்றுக்கு பதில் கிடைப்பதில்லை. ஆங்கில மொழி மூலம் விண்ணப்பித்தாலும் சிங்கள மொழியிலேயே பதில் அனுப்பப்படுகின்றது. மற்றும் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளிலிருந்தும் வடக்கு, கிழக்கில் உள்ள திணைக்களங்களுக்கு சிங்கள மொழியிலேயே சுற்றுநிருபங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.

ரயில் நிலையங்கள், பஸ் நிலையங்கள் மற்றும் பொது நிகழ்வுகளில் தமிழ் மக்களின் பிரசன்னம் இருந்த போதும் அவற்றிலும் அறிவிப்புக்கள் தமிழ் மொழியில் செய்யப்படுவதில்லை. வடக்கு, கிழக்குக்கு வெளியே உள்ள ஏதாவது ஓர் அரச அலுவலகத்தில் தமிழ்மக்களில் ஒருவர் தமிழில் அலுவல்களை நிறைவேற்ற முடியாத அதே சமயம், குறிப்பிட்ட அலுவல்கள் தொடர்பாக வேண்டிய தகவல்களைக் கூட பெற முடியாத நிலையே நீடிக்கிறது.

வடக்கு, கிழக்குக்கு வெளியே ரயில் நிலையங்களில் ரயில்கள் புறப்படும் நேரம், தரிக்கும் நிலையங்கள் போன்ற தகவல்கள் தனிச் சிங்களத்திலேயே அறிவிக்கப்படுகின்றன. இ.போ.ச. மற்றும் தனியார் பஸ்களில் அவை சென்றுவரும் இடங்கள் தனிச் சிங்களத்திலேயே உள்ளன. ஒரு சில பஸ்களில் மும்மொழிகளிலும் இடங்கள் இருந்த போதிலும் பாதை மாற்றப்படும்போது (வெளியூர்களுக்கு) தனிச் சிங்களத்திலே குறிப்பிடப்படுகின்றன. உதாரணமாக கொழும்பில் இருந்து பதுளைக்குச் செல்லும் தனியார், இ.போ.ச. பஸ்களில் தனிச் சிங்களத்திலேயே பெயர்ப் பலகைகள் காணப்படுகின்றன. இந்த பஸ் சேவை இடம் பெறும் போக்குவரத்துப் பாதையில் கணிசமான எண்ணிக்கையான தமிழ் பேசும் பயணிகள் பயணம் செய்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல பொலிஸ் நிலையங்கள், ஒரு சில வங்கிக் கிளைகள் ஆகியவற்றிலும் தமிழ் மொழியில் கருமமாற்ற முடியாத நிலை தொடர்ந்து இருந்து வருகின்றது.

வடக்கில் தமிழ்மொழி நிர்வாக மொழியாக இருந்த போதும், இங்கு நடைபெறும் அமைச்சுக்கள், திணைக்களங்கள் தொடர்பான கூட்டங்கள் இடம் பெறும் போது அநேகமாக ஆங்கில மொழியே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதுபோன்ற கூட்டங்கள் வடக்குக்கு வெளியே உள்ள அரச திணைக்களங்களில் முழுச் சிங்களத்திலேயே நடைபெறும். வடக்கில் இடம்பெறும் கூட்டங்களில் சில வேளைகளில் கலந்து கொள்ளும் ஒருசில சிங்கள அதிகாரிகளுக்காக சிங்களத்தில் மொழிபெயர்ப்பு வழங்கப்படுகின்றது. அதே சமயம் சிங்களப் பகுதியில் இடம்பெறும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் தமிழ் மக்களுக்காக தமிழ் மொழிபெயர்ப்பு செய்யப்படுவதில்லை.

யுத்தத்துக்கு முன்னர் யாழ் . மாவட்டத்தில் நீதிமன்றங்கள் உட்பட அனைத்துத் திணைக்களங்களிலும் தமிழ் மொழியில் நிர்வாக அலுவல்கள் மிகவும் நேர்த்தியாக நடைபெற்று வந்தன. யுத்தம் முடிவடைந்த பின்னர் அந்த நிலையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. தற்போது ஆங்கிலமும் சிங்களமும் இங்கு தலைகாட்டத் தொடங்கிவிட்டன.

யுத்தம் ஓய்ந்த பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்தேசியக் கம்பனிகள், வங்கிக் கிளைகள், நிதிநிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்கள் வடக்கு, கிழக்கில் அசுர வேகத்தில் கால் பதித்தன. பதித்தும் வருகின்றன. அவற்றின் திறப்பு விழா நிகழ்வுகளும் பெரும் எடுப்பில் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகள் முழுக்க முழுக்க தமிழ் மக்களே பங்குபற்றியிருந்த போதிலும் அந்த நிகழ்வுகள் அநேகமாக ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே நடைபெற்றன. அவற்றில் இடம்பெற்ற சிங்கள, ஆங்கில உரைகள் மற்றும் நிகழ்வுகளுக்கு தமிழ் மொழியில் எந்த விதமான மொழிபெயர்ப்புக்களும் செய்யப்படவில்லை இவற்றில் ஒன்றை உதாரணமாக குறிப்பிடமுடியும்.

வடமராட்சியின் வங்கிக் கிளை திறப்பு விழாவில் அதிதிகளால் ஆங்கிலத்திலும், சிங்களத்திலுமே உரைகள் நிகழ்த்தப்பட்டன. ஆனால் அங்கு தமிழ் மொழி பெயர்ப்புக் கூட இடம்பெறவில்லை. ஆனால் அந்த வங்கியில் ஆங்கிலம், சிங்களம் தெரியாத பாமர தமிழ்மக்களே அதிகளவில் பண வைப்பு செய்வதற்காக வந்து காத்திருந்தனர்.

வடக்கு, கிழக்குக்கு வெளியே தமிழ் மக்களுக்கு தமிழில் தகவல்களைப் பெறவோ, பெயர்ப் பலகைகளை வாசிக்க முடியாத நிலை இருந்து வந்த போதிலும் யுத்தத்துக்கு பின்னர் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு வந்து செல்லும் சிங்கள மக்களுக்கு வசதியாக யாழ். மாவட்டத்தில் சேவையிலீடுபடும் பஸ்கள் மட்டுமன்றி அனைத்து வீதிகளின் பெயர்ப் பலகைகள், பாதை வழிகாட்டிகள் என்பன மும்மொழிகளில் முக்கிய கேந்திர நிலையங்களில் அவசர அவசரமாக போடப்பட்டன. இதனால் சிங்கள மக்கள் இங்கு எதுவித தங்கு தடையோ- இடர்பாடுகளோ இன்றி மிக சௌகரியமாக தமது தேவைகளைச் செய்து கொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

இதுபோன்ற வசதிகள்,வாய்ப்புக்கள் வடக்கு, கிழக்குக்கு வெளியே தமிழ் மக்களுக்கு எப்போது கிடைக்கும்?

இதேவேளை தமிழ் மொழி தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்ட போது அதனை உரிய முறையில் அமுல்படுத்த முடியவில்லை என்றும் தாமதமின்றி தமிழ் மொழிக்கு உரிய அந்தஸ்தைக் கொடுத்து தேசிய மொழியாக நடைமுறைப்படுத்துமாறு முன்னர் ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பணித்திருந்தார். ஆனால் எதுவுமே நடைபெறவில்லை.

இதே போல கடந்த அரசின் (அண்மைக் காலத்தில்) நல்லிணக்க அமைச்சராக இருந்த இடதுசாரி பிரமுகரான டி.யூ குணசேகர தமிழ் மொழியை அமுலாக்க சில திட்டங்களை முன்மொழிந்தார். அனைத்து மக்களும் தத்தம் மொழிகளிலேயே கருமமாற்ற அரச உத்தியோகத்தர்கள் இரு மொழிகளையும் கற்கவேண்டும் எனத் தெரிவித்திருந்தார். எனினும் அவர் வகுத்த திட்டங்கள் எதுவும் செயலுருப் பெறவில்லை.

தற்போதுள்ள அரசின் மற்றொரு இடதுசாரி பிரமுகரும் சிறுபான்மையினர் மீது நல்லெண்ணத்தைக் காட்டி வருபவருமான வாசுதேவ நாணயக்கார அமைச்சராக இருந்து வருகின்றார். முன்னைய அமைச்சர் டி.யூ.குணசேகராவிலும் பார்க்க தமிழ் மக்களின் மொழிப் பிரச்சினையை நன்கு அறிந்தவர்; தெரிந்தவர் வாசுதேவ என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அவருக்கு தமிழ்மொழியில் பரிச்சயமும் உண்டு.

அவரும் கூட அனைத்துப் பெயர்ப்பலகைகளிலும் தமிழ் மொழியும் சிங்களமும் இடம்பெறவேண்டும் என்று அண்மையில் அறிவித்திருந்தார். அதுவும் பேச்சளவிலேயே இருந்து வருகின்றது.

**ஆடலரசன்**

சாதாரண ஒரு தமிழ்ப் பொதுமகன், பெரும்பான்மை இன பொதுமகன் போல அனைத்துத் தகவல்களையும் தேவைகளையும் பெற்றுக் கொள்ளவும் நாடு முழுவதும் தடையின்றி சென்று வரவும் தேசிய மொழியான தமிழ் மொழி அமுல்படுத்தப்பட வேண்டும். அது நடைமுறைக்கும் வரவேண்டும். இல்லையேல் பெயரளவில் தமிழ் மொழி தேசிய மொழியாக இருப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை!!

இது யாழ்ப்பாணத்துக்கு வரும் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவுக்குச் சமர்ப்பணம்.

✱


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் தம்பு இரட்ணலிங்கம்**

(உரிமையாளர், பொப்பியூலர் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்-யாழ்ப்பாணம்)

திதி: அட்டமி
(10.05.2011)

தோற்றம்:
07.05.1920

மறைவு:
12. 05. 2008

காலத்தைப் பொன்னாகக் கருதி கடமைகளைக் கண்ணாகக் கருதி
வாழ்ந்தீர்கள் ஐயா!
கண்ணை இமை காப்பதுபோல் எம்மைக் காத்து வந்தீர்கள் ஐயா!
கணப்பொழுதில் எமைப்பிரிந்து எமையெல்லாம் சோகத்தில்
ஆழ்த்தினீர்கள் ஐயா!
காலன் உங்களை அணுகாமல் காக்கும் சக்தியின்றிக்
காலமெல்லாம் கலங்குகின்றோம் ஐயா!
எமது குடும்பத்தின் குலவிளக்காய் அன்போடும் பண்போடும்
வாழ்ந்து எமக்கெல்லாம் வழிகாட்டிய எமதருமைத் தந்தையே!
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கோயில் வீதி, யாழ்ப்பாணம். (46)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க, பயில BY ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி 426,(302)K.K.S. வீதி, யாழ்ப்பாணம்., பிளாக் வீதி, சங்கானை.
T.P-0776751649

**தவறிவிட்டது**

நீர்வேலி மேற்கு நீர்வேலி எனும் முகவரியைச் சேர்ந்த சின்னையா மதனராசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (763611744V) தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், BED பதிவு அட்டை என்பன அடங்கிய பேர்ஸ் முல்லைத்தீவு தனியார் பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0776365860 எனும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலி சந்தியில் இயங்கி வரும் ஆங்கில மருந்தகத்துக்கு நன்கு பயிற்சியும் அனுபவமுமுள்ள விற்பனையாளர் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0778814204

**வீடு வாடகைக்கு உண்டு**

17/1, Brown Road இல் நாவலர் வீதிக்கு அருகில் சகல வசதிகளுமுடைய 10 அறைகள், வரவேற்பறை, கராஜ், சமையலறை, வாகனத் தரிப்பிடம் ஆகியன அமைந்த மாடி [illegible] நிறுவனங்கள், கொம்பனிகள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0722906167, 0779907052


**சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்**

## கேள்வி அறிவித்தல் - 2011

**சாவகச்சேரி பிரதேச சபையால் கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.**

1. நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தில் (இக்ராட் M-09,M08) பதிவு செய்யப்பட்டவர்கள் கீழ் குறிப்பிடப்பட்ட தொகையைச் செலுத்தி. கேள்விப் பத்திரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை "செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம் என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கும் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. ஒவ்வொரு கேள்விகளும் தனித்தனியாக உறையிலிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட்டு கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
4. கேள்விகள் பரிசீலிக்கப்படும்போது கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
கேள்விப் படிவம் வழங்கப்படும் ஆரம்பத் திகதி:- 11.05.2011 மு.ப 10 மணிமுதல் (அலுவலக நேரத்தில்) பெற்றுக்கொள்ளலாம்.
கேள்விப் படிவம் வழங்கப்படும் இறுதித் திகதி:- 20.05.2011 பி.ப.2 மணிவரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:- 27.05.2011 ந.ப.12 மணிவரை
கேள்விகள் திறக்கப்படும் திகதி:- அன்றைய தினம் (27.05.2011) பி.ப.1 மணியளவில் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.
5. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் (கொடிகாமம்) அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல | வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவம் பணம் ரூபா | மீளளிக்கப்படாத VAT+NBT 12%+3% ரூபா |
|---|---|---|---|---|
| 01 | சாவற்குழி பிணமுருங்கை மயானத்தில் எரி கொட்டகை அமைத்தல் | 4,600.00 | 750.00 | 112.50 |
| 02 | சரசாலை உப அலுவலகச் சுற்றுமதில் கட்டுதல் | 3,400.00 | 750.00 | 112.50 |
| 03 | வரணி உப அலுவலகச் சுற்றுமதில் கட்டுதல் | 4,500.00 | 750.00 | 112.50 |
| 04 | சியாமளா மில் வீதித் திருத்தம் | 9,000.00 | 1000.00 | 150.00 |

தியாகராஜா தர்சினி
செயலாளர்,

சாவகச்சேரி பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
கொடிகாமம். (சி/575938) (39)

09.05.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## அமெரிக்காவின் வழியில் இந்தியா?

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் இலங்கை அரசுக்குள்ள கடமை குறித்து ஆராய்வதற்காக, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் தமக்கு ஆலோசனை வழங்குவதற்கு நியமித்த மூவர் நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகக் கிளம்பி, மக்களை அதன் பொருட்டு அணி திரட்டிய அரசு, இப்போது தனது கடும் போக்கைத் தளர்த்திவிட்டது.

நிபுணர் குழுவின் அறிக்கையைப் புறக்கணிப்பது என்ற தனது முந்தைய முடிவை அரசாங்கம் மாற்றிவிட்டது. அந்த அறிக்கை குறித்து ஐக்கிய நாடுகள் சபையுடன் தொடர்பு கொள்வது என்று அரசாங்கம் தீர்மானித்து, தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளில் மிகமிகத் தீவிரமாக பம்பரமாகச் செயற்படுவதாக உள்வீட்டுத் தகவல்கள் கூறுகின்றன.

ஐ.நாவை எதிர்த்து நிற்பதனை விட, அதனை அணைத்து நடந்து அரசுக்குச் சார்பாகக் காரியமாற்றுவது சாதுரியமானது என்று அரசின் ஆலோசகர்கள், புத்திஜீவிகள் தெரிவித்த ஆலோசனைகளை உள்வாங்கிக் கொண்டே இப்படி ஒரு மனமாற்றம் உண்டானது என அறியப்படுகிறது.

எனினும் , அமெரிக்காவின் ஆலோசனையின் பேரிலேயே, அதன் வற்புறுத்தலின் பேரிலேயே, தனது 'சண்டித்தன'த்தால் உண்டாகக் கூடிய பலாபலன்களை இலங்கை அரசு உணர்ந்து கொண்டு, ஆரம்ப நிலைப்பாட்டைத் தளர்த்தி உள்ளதாகவும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

போர்க்குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்கான உகந்த, வலுவுள்ள, பாரபட்சமற்ற பொறிமுறையை உள்நாட்டுப் பரிமாணங்களில் தோற்றுவிக்க வேண்டும். அது சர்வதேசத்துக்குத் தரமான, தளம்பலற்ற பதில்களையும் உண்மைகளையும் வெளிப்படுத்தும் போக்குடையாதாகவும் இருத்தல் வேண்டும் என்பதே அமெரிக்கா வகுத்து விதித்துள்ள படிமுறை என்றும் அறியப்படுகிறது.

இலங்கை அரசு அமைத்துள்ள கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தகுதிவாய்ந்த அமைப்பு அல்ல- பொறிமுறையல்ல - என்றும் அமெரிக்கா கோடிட்டுக் காட்டியுள்ளது. சர்வதேச மனித உரிமைச் சட்டங்கள் மீறப்பட்டிருப்பதனை விசாரிக்கும் அதிகாரம் ஆணைக்குழுவுக்கு வழங்கப்படவில்லை என்பதையும் அமெரிக்கா இலங்கை அரசுக்குக் கோடிட்டு எடுத்துரைத்திருக்கிறது.

அமெரிக்காவின், தெற்கு மற்றும் மத்திய ஆசிய வட்டகைக்கான உதவி அமைச்சர் றோபேர்ட் ஓ பிளேக், இலங்கைக்கு வருகை தருவதற்கு சிறிது காலத்துக்கு முன்னரும், அதன் பின்னரும் இலங்கை அரசிடம் ஏற்பட்ட குறிப்பிட்ட மாற்றம் என்று இதனைக் கணக்கெடுப்பது பொருத்தம்.

இதேவேளை -

தமிழகத்தில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் இம்மாதம் 13ஆம் திகதி - அதாவது இன்னும் மூன்று நாள்களில் - வெளிவரும் வரை, இலங்கை அரசுடன் பேசுவதற்கு, அல்லது இங்கிருந்து செல்லும் அரசகுழுவுடன் பேசுவதற்கு பிகு பண்ணியது இந்திய அரசு. எனினும் உயர் அதிகாரிகள் கொண்ட அதன் தூதுக்குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை கொழும்பு வருகிறது.

அமெரிக்காவைப் போலவே, இந்தியாவும் வன்னியில் போர் நடைபெற்ற காலப்பகுதியில் இலங்கை அரசுக்குப் பெரியளவில் உதவியது. அது இப்போது உலகறிந்த பரகசியம். அதனால், அமெரிக்காவை அடியொற்றியே இந்தியாவும் செயற்படும் என்று ராஜிக வட்டாரங்களில் பரவலாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையில் ஊன்றித் தொட்டுக் காட்டப்பட்டுள்ள, அழுத்தம் திருத்தமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ள, போர்க்குற்றங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைச் சட்டமீறல்கள் குறித்து இந்திய அதிகாரிகள் வாயும் திறக்கமாட்டார்கள் என்று மிக நம்பகமாக அறியப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இரண்டு விவகாரங்களும் சர்வதேச மயமாகியுள்ளதாலும், அவற்றுக்கு மிகக் கணிசமான ஆதரவு கிடைத்து வருவதாலும், இனப்பிரச்சினைக்கு மிக நியாயமான தீர்வு கண்டு இலங்கையில் தேசிய நல்லிணக்கத்தை உண்டாக்க விரைந்து செயற்பட வேண்டும். அதன் பொருட்டு, தமிழர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை இந்திய வடிவத்திலேனும் (Model) வழங்கவேண்டும் என அழுத்தி வலியுறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதாக அறியப்படுகிறது.

தற்போதைய கட்டத்தில் -

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, ஐ.நா மனித உரிமைச் சபையில் விவாதத்துக்கு எடுக்கப்படும் சாத்தியம் அதிகமாக இருப்பதால் - அது நடைபெறும் பட்சத்தில் - இந்தியாவின் ஆதரவு இலங்கைக்குப் பலம் சேர்க்கும். அதனைப் பிரதான காயாக நகர்த்தி, இனப் பிரச்சினைக்கான உகந்த தீர்வை விரைவில் கொண்டு வருமாறு இந்தியா வலியுறுத்தும் என ராஜதந்திர வட்டாரங்கள் நம்பிக்கை தெரிவிக்கின்றன.

எப்படியோ, எல்லாம் நன்றாகவே முடியுமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

இலங்கையில் போரை முடிவுறுத்துவதற்கு, அதன் படைகள் வெல்வதற்கு, அரசின் பக்கம் நின்று, அதற்கு வேண்டிய மிகப் பிரதான உதவிகளை இரகசியமாக வழங்கியதில், ஆற்றியதில் அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் அதீத பங்குகள் இருந்தன. அது இப்போது உலகப் பரகசியம். அதன் வழியால், இரு நாடுகளும் இதே [illegible] பாட்டைக் கூட்டு அடிப்படையில் பின்பற்றுவதற்கு முனைப்புடன் செயற்படின் அது ஆச்சரியமாகாது!

# குடாநாட்டுக்குச் சீரான மின்சாரம் ஆறு மாதங்களுக்குள் கிடைக்கும்

## மின் அத்தியட்சகர் உறுதி மொழி

யாழ்ப்பாணம்,மே 10

யாழ்.மாவட்டத்துக்கு இன்னும் 6 மாதங்களுக்குள் சீரான மின்சாரம் வழங்கப்படும் என்று யாழ்.மின்சார சபையின் மின் அத்தியட்சகர் ஏ.அருள்நாதன் உறுதியளித்தார்.

யாழ்.பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் சீரற்ற மின்சார விநியோகத்தால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் விசனம் தெரிவித்தனர்.

இதற்குப் பதில் அளித்த மின் அத்தியட்சகர் மேற்கண்ட தகவலை உறுதிபடத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில்,

'நொதேர்ன் பவர்', 'அக்கிறிகோ' ஆகியவற்றின் உதவியுடன் யாழ்.மாவட்டத்தில் மின்சாரம் வழங்கப்படுகின்றது. இருப்பினும் மின் இணைப்புக்கள் ஒருங்கிணைப்பு சீரான முறையில் இல்லாமையால் அடிக்கடி மின் தடை ஏற்படுகின்றது.

இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து யாழ். மாவட்டத்தில் சீரான மின்சாரத்தை வழங்குவதற்கு யாழ். மின்சார சபை பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கொழும்பிலிருந்து சிரேஷ்ட மின்பொறியியலாளர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர். வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனவே வெகுவிரைவில் தடையற்ற மின்சாரம் சீரான முறையில் தென்னிலங்கையைப் போல் வழங்கப்படும் - என்றார் மின் அத்தியட்சகர். (த-9)

# நிபுணர் குழுவின் அறிக்கையை மாநகர முதல்வர்களும் நிராகரிப்பு

கொழும்பு, மே 10

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரிப்பதென மாநகர சபை முதல்வர்களின் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநகர சபை முதல்வர்களின் ஆறாவது தேசிய மாநாடு மாத்தளை மாநகரசபையின் புதிய மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதற்கு குருநாகல மாநகர சபை முதல்வர் சந்திரசிறி டி சில்வா தலைமை தாங்கினார்.

பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கையை நிராகரிப்பதென இவரால் முன்மொழியப்பட்ட தீர்மானம் மாநாட்டில் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பண்டாரவளை ஆகிய மாநகர சபைகளின் முதல்வர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

இங்கு உரையாற்றிய சந்திரசிறி டி சில்வா, பான் கீ மூனால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் அறிக்கை நாட்டில் பிரிவினையை ஏற்படுத்துவதற்காகவே தயாரிக்கப்பட்டுள்ளது. ஆகவே நாட்டின் முக்கிய நகரங்களைச் சேர்ந்த மக்களின் பிரதிநிதிகள் என்ற வகையில் இந்த அறிக்கையை நிராகரிக்கின்றோம் என்று தெரிவித்தார். (க)

# மாநகர சபையில் அளவுக்கதிகமான தொழிலாளர் சரியான முகாமைத்துவம் இல்லாமையே காரணம்

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் பரஞ்சோதி சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், மே. 10

யாழ்.மாநகர சபையால் அளவுக்கதிகமான சுத்திகரிப்புத் தொழிலாளர்கள், சரியான முகாமைத்துவம் இல்லாமையாலேயே மோசமான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று மாநகர சபை உறுப்பினர் த.பரஞ்சோதி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற யாழ். பிரதேச் செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

மாநகர சபையில் 400 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஆனால் திண்மக் கழிவுகளை அகற்றுவதில் எதுவித முன்னேற்றமும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கென வேதனமாக மாதாந்தம் 60 லட்சம் ரூபா செலவாகிறது. அந்த நிதியின் மூலம் சுத்திகரிப்புப் பணிகள் தொடர்பான சகல செலவுகளையும் ஈடுசெய்ய முடியும் - என்றார்.

இதற்கு மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா பதில் அளிக்கையில்,

ஏற்கனவே கடமையில் இருந்த 257 சுத்திகரிப்புப் பணியாளர்களின் அசண்டையீனம் காரணமாகவே மேலும் 200 பணியாளர்கள் உள்வாங்கப்பட்டனர்.

ஆளுநரின் பணிப்பின் பேரில் சுத்திகரிப்புப் பணியாளர்கள் பல்வேறு திணைக்களங்களுக்குப் பங்கீட்டு அடிப்படையில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட த.பரஞ்சோதி மர்நகர சபையின் ஒழுங்கீனமான முகாமைத்துவத்தினாலே ஊழியர்கள் அசண்டையீனமாகச் செயற்படுகிறார்கள் என்றார்.

பாரம்பரிய கைத்தொழில்மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் . டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவணபவன், அரச தரப்பு எம்.பி சில் வெஸ்திரி அலன்ரின் மற்றும் யாழ். பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம் சுகுணரதி, மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட, மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

துறைசார் திணைக்களத் தலைவர்கள் தத்தமது பிரிவுக்குட்பட்ட பிரச்சினைகளை அதற்கான தீர்வுகளை முன்வைத்தனர்.

சுகாதாரம்,வீதி, வீடமைப்பு, குளங்கள் புனரமைப்பு உட்படப் பல்வேறு அபி விருத்தித் திட்டங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (த-9-14-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவாலி தேவாலயம் மீதான வான் தாக்குதலில் உயிர்நீத்த ஹேமலதா ஞாபகார்த்த விருது



யாழ்ப்பாணம்,மே.10

நவாலியில் விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட கிராம அலுவலர் செல்வி ஹேமலதா ஞாபகார்த்தமாக வினைத் திறன் மிக்க கிராம சேவையாளர்கள் மூவருக்கு 2010 ஆம் ஆண்டுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன.

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் செல்வி ஹேமலதா மற்றும் 146 பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இதன்போது கிராம அலுவலராக பல்வேறு சேவைகளை மேற்கொண்டபோது இவர் கொல்லப்பட்டதால் அவரது அர்ப்பணிப்பான சேவையைக் கருத்தில் கொண்டு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் அனுமதியுடன் கடந்த 2009 ஆம் ஆண்டு இந்த விருது வழங்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

2010 ஆம் ஆண்டு விருது வழங்கலுக்காக 15 பிரதேச செயலாளர் மற்றும் உதவி அரச அதிபர் அலுவலகங்களில் இருந்து மூன்று கிராம அதிகாரிகளும் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதில் முதலாம் இடத்தில் உடுவில் பிரதேச செயலகத்தின் கிராம அதிகாரி, இ.எ. மசனட், இரண்டாம் இடத்தில் கரவெட்டி பிரதேச செயலக கிராம அதிகாரி பா. லலித், மூன்றாம் இடத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக கிராம அதிகாரி கே.பூபாலசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவர்களுக்கான விருதும் சான்றிதழ்களும் விரைவில் வழங்கப்படவுள்ளன.

(ம-313)




யாழ்ப்பாணம்,மே10

வரணி வடக்கு கும்பிட்டான் புலம் கற்பக விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் திருவிழாவில் எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த் திருவிழாவும், 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (313-122)

* * *

யாழ்ப்பாணம்,மே10

கோண்டாவில் மேற்கு சந்திரசேகர விநாயகர் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருகின்றன.

திருவிழாக் காலத்தில் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 7 மணிக்கு தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை பூங்காவனமும் நடைபெறும். (313)

* * *

யாழ்ப்பாணம்,மே10

நெல்லியடி தடங்கன் புளி யடி முருகமூர்த்தி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு திருமஞ்ச வெள்ளோட்ட விழா இடம்பெற்றது.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தத் திருவிழா அன்று காலை 8 மணிக்கு மாணவர்களுக்கான சமய அறிவுத்தேர்வும் நடைபெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், மே10

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 9 தினங்கள் திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 30ஆம் திகதி திங்கட்கிழமை மகா சங்காபிஷேகமும் இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம்,மே10

வரணி, சுட்டிபுரம் கண்ணகை அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெறும்.

நடைபெறும் திருவிழாக்களில் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ம-313)

## ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,மே 10

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவுக்கான பிரதேச மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் தலைமையில் நல்லூர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம)

## வாகனங்களிலிருந்து தவறி வீழ்ந்து காயம்

தென்மராட்சி,மே10

வாகனம் நிறுத்த முன்னர் இறங்க முற்பட்ட இளைஞர்கள் வீழ்ந்து முழங்கையில் காயமேற்பட்டது.

இதில் சாவகச்சேரியைச் சேர்ந்த க.காயுன்(வயது 24) என்பவரும் நாவற்குழிப் பகுதியில் மோட்டார் சைக்கிளிலிருந்து வீழ்ந்து அதே இடத்தைச் சேர்ந்த த.சஜீவன்(வயது 25) என்வருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி வைத் திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(207)


## மரண அறிவித்தல்

### தம்பிமுத்து சிவபாலசிங்கம்

**(முன்னாள் பதிவாளர் - ஆரம்ப நீதிமன்றம் - வேலணை)**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் வடலியடைப்பு, வேலணை, அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிமுத்து சிவபாலசிங்கம் அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து - லட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் தவமணி தேவியின் பாசமிகு கணவரும் சிவாணி (அமெரிக்கா), உருத்திரன் (அமெரிக்கா), சிவாஜினி(அமெரிக்கா), காலஞ்சென்ற அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மராஜா (அமெரிக்கா), கஜன்(அமெரிக்கா), பத்மராஜினி (அமெரிக்கா) ஆகியோரின் பிரியமான மாமனாரும் காலஞ்சென்ற திருக்குலசிங்கம் மற்றும் திவ்வியசிரோன்மணி, காலஞ்சென்றவர்களான வரதசிரோன்மணி, தனபாலசிங்கம், பூபாலசிங்கம், ஜெயமங்களசிரோன்மணி, ஆகியோரின் அன்புச் சகோதரரும், நாகராசா, தியாகராசா, காலஞ்சென்றவர்களான தங்கராசா, லீலாவதி மற்றும் யோகராசா, செல்வராசா, லலிதாதேவி, காலஞ்சென்ற சந்திரசேகரம் மற்றும் புவனேஸ்வரி, தனலட்சுமி, அரசரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் தமிழினி, அருண், அனிஸ், அனிகா, ஆகாஷ், அக்ஸயா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2011) புதன்கிழமை அமெரிக்காவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ.க.யோகராசா
(மைத்துனர்)

*90/7, பொற்பதி வீதி,*
*கொக்குவில்.*

(சி/575937)(28)



## கண்ணீர்ப் பூக்களைச் சொரிகின்றோம்



சரவணை பள்ளம்புலத்தைப் பிறப்பிடமாகவும்
யாழ். அத்தியடி பிள்ளையார் கோயிலடியை
வதிவிடமாகவும் கொண்ட

**அமரர் யோகேஸ்வரக் குருக்கள்**
**பிரபாகரக்குருக்கள்**

அவர்களின் மறைவுச் செய்தி குறித்து யாழ். மண்டைதீவு முகப்பு வயல் சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம் சார்பில் கண்ணீர்ப்பூக்களைச் சொரிகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய முருகப் பெருமானை பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தர்மகர்த்தா குடும்பத்தினர்,
மண்டைதீவு முகப்புவயல்
சிவசுப்பிரமணியர் தேவஸ்தானம்.

(4015)(28-27-22)



## நீங்கா நினைவலைகள்....

**ஓராண்டு** | **ஈராண்டு**





19.02.1933 ← தோற்றம் → 27.07.1939
21.04.2010 ← மறைவு → 14.05.2009
அட்டமி(10.05.2011) ← திதி → ஷஷ்டி

**அமரர் அப்புத்துரை செல்வநாயகம்**
(ஓய்வுபெற்ற யாழ்.மேலதிக காணிப் பதிவாளர்)

**திருமதி செல்வநாயகம் நாகரத்தினம்**

காலங்கள் சுழல
நாள்களும் நகர
கால்கள் நடை பதிக்க
கண்ணிமைக்கும் நேரத்தில்
ஓராண்டுக்குள்
இறைபதத்தினை அடைந்து
பிரிக்க முடியாத பாசத்தினை
உலகுக்கு உணர்த்திய
எம் பாசமிகு தெய்வங்களே!
அம்மா.. அப்பா
கணந்தோறும் உம்மையே
நினைந்து உம் ஆத்ம
சாந்தியுற பிரார்த்திக்கும்

- குடும்பத்தினர்.

*பருத்தித்துறை ஒழுங்கை,*
*தாவடி தெற்கு,*
*கொக்குவில்.*

(4017)(28-27-22)



## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இல. **2391**
திகதி **08.05.2011**

அலுவலக முடிவுகள்

வெற்றி எழுத்து வெற்றி எண்கள்

**L 7 5 7 8 1 4**

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | L | 7 | 5 | 7 | 8 | 1 | 4 | ரூபா. 13,596,706/= | பரிசு - |
| 1ம் பரிசுகள் | | 7 | 5 | 7 | 8 | 1 | 4 | ரூபா. 20,00,000/= | பரிசுகள் 01 |
| 2ம் பரிசுகள் | | | 5 | 7 | 8 | 1 | 4 | ரூபா. 100,000/= | பரிசுகள் 08 |
| 3ம் பரிசுகள் | | | | 7 | 8 | 1 | 4 | ரூபா. 10,000/= | பரிசுகள் 80 |
| 4ம் பரிசுகள் | | | | | 8 | 1 | 4 | ரூபா. 1,000/= | பரிசுகள் 784 |
| 5ம் பரிசுகள் | | | | | | 1 | 4 | ரூபா. 100/= | பரிசுகள் 7553 |
| 6ம் பரிசுகள் | | | | | | | 4 | ரூபா. 20/= | பரிசுகள் 75474 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7ம் பரிசுகள் | | 7 | 5 | 7 | 8 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 09 |
| 8ம் பரிசுகள் | | 7 | 5 | 7 | 8 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 74 |
| 9ம் பரிசுகள் | | 7 | 5 | 7 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 750 |
| 10ம் பரிசுகள் | | 7 | 5 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 7491 |
| 11ம் பரிசுகள் | L | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 30016 |

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூபா.
**13,813,378.00**

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூபா. **7,862,650.00**
ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும். பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட், சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கும் வளமான நாட்டிற்கும்
**தேசிய லொத்தர் சபை**
234/2 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000 Hotline: 2433631

www.nlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்புக்கு அடிக்கடி வரும் சர்வதேச வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்தில் முதலீடு குறித்துப் பேச வேண்டும்

## யாழ். வர்த்தகர்கள் கோரிக்கை

கொழும்புக்கு அடிக்கடி வரும் சர்வதேச வர்த்தகர்கள் யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்து இங்கு முதலிடுவது குறித்துப் பேசுவதற்கு முன்வரவேண்டும் என்று யாழ்ப்பாண வர்த்தகப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தினர் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துரு சிங்க கேட்டறிந்தார். இதற்கான கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள பாதுகாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் இதில் கலந்து கொண்டனர்.

இதன்போது மிகக் குறைந்த எண்ணிக்கையான (சுமார் 04 பேர்) வர்த்தகர்களே சில கருத்துக்களைக் கூறினார்கள். அதன்போதே வர்த்தகர் ஒருவரால் மேற்படி விடயம் இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது.

கடந்த கால யுத்தத்தின் விளைவு காரணமாக யாழ்ப்பாண மாவட்டத்தின் உள்ளூர் உற்பத்தித் துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. இதனை மீளக் கட்டமைத்துக் கொள்வதற்கு வங்கிகளினதும் அரசினதும் பங்களிப்புகள் அவசிய தேவையாக இருக்கின்றன.

யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆர். ஜெயசேகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.'

யாழ. மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துறு சிங்கவுக்கும் யாழ்ப்பாண வர்த்தக சமூகத்தினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று யாழ். நகரிலுள்ள பாதுகாவலர் மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் உரை நிகழ்த்தும் போதே வணிகர் கழகத் தலைவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் வர்த்தக சமூகத்தின் பங்களிப்புக் கிடைக்கும். போர்ச் சூழலுக்கு முன்பு யாழ் குடாநாட்டின் அனைத்து உள்ளூர் உற்பத்தித் துறைகளும் மிகச் சிறப்பாக இருந்தன. அதன் மூலம் பொருளாதார வளர்ச்சி மாவட்டத்தில் ஏற்பட்டது. அன்று அனைத்துத் துறைகளும் தன்னிறைவுப் பொருளாதாரத்தைக் கொண்டிருந்தன.

வெளி மாவட்டங்களுக்கு எமது உற்பத்திகள் கொண்டு செல்லப்பட்டன. தற்போது 20 வீதமான லொறிகளிலேயே எமது உற்பத்திகள் கொண்டு செல்லப்படுகின்றன. 80 வீதமான லொறிகள் வெறுமையாகவே செல்கின்றன. இதற்கு காரணம் பொருளாதார வீழ்ச்சி ஆகும்.

வீழ்ச்சி க்ண்ட பொருளாதாரத்தை மீளவும் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பல வழிகளில் உதவிகள் தேவையாக உள்ளன.

கைத்தொழில் துறை முற்றாக வீழ்ச்சி கண்டுள்ளது. உள்ளூர் உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே வங்கிகளினதும் அரசினதும் உதவிகள் மூலம் அதனைப் பழைய நிலைக்கு கொண்டு வரவேண்டும். அதற்கு அந்த நிறுவனங்களது உதவிகள் தேவை.

பொருளாதார வளர்ச்சி பெற சட்டம், ஒழுங்குகள் அவசியம். போர்ச் சூழலில் சட்டம் ஒழுங்குகள் சீர்குலைந்திருந்தன. கப்பம், மிரட்டல் குற்றச் செயல்கள் மலிந்திருந்தன. இதன் காரணமாக தொழிலதிபர்கள் புத்திஜீவிகள், பணம் படைத்தவர்கள் மாவட்டத்திலிருந்து வெளியேறிவிட்டார்கள். போருக்குப் பின்னர் இந்த நிலைமை குறைந்துவிட்டது.

உயர் பாதுகாப்பு வலயங்களிலுள்ள எமது நிலங்கள் விடுவிக்கப்பட்டு வருகிறது. முழுமையாக நிலங்கள் விடுவிக்கப்படும் சந்தர்ப்பத்திலேயே பொருளாதார வளர்ச்சியை பெறமுடியும் என்றார்.

அத்துடன், யாழ். மாவட்ட இராணுவத் தளபதி எமது நீண்ட கோரிக்கைக்குச் செவி சாய்த்து யாழ் நகரில் இராணுவத்தின் பயன்பாட்டிலிருந்த கட்டடங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களை விடுவித்துள்ளார். அது மட்டுமன்றி வர்த்தக சமூகத்தினருக்கு இன்று இந்த கூட்டத்தில் வர்த்தக சமூகத்தினர் நலன் சார்ந்த சில உத்தரவாதங்களைத் தந்துள்ளார். அதற்காக அவருக்கு நன்றி கூறுகிறோம். பொருளாதார ரீதியாகத் தென்பகுதி வர்த்தகர்களுக்கும் வட பகுதி வர்த்தகர்களுக்கும் இடையில் நல்ல உறவு இருக்கிறது எனவும் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வின்போது வர்த்தக பிரதிநிதிகள் சில விடயங்களை இராணுவத் தளபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

சர்வதேச வர்த்தகர்கள் தென்னிலங்கைக்கு விஜயம் செய்து முதலிடுவது குறித்தும் கலந்துரையாடி வருகின்றனர். அவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் வரவேண்டும். இங்குள்ள வர்த்தகர்களுக்குச் சர்வதேச வர்த்தகர்களின் தொடர்புகள் அவசியமானது.

யாழ். மாவட்டத்தில் வங்கிகள், வங்கிக் கிளைகள், நிதி நிறுவனங்கள் அதிக எண்ணிக்கையில் இயங்கி வருகின்றன. ஆனால் வறுமைப்பட்ட மக்களுக்கு உதவுவதில்லை.

(ஐ-14)

# தனியார் பஸ்களின் சேவை அதிகரிப்பு போக்குவரத்துச் சபைக்கு இழப்பு

யாழ்ப்பாணம், மே10

தேவைக்கு மேலதிகமாகத் தனியார் துறை பஸ்கள் சேவையில் ஈடுபட அனுமதி வழங்கப்பட்டுள்ளதன் காரணமாக இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

பணியாளர்களுக்குரிய சம்பளத்தின் முழுத் தொகையும் உரிய திகதியில் வழங்க முடியாமல் இருப்பதற்கு இதுவே முக்கிய காரணமாகும் எனத் தெரிவித்தார் யாழ்ப்பாண மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர ஊழியர் சங்கச் செயலாளர் சோ.சத்தியேஸ்வரன்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் சாலைப் பணியாளர்களில் ஒரு பகுதியினர் தமக்கு முழுமையான சம்பளம் உரிய திகதியில் வழங்கப்படுவதில்லை. இதன் காரணமாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாக நேற்று ஊடகங்களுக்குத் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பாக ஊழியர் சங்கச் செயலாளரிடம் கேட்டபோதே அவர் உதயனுக்கு இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பணியாளர்களுக்கு ஒரு மாதத்தில் சம்பளம் வழங்குவதற்கு 55 லட்சம் ரூபா தேவை. இந்தத் தொகையில் 10 லட்சம் ரூபாவை மட்டுமே மத்திய போக்குவரத்து பேருந்துச் சபை எமக்கு வழங் கும். மிகுதியை நாமே உழைத்து சம்பளப் பணத்தைச் சம்பாதிக்க வேண்டும்.

மத்திய பேருந்து சபை வழங்கும் 10 லட்சம் ரூபாவும் 8 ஆம் திகதிக்குப் பின்னரே எமக்குக் கிடைக்கும்.

இந்த நிலையில் வெளி மாவட்டத்திலிருந்தும் உள்ளூரிலிருந்து தேவைக்கும் அதிகமான பஸ்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் சேவையில் ஈடு படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவை சேவையில் ஈடுபட்டுள்ளன.

இதனால் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது. இதனாலேயே பணியாளர்களுக்கு சம்பள முழுத்தொகையையும் உரிய திகதியில் வழங்கமுடியாமலுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு உரிய தீர்வு காண முயன்று வருகின்றோம் - என்றார்.

(ம-14)

## இ.போ.ச. பணியாளர்களின்

# மாதாந்த சம்பளக் கொடுப்பனவை முழுமையாக வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே10

வழங்கப்பட வேண்டிய மாதாந்த சம்பளத்தின் முழுத் தொகையையும் உரிய திகதியில் வழங்காது இனியும் நிர்வாகம் இழுத்தடிப்பு செய்யுமானால் காலவரையறையற்ற பணிப்புறக்கணிப்பில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும். இலங்கை போக்குவரத்து சபையின் கோண்டாவில் சாலை பணியாளர் இவ்வாறு கூறுகின்றனர்.

சாரதி, காப்பாளர், திருத்துநர் ஆகிய துறைகளில் பணியாற்றும் ஊழியர்களே தாம் பணிபுறக்கணிப்பில் ஈடுபட வேண்டி ஏற்படும் எனத் தெரிவித்துள்ளனர்.

பணியாளர்களுக்குரிய மாதாந்த சம்பளமும் ஒரே தடவையில் வழங்காமல் பகுதி பகுதியாக வழங்கப்படுதல் மற்றும் குறித்த திகதியில் சம்பளம் வழங்கப்படுவதில்லை போன்ற இரண்டு பிரச்சினைகளைக் கடந்த 6 மாதங்களுக்கு மேலாக பணியாளர்கள் எதிர்நோக்கி வருவதாகக் குறிப்பிட்டனர்.

கோண்டாவில் சாலை முகாமையாளர் எஸ். லோகநாதனுக்கும் பணியாளர்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் குறித்து பலமுறை கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இருந்தும் இன்னமும அதற்கான தீர்வு காணப்படவில்லை எனவும் பணியாளர் தெரிவித்தனர்.

மாதாந்த சம்பளத்தின் ஒரு பகுதியை வழங்குவதற்காக கோண்டாவில் சாலை உத்தியோகத்தர்கள் யாழ். மத்திய பேருந்து நிலையத்துக்கு வந்தபோது நாம் சம்பளப் பணத்தைப் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டோம் என அங்கு நின்ற பணியாளர்கள் சுமார் 30 பேர் தெரிவித்தனர்.

கோண்டாவில் சாலையில் பணியாற்றி வரும் சுமார் 250 பணியாளர்கள் இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பளத்தின் முழுத்தொகையையும் ஒரே தடவையில் குறித்த திகதியில் வழங்குவதற்கு கோண்டாவில் சாலை நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும். இதற்குச் சில தினங்கள் கால அவகாசம் வழங்குகின்றோம். அதற்குள் தீர்வு காணப்படவில்லையாயின் கால வரையறையற்ற பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம் என்று அவர்கள் மேலும் கூறினர். (ம-14)

# ஆன்மிகப் புதுப்பித்தல்; விசேட நிகழ்வுகள்

வவுனியா அமலமரி தியாகிகள் மறையுரைஞர் குழுமமும், யாழ். மறை மாவட்டமும் இணைந்து ''இயேசுவில் மீண்டும் எழுவோம். ஆன்மிகப் புதுப்பித்தல்'' விசேட நிகழ்வுகளை ஜுபிலி ஆண்டினை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முதல் நடத்தி வருகின்றன.

எதிர்வரும் யூலை மாதம் 25 ஆம் திகதி வரை தொடர்ந்து 80 தினங்கள் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுகளில் கருத்தமர்வுகள், அருள் உரைகள், தியானங்கள், மரியாள் பேரணி, கலைநிகழ்வுகள், மறையறிவுப் போட்டிகள், ஆன்மிகப் பயிற்சிகள், நற்கருணைப் பேரணி, குணமாக்கும் வழிபாடுகள், நற்கருணை ஆராதனைகள், உளவள துணை வழிகாட்டல்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (க-313)

# மனிதாபிமான சேவையை வழங்கி வரும் தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலை

கொழும்பு, மே. 10

தெல்லிப்பழை ஆயுள்வேத வைத்தியசாலையின் பாரபட்சமின்றிய மனிதாபிமான மிக்க சேவையினால் அப்பகுதி மக்கள் பெருமளவு நன்மைகள் அடைந்து வருகின்றனர்.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் அன்னதான மண்டபத்துடன் இணைந்து வடபுறத்தில் சிறிய அறையொன்றில் இயங்கும் இந்த வைத்தியசாலையில் வளப் பாற்றாக்குறைகள் பிரச்சினைகளாக இருந்தாலும் வைத்தியர் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் மனிதாபிமானமிக்க சேவையால் நாளாந்தம் சிகிச்சை பெறுவோர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

குறிப்பாகச் சிறுவர் முதல் பெரியோர் வரை வயிற்று நோவு, வாதம் போன்ற நோய்களுக்குக் குறைந்த நாள்களில் சிகிச்சைகள் பயனளிக்கின்றன.

ஆயுள்வேத வைத்திய முறையில் பொதுமக்கள் கொண்ட ஈடுபாடும் நம்பிக்கையும் இதனால் அதிகரித்த வண்ணமே உள்ளன.

பல தரப்பட்ட நோய்களால் அவதிப்படுவோர் தமக்கான சிகிச்சைகளை இந்த வைத்தியசாலையில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கூறப்படுகின்றது. (ம-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெறாத உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மேலும் பின் செல்லக்கூடிய நிலையி

கொழும்பு, மே. 10

தொடரும் நீதிமன்றச் செயற்பாடுகளால் இதுவரையில் வாக்களிப்பு இடம்பெறாதுள்ள உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல் மேலும் பின் செல்லக் கூடுமென தேர்தல்கள் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய இம்மாத இறுதியில் உள்ளூராட்சி நிறுவன தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு அமையமாட்டாதெனவும், அது தொடர்பாக இன்னும் சில காலம் செல்லக் கூடும் என்றும் தேர்தல்கள் ஆணையாளர் அலுவலகத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

முக்கியமாக நூறுக்கு மேற்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான தேர்தல்கள் நடத்தப்படாதுள்ளன. அவற்றுக்கான வேட்பு மனுக்கள் சம்பந்தமான சிக்கல்கள் இன்னமும் நீதிமன்றில் நிலவுகின்றன [illegible] மேலும் கூறியுள் (22)

# வெளிநாடு வாழ் தமிழர் மீதான 'பாஸ்' நடைமுறையை நீக்குக!

## யாழ்.மாவட்டத் தளபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

புலம்பெயர் தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து வர்த்தகச் செயற்பாடுகளையும் தொழில் நிலையங்களையும் ஆரம்பித்து பொருளாதார மேம்பாட்டுக்கான ஊக்குவிப்பு உதவிகளையும் முதலீடுகளையும் மேற்கொள்ள விரும்புகின்றனர். எனவே கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும் புலம்பெயர் தமிழர் மீதான பாதுகாப்பு அமைச்சின் 'பாஸ்' நடைமுறையை நீக்க நடவடிக்கை எடுங்கள்

இவ்வாறு யாழ். மாவட்ட இராணுவத் தளபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட வர்த்தக சமூகத்தினருக்கும் படைத்தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்கவுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் யாழ்.பிரதான வீதி பாதுகாவலன் மண்டபத்தில் நடைபெற்றது. இதில் வர்த்தகர் ஒருவரால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த வர்த்தகர்கள், தொழில் அதிபர்கள் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில் மேலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

அண்மையில் தடை செய்யப்பட்ட ஆழ்கடல் மீன்பிடித் தடையினால் றோலர் தங்கூசி வலைத் தொழில்களை மேற்கொண்டு வந்த 1000 இற்கும் மேற்பட்ட குருநகர்ப் பகுதி தொழிலாளர்கள், வியாபாரிகள், கடலுணவு பதனிடுவோர், நுகர்வோர் பாதிக்கப்பட்டு வருமான இழப்பைச் சந்தித்துள்ளனர். இந்த நடைமுறை மீள் பரிசீலனை செய்யப்பட வேண்டுமெனக் குருநகர் கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

யாழ்ப்பாணத்துக்குப் பல வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் படையெடுக்கின்றன. எமது நிதி வளங்களை வசூலிப்பதில் அவை காட்டும் ஆர்வம் மக்களின் அபிவிருத்தி தொழில் சார் உதவிகளில் காட்டப்படுவதில்லை. பணத்தைத் திரட்டுவதே குறிக்கோளாகக் காணப்படுகிறது. எமது முதலீடுகளைக் கொண்டு எமது பகுதி அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

வெளிநாடு வாழ் தமிழர்கள் யாழ்ப்பாணம் வர வசதியாக அவர்களுக்கான 'பாஸ்' நடைமுறையை பாதுகாப்பு அமைச்சு நீக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

உரிய அமைச்சுக்கள், அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இந்தக் குறைபாடுகளை நீக்க நடவடிக்கை எடுப்பதாக மேஜர் ஜெனரல் ஹத்துருசிங்க தெரிவித்தார். (த-135)



யாழ். பல்கலைக்கழக வரலாற்றுக் கழகத்தின் ஏற்பாட்டின் நாடகவிழா யாழ்.பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. கலாநிதி த.கலாமணியின் அண்ணாவியத்தில் அல்வாய் மனோகரா நாடகசபை வழங்கிய 'சத்தியவான் சாவித்திரி' நாடகத்தின் காட்சி இது. (த)

## இளவாலை மறைக்கோட்ட முதல்வராக யூஜின்

யாழ்ப்பாணம்,மே 10

இளவாலை மறைக்கோட்ட முதல்வராக அருட்திரு. யூஜின் பிரான்சிஸ் அடிகளார் யாழ். ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

லண்டனில் ஆன்மீக குருவாகப் பல வருடங்கள் பணியாற்றிய இவர், தற்போது பண்டத்தரிப்புப் பங்குத் தந்தையாகவும் இளவாலை மறைக்கோட்ட முதல்வராகவும் நியமனம் பெற்றுள்ளார். (த-135)

# பெறுமதியான விக்கிரகங்களை குறி வைக்கும் திருட்டுக் கும்பல்

## கொழும்புத்துறை ஆலயங்களில் கைவரிசை

கொழும்புத்துறை,மே 10

கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள இந்து ஆலயங் களில் பெறுமதிமிக்க விக்கிரகங்கள், சிற்பங்கள் என்பன இனந் தெரியாத நபர்களால் கடந்த வாரம் திருடப்பட்டுள்ளன.

நெடுங்குளம் வீதியில் உள்ள வைரவர் ஆலயத்தில் வைத்து வழிபட்டுவந்த ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான ஐம்பொன்னினாலான வைரவர் விக்கிரகம், கொழும்புத்துறை கிழக்கு சந்திரசேகரப்பிள்ளையார் ஆலய தேரில் பொருத்தப்பட்டிருந்த பெறுமதிமிக்க மரச் சிற்பங்கள் என்பன களவாடப்பட்டுள்ளன.

ஆலயத்தில் வைத்து வழிபடும் விக்கிரகங்கள், கலை அம்சங்கள் பொருந்திய சிற்பங்கள் திருடப்பட்டமை பக்தர்கள் மத்தியில் கவலையையும் விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

திருட்டுப்போன நாள்களில் சந்தேகத்துக்கிடமான புதிய நபர்கள் அந்த இடங்களில் உலாவி வந்ததாகக் கூறப்படுகிறது.

இவ்வாறான அரும்பெரும் கலைப்பொருள்களைத் திருடி வெளியிடங்களுக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதில் மீண்டும் திருடர்களின் கவனம் திரும்பியுள்ளதாக நம்பப்படுகிறது. (த-135)

## அமலமரித் தியாகிகள் முதல்வராக மீண்டும் போல் நட்சத்திரம்

கொழும்புத்துறை, மே 10

அமலமரித் தியாகிகள் சபையின் யாழ்.மாகாண முதல்வராகப் பணியாற்றிய அருட்திரு. ம.போல் நட்சத்திரம் அடிகளார் மேலும் 3 ஆண்டுகளுக்கு மாகாண முதல்வராக மீள் நியமனம் பெற்றுள்ளார்.

உரோமிலுள்ள அமல மரித் தியாகிகள் சபையின் சிரேஷ்ட தலைவரினால் இந்த மீள் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள அ.ம.தி.கள் தொடர்பகத்தில் அவர் தனது அலுவலகத்தைக் கொண்டு தனது பணிகளை கவனித்து வருகின்றார். (த-135)

# யாழ்.ஆயர் தலைமையில் மரியாயின் சேனை பவளவிழா



கொழும்புத்துறை, மே 10

யாழ்.மாவட்ட மரியாயின் சேனையின் பவளவிழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்.பத்திரிசியார் கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் யாழ்.மாவட்ட மரியாயின் சேனை ஆன்மீக இயக்குநர் அருட்திரு. ஜேறோ செல்வநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்திலிருந்து விழா மண்டபத்தை நோக்கி பல நூற்றுக் கணக்கான மரியாயின் சேனையினர் கொடிகளைத் தாங்கியவாறு ஊர்வலமாகச் சென்று யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் மரியாயின் சேனை ஆரம்பிக்கப் பட்டு 75 ஆண்டுகள் நிறைவைக் கொண்டாடும் இந்த நிகழ்வில் மரியாயின் சேனை தேசிய இயக்குநர் அருட்திரு. பொன்சியஸ் அடிகள், யாழ். ஆயர், யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு. ஆர்.எச். சகாயநாயகம் அடிகள், மரியாயின் சேனையின் தேசியத் தலைவர் குயின்ரஸ் பெரேரா, தேசிய சபை உபபொருளாளர் யோன் செபமாலை, பரிகார மாதா கொமிசியத் தலைவி சேவியான், அருட்திரு. லூயிஸ் பொன்னையா அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பவளவிழா மலரை யாழ். மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்திரு ஞானப்பிரகாசம் வெளியிட்டு வைக்க தேசிய இயக்குநர் அருட்திரு. பொன்சியஸ் அடிகள் பெற்றுக் கொண்டார். (த-135)

## கலையரங்கு திறப்பு விழா

வடமராட்சி, மே 10

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாகக் கட்டி முடிக்கப்பட்ட கலை அரங்கு திறப்புவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு கலை அரங்கைத் திறந்து வைப்பார். (த-236-319)

# பண்டத்தரிப்பு பற்றிமா அன்னை யாத்திரைத் தலப் பெருவிழா

பண்டத்தரிப்பு, மே 10

பண்டத்தரிப்புப் பற்றிமா அன்னை யாத்திரைத் தலத்தின் வருடாந்தப் பெருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருவிழா நவநாள் வழிபாடுகள் கடந்த 4 ஆம் திகதி ஆரம்பமாகித் தினமும் மாலை 4.30 மணிக்கு நடைபெற்று வருகின்றன.

நாளை மறுதினம் வியாழக்கிழமை நற்கருணை விழாத் திருப்பலி மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். அதன்பின் திருச் சொரூபப் பவனியும் நடை பெறும்.

திருநாளன்று முதல் திருப்பலி காலை 5.30 மணிக்கும் திருவிழாத் திருப்பலி காலை 6.30 மணிக்கும் நடைபெறுவதுடன் நண்பகல் 12 மணிக்கு நோயாளர்களுக்கான திருப்பலியும் மாலை 4 மணிக்கு மாலைத் திருப்பலியும் நடைபெறும் என பங்குத்தந்தை அருட்திரு. ச.யூஜின் பிரான்சிஸ் அடிகள் அறிவித்துள்ளார். (த-130)

# கொழும்புத்துறை கிழக்குக்கு குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு

நெடுங்குளம் பகுதியில் அமைக்கப்படவுள்ள குழாய்க் கிணறு மூலம் கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நெடுங்குளத்தில் நன்னீர் ஊற்று உள்ள பகுதியில் குழாய்க் கிணறு ஒன்றை விரைவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழாய்க் கிணறு மூலம் குடிதண்ணீரைத் தாங்கியில் ஏற்றி பின்னர் நிலத்தடிக் குழாய்கள் ஊடாக அப்பகுதிப் பொதுமக்களின் குடிதண்ணீர் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கொழும்புத்துறை கிழக்குப் பகுதிக்கும் இந்தக் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறவுள்ளது. (த-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர அபிவிருத்தியில் பாகுபாடு காட்ட வேண்டாம்

## முதல்வரிடம் உறுப்பினர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 10

யாழ். மாநகரப் பகுதியின் அபிவிருத்தியில் பாகுபாடு காட்ட வேண்டாம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் கொர்ணலில் மாநகர முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற மாநகர சபையின் மாதாந்தப் பொதுக் கூட்டத்திலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ். மாநகர சபைக்குட்பட்ட துண்டி இந்து மயானத்தைப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் நீண்ட காலமாகக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். ஆயினும் இதுவரை மயானப் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. மயானத்துக்குச் சடலங்களைத் தகனம் செய்யச் செல்வோரும் அஸ்தியைக் கரைத்துக் கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோரும் அங்கு தண்ணீர் வசதி இல்லாமையால் சிரமப்படுகின்றனர்.

அத்துடன் கொழும்புத்துறை வளன்புரம் வீதிகள் பல வருட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் சேதமடைந்து காணப்படுகின்றன.

இந்தப் பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் வீதிகள் சேதமடைந்துள்ளமை காரணமாகப் பெரும் சிரமப்படுகின்றனர்.

இலந்தைக்குளம் வீதியில் புளியடிச் சந்தியில் உடைந்த பாலத்தைப் புனரமைப்பதற்கு நிதி ஒதுக்கியும் புனரமைப்புப் பணிகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே மாநகர அபிவிருத்தியில் முதல்வர் பாகுபாடு காட்டக்கூடாது- என்றார். (த-26)

# மக்களிடம் ஏன் இந்தக் கோபம்?

தென்மராட்சி, மே 10

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்துக்குச் செல்லும் பொது மக்கள் அங்குள்ள உத்தியோகத்தர்களின் கோபத்துக்கு உள்ளாக வேண்டிய் நிலை ஏற்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த 'ஏ' தர அஞ்சல் அலுவலகக் கருமபீடத்தில் இரண்டு உத்தியோகத்தர்களே கடமையாற்றுவதாகவும் பல்வேறு தேவைகளுக்காக அஞ்சல் அலுவலகத்துக்குச் செல்லும் பொது மக்கள் நீண்ட நேரம் தமது கருமங்களுக்காகக் காத்திருக்க வேண்டியுள்ளதாகவும் அவசரப்படுவோர் உத்தியோகத்தர்களின் கடும் கோபத்துக்கு ஆளாக வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கருமபீடத்தில் கடமையாற்றுவோர் முத்திரை விற்பனை, பதிவு அஞ்சல், பொதுசன மாதாந்த உதவிப் பண விநியோகம், பொதி பாரமெடுத்தல் உட்பட ஏனைய வேலைகளுடன் அங்கு இயங்கும் தபால் கடைமையையும் கவனிக்க வேண்டியுள்ளது.

இதனால் ஏற்படும் வேலைப் பளுவினால் அங்கு செல்லும் பொதுமக்கள் இந்த உத்தியோகத்தர்களின் கோபத்துக்கு ஆளாக வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(த-207)

# மணியந்தோட்டத்தில் குடியமர்ந்த மக்கள் கூட்டுறவுச் சங்கக் கிளையின்றி அவதி

யாழ்ப்பாணம், மே 10

மணியந்தோட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள பகுதியில் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை இதுவரை அமைக்கப்படாமையால் அந்த மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மக்கள் உச்சிவெயிலையும் பாராது கூட்டுறவுக் கிளைகளை நாடி அரியாலைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மணியந்தோட்டப் பகுதியில் தற்போது அதிக அளவான குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இந்தக் குடும்பங்கள் அரியாலை மாம்பழம் சந்திக்கு அருகிலுள்ள கூட்டுறவுக் கிளைக்கே தமக்கான உலர் உணவுப் பொருள்களைப் பெறுவதற்குச் செல்ல வேண்டியுள்ளது.

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள இந்தப் பகுதியில் கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றை அமைப்பதற்கு அதிகாரிகள் இதுவரை உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனவும், இதனால் தாம் பல மைல்கள் தூரம் சென்று தமது தேவைகளை நிறைவேற்ற வேண்டியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். (த-26)

# யாழ். பொது நூலகத்தின் உணவகம் மூடப்பட்டது

## ஊழியர், வாசகர் பெரும் சிரமம்

கொழும்புத்துறை, மே 10

யாழ். பொதுசன நூலக வளாகத்திலுள்ள சிற்றுண்டிச் சாலை கடந்த சில மாதங்களாக இயங்காமையினால் நூல் நிலையத்துக்குச் செல்லும் வாசகர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இங்கு இயங்கி வந்த சிற்றுண்டிச்சாலை இரு மாதங்களுக்கு முன்னர் மூடப்பட்டு வடமாகாண சபையின் கேட்போர் கூடமாகப் பயன்படுத்தப்பட்டுவருகிறது.

யாழ். பொதுசன நூலகத்துக்கு பாடசாலை மாணவர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள், வெளியூர், வெளிநாட்டு மக்கள் எனத் தினமும் பல நூற்றுக்கணக்கானோர் சென்று வரும் இடத்தில் சிற்றுண்டிச்சாலை இயங்குவது மக்களுக்குப் பயன் உள்ளதாக அமையும் எனச் சுட்டிக் காட்டப்படுகிறது. (த-135)

# 'நல்லைக் குமரன்' மலருக்கு ஆக்கங்களை அனுப்பலாம்

யாழ்ப்பாணம், மே 10

யாழ்.மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்படும் 19 ஆவது 'நல்லைக்குமரன்' மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

நல்லைக் கந்தனின் வருடாந்த மஹோற்சவ காலத்தில் வெளியிடப்படும் இந்த மலருக்காக துறைசார்ந்த அறிஞர்கள், கல்விமான்கள், சைவப்பெரியார்கள் ஆகியோரிடமிருந்து தரமான ஆக்கங்கள், ஆய்வுக் கட்டுரைகள், கவிதைகள் போன்றன ஏதிர்பார்க்கப்படுகின்றன.

ஆர்வலர்கள் ஆக்கீங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாகத் தலைவர், சைவசமய விவகாரக் குழு, மாநகர சபை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நல்லைக்குமரன் மலருக்கான ஆக்கங்கள் 2011 எனக்குறிப்பிட்டு அனுப்பிவைக்குமாறு யாழ். மாநகராட்சி மன்றச் சைவசமய விவகாரக் குழுத் தலைவர் மு.செ.சரவணபவ அறிவித்துள்ளார். (த-313)

## சமூக முன்னேற்றத்துக்காக...



நல்ல முயற்சி: வல்வெட்டித்துறையைச் சேர்ந்த பாலராஜா தனது பிள்ளைகளான தனுகினி, தனுசன் ஆகியோரின் அன்பளிப்பாகத் தொலைநகல் இயந்திரம் ஒன்றை வல்வெட்டித்துறை ஆதார வைத்தியசாலையின் பாவனைக்கென வழங்கினார். வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி ரி.விஸ்வேதிதன் அதனைப் பெற்றுக்கொள்கிறார். (த)

# கதிர்காமம் பாதயாத்திரை ஆரம்பம்



கதிர்காம ஆடித் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோயிலிலிருந்து பாதயாத்திரை நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை ஆரம்பமானது.

சந்நிதி கோயிலில் இடம்பெற்ற விசேட பூசைகளைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து சி.மோகனதாஸ் சுவாமிகள் வேல் ஒன்றைப் பாதயாத்திரைக் குழுத் தலைவர் யோகி ஸ்ரீ சிவாச் சுவாமி சிவகுமாரானந்தா வழங்கி பாதயாத்திரையை ஆரம்பித்து வைத்தார்.

அகில இலங்கைக் கதிர்காம வேல் முருகக் கந்தவேள் பாதயாத்திரைச் சங்கம் மேற்கொண்டுள்ள இந்தப் பாதயாத்திரை வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயில் உள்ளிட்ட வன்னி ஊடாக கிழக்கு மாகாணம் சென்று அங்கிருந்து கதிர்காம வேலுடன் கதிர்காமத்தைச் சென்றடையும்.

இந்தக் குழுவினருக்கு முன்னதாகக் கடந்த வெள்ளிக்கிழமையும் மற்றொரு குழு செல்வச் சந்நிதியிலிருந்து கதிர்காமத்துக்குப் பாதயாத்திரை ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (த-236)

# மீன்வளம் குன்றியுள்ளதாக கவலை தெரிவிப்பு

வடமராட்சி, மே 10

வடக்குக் கடற் பிரதேசத்தில் கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக மீன்வளம் குன்றியுள்ளதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை ஆகிய மாவட்ட கடற்பிரதேசங்களில் மீன் வளம் குன்றியுள்ளதால் மீனவர்களின் வருமானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது இழுவைப்படகுகள் போன்ற உயர்தரப் படகுகளைப் பாவித்து மீன்பிடிப்பது [illegible] குறிப்பிடத்தக்கது. (ம-236)

# மாதர் அபிவிருத்திச் சங்கத்துக்கு புதிய கட்டடம்

கொழும்புத்துறை மேற்கில் மாதர் அபிவிருத்திச் சங்கத்துக்குத் தனியான கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டடம் அமைப்பதற்கு ஏற்கனவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.இந்த நிதியைக் கொண்டு கட்டடத்தை அமைப்பதற்கான காணிவசதி இதுவரை கிடைக்கவில்லை எனவும், இதற்கெனக் காணி ஒன்றைப் பெறும் முயற்சியில் மாதர் சங்கம் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-26)

# விவசாய கொள்வனவு - விற்பனை நிலையம் கட்டுவனில் திறப்பு

யாழ். மாவட்டத் தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் புதிய விவசாயம் கொள்வனவு விற்பனை நிலையத்தை கட்டுவனில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 6 ஆம் திகதி திறந்துவைத்தார்.

யாழ்.மாவட்ட தேசவள விவசாயிகள் சம்மேளனத்தின் தலைவர் சி.பொ.வ.மா.க. முதலியார் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

வரவேற்புரையை சம்மேளனத்தின் செயலாளர் செ.திருச்செந்தூர்நாதனும், ஆசியுரையை கட்டுடை ஞானவைரவர் ஆலயப் பிரதமகுரு வை. ஜீவநாதக் குருக்களும் நிகழ்த்தினார்கள்.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், விவசாயத் திணைக்கள விவசாயப் பிரதிப் பணிப்பாளர் எஸ். சிவகுமார், யாழ்.செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.மகேஸ்வரன், சி.ஐ.சி. விவசாய நிறுவன ஆலோசகர் சி.சற்குருநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல்; வவுனியாவில் மக்கள் மத்தியில் அதிர்ச்சி

வவுனியா குருமன்காட்டில் உள்ள பாடசாலை ஆசிரியர் ஒருவரின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

வவுனியா, மன்னார் வீதியில் நகரசபை விடுதிப் பகுதியில் அமைந்துள்ள விவுலானந்தாக் கல்லூரியின் ஆசிரியராகக் கடமையாற்றிவரும் வீ.ரங்கநாதன் என்பவரின் வீட்டின் மீதே இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டுள்ளது.

வீட்டின் மதிலுக்கு மேலாக வீசப்பட்ட கைக்குண்டு அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளின் மீது வீழ்ந்து வெடித்துள்ளது. இதனால் மோட்டார் சைக்கிளும் வீட்டு யன்னல்களும் சேதமடைந்துள்ளன.

பாடசாலையில் இடம்பெற்ற சம்பவம் ஒன்றுக்காக இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இந்தத் தாக்குதல் சம்பவத்தில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த ஆசிரியர் தமது வீட்டின் வாயிற்கதவைத் திறந்துவிட்டு வீட்டுக்குள் செல்லும் போது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கைக்குண்டுத் தாக்குதல் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## வழிகாட்டும் செயலமர்வு...



ஊடக காவலர்கள்: இலங்கை இதழியல் கல்லூரியின் ஏற்பாட்டில் வடக்கினைச் சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு வவுனியாவில் நடைபெற்றபோது அதில் கலந்துகொண்ட ஊடகவியலாளர்களைப் படத்தில் காணலாம். (601)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



(4003)(39-19-21)

கடந்த 10.04.2011 அன்று சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

அமரர் நாகராசா கோணேஸ்வரன்

J.P,B.Sc, MSW, SLAS

(உதவி அரசாங்க அதிபர்-புதுக்குடியிருப்பு)

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் அளவெட்டி தெற்கு கோணேஸ் மற்ஸ் அக்கடமியில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கோணேஸ் மற்ஸ் அக்கடமி,
அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

குடும்பத்தினர்
கோணேஸ் மற்ஸ் அக்கடமி குழுமம்.


## வாழ்வாதாரத் திட்டங்கள்

பூநகரி, மே 10

கடந்த வருடம் கிளிநொச்சி மாவட்டம் பூநகரி முட்கொம்பன் கிராமத்தில் மீள்குடியேறிய 300இக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குரிய வாழ்வாதாரத் திட்டங்களை யூ.என்.டி.பி. நிறுவனம் வழங்கியதாகத் தெரியவருகின்றது.

இந்தத் திட்டத்தின் ஊடாகப் பசு வளர்ப்பு, வியாபாரம், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, விவசாயம் என்பவற்றுக்கு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்தகைய உதவிகள் போரினால் எல்லாவற்றையும் இழந்த மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கு உதவும் எனப் பலரும் தெரிவித்தனர். (க-406)


**SHAMROCK**
சுச்சமோட்டை, யாழ்.

A/L 2013 & – 12

- Geo. – S.ஜீன்சியா B.A.
- Poli.Sc. – S.செந்தூரன் B.A.
- Log. – S.றொகேசியன் B.A.
- Chris., Civil. – A.மல்லிகா B.A.
- Tamil – S.சிவா B.A.
- Gen.Eng. – M.Kingstan B.A.
- Econ. – V.ஞானவேல் B.B.A.

### தேவை

வாய்ப்பாட்டு, வயலின், நடனம், ஓகன் ஆகிய வகுப்புகள் நடத்துவதற்கு வீடு வாடகைக்குத் தேவை. பிறவுண் வீதி, கந்தர்மடம் வீதி, நாவலர் வீதி ஆகிய பகுதிகளில் விரும்பத்தக்கது. பகுதியாக இருப்பினும் பரவாயில்லை.

தொ.பே.: 0774050339

### காணி விற்பனைக்கு

சுண்டுக்குளி அன்னம்மாள் கோயிலுக்கு அண்மையில் சுற்றுமதிலுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0773727166

### தவறிவிட்டது

பஞ்சரத்தினம் குமரேஸ் என்பவரது தேசிய அ.அட்டை (842271509V) 07.05.2011 அன்று கோண்டாவில் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 0773630748 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



திருமதி
நடராசா சின்னத்தங்கம்

தோற்றம்
12.06.1934

மறைவு
10.04.2011

எமதருமை அம்மாவே!
எத்தனை நாள்கள் சென்றாலும்
உங்கள் பசுமையான நினைவுகள்
என்றும் எம்மை விட்டு அகலாது.

கந்தரோடை,
சுன்னாகம்.
(4005)

என்றும் நினைவுடன்:
குடும்பத்தினர்.


# திருக்கேதீஸ்வரநாதர் பெருந்திருவிழா கொடியேறிச் சிறப்பாக ஆரம்பம்

மன்னார், மே 10

சரித்திரப் பிரசித்திபெற்ற நாயன்மாரால் பதிகம் பாடிப் போற்றப்பட்ட திருக்கேதீஸ்வரநாதர் திருக்கோயிலின் இந்த ஆண்டுக்கான பெருந்திருவிழா கடந்த 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றப் பெருவிழாவுடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து திருவிழாக்கள் நடைபெற்று 16ஆம் திகதி திங்கட்கிழமை அன்று திருத்தேர்களில் சுவாமி வீதியுலா வருவார். அடுத்தநாள் செவ்வாய்க்கிழமை காலை தூய பாலாவித் திருக்குளத்தில் சுவாமி தீர்த்தமாடுவார். அன்றிரவு கொடியிறக்கமும் அடுத்தநாள் புதன்கிழமை மௌனத் திருவிழாவும் வியாழக்கிழமை இரவு சண்டேஸ்வரர் திருவிழாவும் சிறப்புடன் நிகழவுள்ளன.

இந்தத் திருக்கோயில் பல்லாயிரம் ஆண்டு வரலாற்றுப் பெருமை மிகுந்தது. திருஞான சம்பந்தராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் பதிகம்பாடிப் போற்றப்பட்ட திருத்தலம். அத்துடன் திருநாவுக்கரசு நாயனராலும் சேக்கிழார் பெருமானாலும் புகழ்ந்தேத்தப்பட்ட திருவிடம்.

1990இல் நிகழ்ந்த போரினால் இந்த ஆலயத்துக்கும் இடர் ஏற்பட்டது. பதின்மூன்று ஆண்டுகள் பூசை நிகழ்வுகள் தடைப்பட்டன. மீண்டும் புதுமெருகுடன் திருக்கொடியேற்றப் பெருவிழாவும் ஐந்து தேர்கள் திருவீதியுலா வரும் காட்சியும் காணக்கிட்டுவது நாம் செய்த புண்ணியம் என்றே கூற வேண்டும்.

பெருந்திருவிழாவின்போது 10 நாள்களுக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படுவதுடன் போக்குவரத்து ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆலயத்துக்கு வருகைதரும் அடியார்கள் பால், தயிர், பழவகை, பூசைக்குரிய பொருள்கள் ஆகியவற்றை எடுத்து வருமாறு ஆலய நிர்வாகத்தின் வேண்டுகோள் விடுத்துள்ளனர். அத்துடன் சோழப் பேரரசர்களால் அமைக்கப்பட்ட இரு பெரும் கால்வாய்களும் இன்று காடுமண்டி உள்ளதால் அவற்றைச் செப்பனிடுவதற்கு உதவுமாறும் கேட்டுள்ளனர். (ம)


## ஜனஜய லொத்தர்

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

வாரம் 225 | சீட்டிழுப்புத் திகதி 08.05.2011

வெற்றி இலக்கங்கள்: 06 47 49 53

சுப்பர் இலக்கம்: 01

சுப்பர் பரிசுப்பொதி — ரூ. 20,050,220/=

| வெற்றி இல. | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 1 இலக்கத்துக்கும் | 108174 | ரூ. 20/= | ரூ. 2,163,480 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 1 இலக்கத்துக்கும் | 9958 | ரூ. 40/= | ரூ. 398,320 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 2 இலக்கங்களுக்கும் | 8432 | ரூ. 100/= | ரூ. 843,200 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 2 இலக்கங்களுக்கும் | 749 | ரூ. 200/= | ரூ. 149,800 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 3 இலக்கங்களுக்கும் | 199 | ரூ. 1,500/= | ரூ. 298,500 |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 3 இலக்கங்களுக்கும் | 16 | ரூ. 3,000/= | ரூ. 48,000 |
| சுப்பர் இலக்கம் தவிர்ந்த எந்த 4 இலக்கங்களுக்கும் | - | ரூ. 1,000,000/= | ரூ. - |
| சுப்பர் இலக்கத்துடன் எந்த 4 இலக்கங்களுக்கும் | 1 | ரூ. 20,050,220/= | ரூ. 20,050,220 |
| மொத்த எண்ணிக்கை | 127529 | | ரூ. 23,951,520/= |

வியாழக்கிழமை சுப்பர் பரிசுப்பொதி ரூ. 5,000,000/= உட்பட வரிவிலக்கற்ற புதிய மோட்டார் வாகனமும் அதன் மிகுதிப்பணமும்

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356. கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02

தொலைபேசி: 2 332 546 - 47 தொலைநகல்: 2 333 545

Website: www.dlb.lk

## கோழிக்குஞ்சு விநியோகம்

தடுப்பு மருந்து போடப்பட்ட பிறிமா கொம்பனி உத்தரவாதத்துடன் தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (80/=) 12.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

- ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,

தொ.பே இல:- 021 222 6944.

## கண்ணீர்க் காணிக்கை



பிரம்ம ஸ்ரீ யோ. பிரபாகரக்குருக்கள்

*(பிரபா ஐயர்)*

எமது ஆலய வளர்ச்சிக்காக ஒரு நூற்றாண்டு காலம் அயராது உழைத்த பிரம்ம ஸ்ரீ யோகீஸ்வரக் குருக்களின் பரம்பரையில் வந்து உதித்து இன்று வரை எமது ஆலய நித்திய பூசை, விசேட விழாக்கள், பெருந்திருவிழா போன்றனவற்றின் நிர்வாகக் கடமைகளை ஆற்றி வந்த பிரம்ம ஸ்ரீ யோ. பிரபாகரக்குருக்கள் அவர்கள் இறைவனடி சேர்ந்ததையிட்டு அதிர்வடைந்திருக்கும் நாம் அவரின் ஆத்மா பள்ளம்புல முருகனின் அடியினைச் சென்றடையப் பிரார்த்திக்கின்றோம்.

அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பள்ளம்புல முருகமூர்த்தி ஆலயம்,*
*சரவணை, வேலணை.*

(4010)

அறங்காவலர் சபையும்,
அடியார்களும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் சிறுவர் பாதுகாப்புக் குழுக்கள்

வவுனியா, மே 10

வவுனியா மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் மாணவர்களின் நலனைப் பேணும் நோக்கில் பாடசாலை மட்டத்தில் சிறுவர்கள் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளதாக வவுனியா மாவட்ட தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் த.செல்வகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பான முதலாவது கலந்துரையாடல் கடந்த வாரம் வவுனியா வடக்கு கல்வி வலயத்தில் நடைபெற்று, இதில் நெடுங்கேணி, கனகராயன்குளம், புளியங்குளம் மற்றும் ஒலுமடு பிரதேசங்களைச் சேர்ந்த 40 பாடசாலை அதிபர்கள் கலந்து கொண்டனர். மரக்காரப்பளை கோட்டக் கல்விப் பணிமனை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் பிரதானமாக பாடசாலை மட்டத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சிறுவர்களின் வரவு, இடை விலகல், சிறுவர் பாதுகாப்புப் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. அத்துடன் ஒவ்வொரு பாடசாலையிலும் சிறுவர் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதெனவும் அவற்றை மேற்பார்வை செய்வதோடு மேலதிக வழிகாட்டல்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட அலுவலகம் வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடக் கூடிய விடயமாகும்.

இந்தக் கலந்துரையாடலில், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் இணைப்பாளர்கள், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோர் கலந்து கொண்டு இந்தத் திட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப் படுத்துவது தொடர்பில் தமது கருத்துக்களை வழங்கினர். (க-501)

# போதையில் வீதியில் தள்ளாட்டம்; இருவரும் செலுத்தினர் அபராதம்!

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சியில் மதுபோதையில் இடையூறு விளைவித்த இருவருக்கு கிளிநொச்சி நீதிமன்றத்தால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியை அண்டிய பகுதிகளில் இருவர் மதுபோதையுடன் வீதியில் சென்றவர்களுக்கு இடையூறு விளைவித்துக் கொண்டிருந்தனர். இதை அவதானித்த கிளிநொச்சிப் பொலிஸார் இவர்கள் இருவரையும் கைது செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தினர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் நீதிமன்றத்தில் நடைபெற்றன. பின்னர் இவர்கள் இருவரையும் தலா ஆயிரத்து ஐநூறு ரூபா செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் ஒருமாத கால சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (க-6)

# சிறுபோக நெற்செய்கை

கிளிநொச்சி மாவட்டம் உருத்திரபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் சிறுபோக நெற்செய்கையில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர். இரணைமடுக் குளத்து நீரை நம்பியே இந்தப் பகுதியில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-406)

# கசிப்பு வைத்திருந்த நபருக்கு 55 ஆயிரம் ரூபா அபராதம்

## கிளிநொச்சி நீதிமன்றம் விதித்தது

கிளிநொச்சி, மே 10

கிளிநொச்சி வட்டக்கச்சிப் பகுதியில் ஐந்து போத்தல் கசிப்பு தயாரிப்பதற்கான கோடா மற்றும் கால் போத்தல் கசிப்பு என்பவற்றை வைத்திருந்த ஒருவருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, வட்டக்கச்சிப் பகுதியில் கசிப்பு தயாரிக்கப் பயன்படுத்தப்படும் ஐந்து போத்தல் கோடா மற்றும் கால் போத்தல் கசிப்பு என்பவற்றை வைத்திருந்த நபர் ஒருவர் வட்டக்கச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

இந்த வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மாவட்ட நீதிபதி குறித்த நபருக்கு 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்துமாறும் தவறும் பட்சத்தில் ஐந்து மாதம் சிறை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளார். (க-6)

## மனமுவந்த சேவை...



சேவைகள் தொடரட்டும்: ஏஏஏ மூவிஸ் இன்ரநாஷனல் திரைப்பட நிறுவனத்தின் தலைவர் க.செவ்வேள் முல்லைத்தீவு அளம்பில் அ.த.க.பாடசாலையின் சிறுவர் பூங்காவைத் திறந்து வைக்கிறார்.

# டாக்டர் ஜெயலத்தின் சேவை அளப்பரியது

## பிரிவுபசார வைபவத்தில் வைத்திய நிபுணர் சிவதாஸ்

வவுனியா, மே 10

கடந்த யுத்த அனர்த்த காலங்களில் வவுனியா வைத்தியசாலையின் உளநலப் பிரிவில் பல மக்களுக்குச் சிகிச்சை வழங்கிய வைத்திய அதிகாரி டாக்டர் ஜெயலத்தின் சேவை மிகவும் அளப்பரிய ஒன்றாகும். இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பொது வைத்தியசாலையின் உளநல சிகிச்சை வைத்திய நிபுணர் எஸ்.சிவதாஸ்.

கடந்த இரு வருடங்களுக்கும் மேலாக உளநல சிகிச்சை நிலையத்தில் வைத்திய அதிகாரியாகக் கடமைபுரிந்த டாக்டர் ஜே.கே.ஜெயலத் அவர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்வதை அடுத்து ஒழுங்கு செய்யப்பட்ட பிரிவுபசார விழா கடந்த வாரம் உளநோய் சிகிச்சை விடுதியில் நடைபெற்றது. அங்கு உரை நிகழ்த்தியபோதே வைத்திய நிபுணர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எமது பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றவர்கள் மிகவும் அதிகம். வேறு மாவட்டங்களில் இருந்து கூட எமது சிகிச்சையை எதிர்பார்த்து மக்கள் ஆர்வத்துடன் வருகிறார்கள். எவ்வளவு வேலைப்பளு இருப்பினும் அன்பாக அவர்களுடன் அணுகி சிறந்த சிகிச்சையை வழங்கிய வைத்திய அதிகாரியை எமது பிரிவினால் என்றுமே மறக்க முடியாது.

அத்துடன் வைத்திய சிகிச்சையைத் தவிரவும் எமது பிரிவில் இரவு பகலாக பல முன்னேற்றமான செயற்பாடுகளில் ஈடுபட்ட வைத்திய அதிகாரியின் சேவை மகத்தானது. அவர் இன்னமும் பல விடயங்களில் தேர்ச்சி பெற்று எமது வைத்தியசாலைக்கு ஒரு சிரேஷ்ட உளநல வைத்திய நிபுணராக வரவேண்டும் என்பது எமது விருப்பம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட உளநலப் பிரிவில் கடமைபுரியும் சிரேஷ்ட வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை தாதிய உத்தியோகத்தர்கள், உளவளத் துணையாளர்கள் எனப் பலர் இவரது சேவையை பாராட்டி உரை நிகழ்த்தியமையும் இங்கு பிரதானமான ஒன்றாகும். (க-501)

# வவுனியாவில் ஊடகவியலாளருக்கு வழிகாட்டல் செயலமர்வு

வவுனியா, மே 10

வடக்கைச் சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இலங்கை இதழியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மோதலுக்குப் பின்னரான விடயங்களைப் பற்றி அறிக்கையிடுவது தொடர்பாக வடக்கைச் சேர்ந்த பிரதேச ஊடகவியலாளர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை முதல் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை வவுனியா றொக்சைட் விடுதியில் இடம்பெற்றது.

இதில் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 20 ஊடகவியலாளர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி செயலமர்வில் விரிவுரையாளர்களாக இலங்கை இதழியல் கல்லூரியின் விரிவுரையாளர்களும், ஊடகவியலாளர்களான லசந்த ருகுணுகே, அயுப் ஆகியோரும் கலந்து கொண்டு விரிவுரைகளை நடத்தினர்.

இறுதியில், கலந்துகொண்ட ஊடகவியலாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க-601)

# வன்னி மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம்; மகாசிவத்தின் கருத்து வேதனையளிப்பதாகத் தகவல்

வவுனியா, மே 10

வன்னி மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் எழுந்தமானத்தில் இடம்பெற்றுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த.மகாசிவம் ஊடகங்கள் வாயிலாகக் கூறியிருப்பது தமக்கு மனவேதனையைக் கொடுத்ததாகப் பாதிக்கப்பட்ட வன்னி ஆசிரியர்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

வன்னியிலிருந்து வருடாந்த இடமாற்றத்துக்காக விண்ணப்பித்து பல நியதிகளின் அடிப்படையில் இடமாற்றச் சபையின் அங்கீகாரத்துடன் சுமார் 398 ஆசிரியர்கள் யாழ்ப்பாணம் மற்றும் வவுனியா மாவட்டங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர். இவர்கள் பல்வேறு அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த மாதம் 5 ஆம் திகதி முதல் புதிய பாடசாலைகளில் கடமை ஏற்றுள்ளனர்.

இந்த நிலையில் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் இவ்வாறு தெரிவித்துள்ளமை மனவருத்தத்தைக் கொடுக்கின்றது. குறிப்பாக இந்த ஆசிரியர்கள் பல வருடங்களாக அடிப்படை வசதிகளின்றிப் பின் தங்கிய பகுதிகளில் தமது அர்ப்பணிப்பான சேவையை வழங்கியுள்ளனர். இறுதிப் போரின்போது உடைமைகள் இழந்து, உறவுகளின் உயிர்களை இழந்து சொல்லொணாத் துயரங்களுக்கு மத்தியில் மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு வரும் ஆசிரியர்களின் மனங்களை இந்த அறிக்கை பாதிப்பதாகவேயுள்ளது.

வன்னி மாவட்டங்களிலிருந்து பிற இடங்களுக்கு இடமாற்றம் கோரிய ஆசிரியர்களுக்கான இடமாற்றச் சபை திருகோணமலையில் கடந்த நவம்பர் மாதம் 20 ஆம் திகதி கூடியது.

இந்தச் சபையில் இலங்கை ஆசிரியர் சங்கம், தமிழர் ஆசிரியர் சங்கம் என்பவற்றின் தலா இரண்டு பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர். குறிப்பாக தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் த.மகாசிவம், வவுனியா மாவட்டச் செயலாளர் அ.உதயகுமார் ஆகியோர் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக இடம் பெற்றிருந்தனர்.

எனவே எழுந்தமானமாகக் கருத்துக்களைக் கூறி சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்தாது கல்விச் சமூகத்தைச் சரியான பாதையில் வழிகாட்ட முன்னிற்க வேண்டுமெனவும் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். (க-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மக்கள் விவசாயத்தில் ஈடுபடத் தடை; வாழைச்சேனையில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிப்பு

மட்டக்களப்பு,மே10

மட்டக்களப்பு, கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் முஸ்லிம் விவசாயிகள் குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு தடைவிதித்து வருவதைக் கண்டித்தும் மீண்டும் இந்தக் கிராமங்களை ஓட்டமாவடி பிரதேச செயலகத்துடன் இணைத்துத் தருமாறு கோரியும் நேற்று திங்கட்கிழமை அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கிரான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளான வாகனேரி வடமுனை, ஊத்துச்சேனை, கல்கிசை, புனானை ஆகிய பிரதேச வயல் நிலங்களில் முஸ்லிம் விவசாயிகள் குடியேறி விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு கிரான் பிரதேச செயலக அதிகாரிகள் தடைவிதித்து வருகின்றனர். இதனைக் கண்டித்தும் மீண்டும் இந்தக் கிராமங்களை ஓட்டமாவடி பிரதேச செயலகத்துடன் இணைத்து தருமாறு கோரியும் வாழைச்சேனை மற்றும் ஓட்டமாவடி பிரதேசங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.




பாடசாலைகள், வர்த்தக நிலையங்கள், நிறுவனங்கள், பொது நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு, ஆங்காங்கே கறுப்புக்கொடிகளும் கட்டப்பட்டுக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

காணியைப் பாதுகாப்போம் என்ற தலைப்பிலான துண்டுப் பிரசுரங்கள் காணிகளைப் பாதுகாக்கும் அமைப்பினால் வெளியிடப்பட்டுள்ளது. அதில் பரம்பரையாகவுள்ள காணிகளை அபகரிப்பதை நிறுத்துமாறு கோரியும் இதனை அரச தலைவர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எடுத்துச் சொல்வோம்.இந்த விடயத்தில் ஜனாதிபதி தலையிட்டு நீதியைப் பெற்றுத்தரக் கோரி திட்டமிட்ட காணி அபகரிப்பிற்கு எமது பலமான எதிர்ப்பைத் தெரிவிக்க அமைதியான முறையில் ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறும் அந்தத்துண்டுப்பிரசுரத்தில் தெரிவிக்கப்பட்டது. (ச)

# காணி உறுதி வழங்கப்படவில்லை; மக்கள் பெரும் அசௌகரியம்

நுவரெலியா,மே10

நுவரெலியா மாவட்டத்தில் காணி உரிமையாளர்கள் பலர் காணி உறுதிப்பத்திரம் இல்லாமல் தங்களுடைய வீடு, கடை என்பவற்றை மீளப் புனரமைக்கவும் முடியாமல் பாதிப்படைந்து வருகின்றனர்.

தற்போதுள்ள காணி உறுதிகளான 'அனுபத்த' எனும் 99 வருட காணி உறுதிகள் உட்பட பல்வேறு வகையான காணிகளை மீள் கொள்வனவு செய்தோர் அரச அதிபர் அலுவலகத்தில் பதிவுசெய்து கொண்டாலும் பல ஆண்டுகளாக இதற்கான காணி உறுதிகள் மட்டும் நுவரெலியா மாவட்ட காணிச் சொந்தக்காரர்களுக்குப் கிடைக்காமல் உள்ளன.

காணி இல்லாதோருக்கு புதிய காணிகளை வழங்கும் நடவடிக்கையைப் போல நீண்டகாலமாக உரிய பதிவுகளுடன் காணிகளைக் கொள்வனவு செய்தோருக்கு காணி உறுதிகள் வழங்கப்படவில்லையென பாதிக்கப்பட்டவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தநிலையில் நுவரெலியா மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டுமென சம்பந்தப்பட்டவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். காணி உறுதிகளைப்பெற காணி அமைச்சு, ஜனாதிபதி ஆகியோருடன் தொடர்பு கொண்டு காணிகளைக் கொள்வனவு செய்தோருக்கான அரச காணி உறுதிகளைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இந்தநிலையில் கிராம சேவையாளர் அலுவலகங்கள் ஊடாக தகவல்கள் தற்போது பெறப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.(ச)

# 20 வீதிகளுக்கு மின்சாரம்

கோறளைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவின் கிண்ணயடி, சுங்காங்கேனி ஆகிய கிராமங்க ளின் 20 வீதிகளுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மின்சாரம் வழங்கி வைக்கப்பட்டது.

அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சராக எம்.எஸ்.எஸ். அமீர் அலி இருந்த போது ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத் திட்டத்தை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைரின் நிதியொதுக்கீட்டில் பூரணப்படுத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. (ச)

# யுவதியைக் கடத்திய ஐந்து நபர்கள் கைது

மாத்தளை,மே10

மாத்தளை ,மஹவெல பிரதேசத்தில் யுவதியொருவரை கடத்திச் சென்றதாகத் தெரிவிக்கப்படும் சந்தேக நபர்கள் ஐந்து பேர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மாத்தளை மஹவெல பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதுடைய யுவதியொருவரே இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டவர் ஆவார்.

இந்தச் சந்தேக நபர்கள் குறித்த யுவதியை கடத்திச் சென்று காட்டுப்பகுதியில் மறைத்து வைத்திருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மட்டு. வைத்தியசாலையிலிருந்து அனுப்பப்பட்ட கர்ப்பிணிக்கு தனியார் வைத்தியசாலையில் பிரசவம்

## அபிவிருத்திக் குழுவினர் பணிப்பாளரிடம் முறையீடு

மட்டக்களப்பு, மே10

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் கட்டாயமாக வீட்டுக்கு அனுப்பப்பட்ட தாய் ஒருவருக்குப் பிரசவவலி ஏற்பட்டு அவசரமாகத் தனியார் வைத்தியசாலையில் குழந்தை பிறந்த சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை புதிதாகக் கடமையேற்று போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்குப் பொறுப்பாக வந்த வைத்திய அதிகாரி குறித்த கர்ப்பிணித் தாயை வீட்டுக்கு அனுப்பினார். இந்த நிலையில் அவருக்கு இடை நடுவே வலி ஏற்பட்டதையடுத்து தனியார் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிறிது நேரத்தில் குழந்தை பிறந்துள்ளது.

இந்த கர்ப்பிணித் தாயை ஏற்கனவே பரிசோதித்த வைத்தியர்கள் கடந்த வெள்ளிக்கிழமை குழந்தை பிறக்கும் திகதி எனக் குறிப்பிட்டிருந்தனர். எனினும், அன்றையதினம் புதிதாகக் கடமையேற்று வைத்தியசாலையின் பிரசவ விடுதிக்குப் பொறுப்பாக வந்த வைத்திய அதிகாரி குறித்த கர்ப்பிணித்தாயை விடுவித்தமையினாலேயே இந்த நிலைமை ஏற்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை மாத்திரம் ஆறு கர்ப்பிணித் தாய்மார்கள் திடீரென இவ்வாறு விடுவிக்கப்பட்டு வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுத் தலைவர் பொன். ரவீந்திரன், மட்டக்களப்பு மாவட்ட ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி அமைப்பாளர் ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் வைத்தியசாலைப் பணிப்பாளரைச் சந்தித்து முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்தச்சம்பவம் குறித்து சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அபிவிருத்திக் குழுவினர் பணிப்பாளரிடம் கேட்டுள்ளனர்.

இந்தவிடயம் குறித்து வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் கே.முருகானந்தத்திடம் கேட்டபோது, இது தொடர்பில் தன்னிடம் இந்த நோயாளி இதுவரை எந்தவிதமான முறைப்பாட்டையும் செய்யவில்லை எனவும் அவ்வாறு ஏதாவது முறைப்பாடுகள் கிடைத்தால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (ச)

தேவை



பக்கவடிவமைப்பாளர்
Pagemaker
குறைந்தது 2 வருட அனுபவம்

கணினித் தட்டெழுத்தாளர்
Typesetter
அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது

கணினி வரைகலைஞர்
Graphics Designer
குறைந்தது 2 வருட அனுபவம்

விண்ணப்பிக்கவேண்டிய முகவரி:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Email : uthsajevi@gmail.com
13.05.2011 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்
(பொருத்தமானவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர்)

விசேட தேவையுடையவர்களுக்கான
சக்கர நாற்காலி

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சிப் பிரதேசங்களைச் சேர்ந்த விசேட தேவையுடையவர்களுக்கு சக்கர நாற்காலி இலவசமாக வழங்கப்படும். வைத்தியம் சார் பொருத்தமான ஆதாரங்களுடன் விண்ணப்பிக்கவும். தகுதி உடையோராகக் கண்டறியப்படுவோருக்கு மட்டும் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 21.05.2011

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:
யாழ்.றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

ஏற்பாடு:
றோட்டறியன்
ஈ.சரவணபவன்,
நாடாளுமன்ற உறுப்பினர்,
யாழ்.மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10 மே 2011 செவ்வாய்க்கிழமை

# பெருந்தோட்டங்களைக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்தி பிரதேசசபைச் சட்டத்தை திருத்தக்கோரி கையெழுத்து வேட்டை

## பிரிடோ நிறுவனம் ஏற்பாடு

நுவரெலியா,மே10

பெருந்தோட்டங்களைக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்தி பிரதேசசபைச் சட்டத்தைத் திருத்துமாறு அரசைக் கோரும்வகையில் பொதுமக்களிடமிருந்து பத்து லட்சம் கையெழுத்துகளைப் பெறும் வேலைத்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் பிரிடோ வெளிக்கள இணைப்பதிகாரி சந்திரசேகரன்.

பெருந்தோட்ட சமூக மா மன்றத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்து இயக்கம் தொடர்பாக அதன் பணியாளர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் ஹற்றன் டைன் ரெஸ்டில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

அரச சேவைகளைப் பெறுவதிலும், அவற்றில் பங்களிப்பு செய்வதிலும் பெருந்தோட்ட மக்கள் மற்றைய துறைகளோடு வாழும் மக்களோடு சமமாக நடத்தப்படவேண்டுமானால் பெருந்தோட்டங்கள் அமைந்துள்ள பிரதேசங்களில் அதிகளவான பிரதேச செயலகப் பிரிவுகளும், கிராம சேவையாளர் பிரிவுகளும் உருவாக்கப்படவேண்டும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்காக அந்தப்பிரதேசங்கள் வரையறுக்கப்படும்போது பெருந்தோட்ட மக்களின் பிரதிநிதித்துவத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அவற்றின் எல்லைகள் பாதுகாக்கப்படவேண்டும்.

பெருந்தோட்டங்களைக் கிராமங்களாகப் பிரகடனப்படுத்த வேண்டும். பெருந்தோட்ட மக்கள் உள்ளூராட்சிச் சேவைகளைப் பெறுவதில் தடையாக இருக்கும் பிரதேச சபைச் சட்டத்தின் 33ஆம் பிரிவு நீக்கப்பட வேண்டும் அல்லது திருத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை கடந்த சில காலமாக பெருந்தோட்ட சமூக மாமன்றத்தால் வலியுறுத்தப்படுகிறது.

கடந்த பிரதேசசபைத் தேர்தல் காலத்திலும் இந்தக் கோரிக்கை பலரால் முன்வைக்கப்பட்டது. இதேவேளை உள்ளூராட்சிச் சபைகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக அமைக்கப்பட்ட எல்லை நிர்ணயக்குழு மே மாத இறுதியில் நுவரெலியாவிலும், கண்டியிலும் கூட இருக்கின்றன என செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்தப் பின்னணியில் இந்தக் கோரிக்கைகளின் முக்கியத்துவத்தை பெருந்தோட்ட மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லவும், மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை எல்லை நிர்ணயக் குழுவிடம் மக்கள் பங்களிப்போடு எடுத்துச் செல்லவும் வசதியாகப் பெருந்தோட்ட மாமன்றம் கையெழுத்திடும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

ஒரு லட்சம் கையெழுத்துகளைப் பெற்று மேற்சொல்லப்பட்ட கோரிக்கைகள் அடங்கிய மகஜரை அந்தந்தப் பிரதேச செயலாளரிடம் சமர்ப்பித்து அவர்கள் மூலமான எல்லை நிர்ணயக்குழுவிற்கு சமர்ப்பிக்க பெருந்தோட்ட சமூக மாமன்றம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

இந்தப் பின்னணியில் அனைவரும் உற்சாகத்துடன் செயல்பட்டு இந்தக் கையெழுத்திடும் இயக்கத்தை வெற்றிபெறச் செய்வது அவசியமாகும்- என்றார். (ச)

# தொலைத்தொடர்பு நிலையத்தில் திருட்டு

பண்டாரவளை, மே 10

பண்டாரவளை ஓபடெல்ல பிரதேசத்திலுள்ள தொலைத்தொடர்பு நிலையமொன்று இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டுள்ளன என பண்டாரவளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு உரிமையாளர் சென்றுள்ளார். மறுநாள் காலை வழமையாக வர்த்தக நிலையத்தைத் திறக்கச்சென்ற சமயம் கதவு திறக்கப்பட்டு அதிலுள்ள சாதனங்கள், சிம்காட் மற்றும் முற்கொடுப்பனவு தொலைபேசி அட்டைகள் போன்றவை திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் பண்டாரவளை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அசித டி சில்வா தலைமையிலான குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. (ச)

# மஸ்கெலியா நகரில் திடீர் சோதனை; 26 உணவகங்களுக்கு எதிராக வழக்கு

நுவரெலியா சுகாதார சேவைகள் அதிகாரியின் உத்தரவின்பேரில் மஸ்கெலியா சுகாதார அதிகாரி வைத்தியர் சஞ்சய குணதிலக்க மேற்பார்வையில் அம்பேகமுவ பிரதேச சபை உதவியுடன் 36 பொது சுகாதார அதிகாரிகள் கடந்த 2 ஆம் திகதி திடீர் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டனர். மஸ்கெலியா, சாமிமலை, நோர்வூட், பொகவந்தலாவை, நல்லதண்ணி புளியாவத்தை, லக்கம் ஆகிய நகரங்களில் உள்ள உணவகங்கள், தேநீர்க் கடைகள் என 144 வர்த்தக நிலையங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

1980 ஆம் ஆண்டு 26 ஆம், உணவக சட் டத்தின்படி, 26 உணவகங்களுக்கு எதிராக ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 16 உணவகங்கள் மீள்பரிசீலனை மேற்கொண்டு 14 நாள்களுக்குள் சிறந்த முறையில் வைத்துக்கொள்ள வேண்டும் என மஸ்கெலியா பிரதேச பொதுச் சுகாதார அதிகாரியும், சுகாதார கல்வி அதிகாரியுமான பி.ஏ. பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.(ச)

## சுத்தம் சுகம் தரும்....



சிரமதானம்: அக்கரைப்பற்றுப் பிரதேச சபைக்குட்பட்ட பட்டியடிப்பட்டி மையவாடியை உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்திச் சங்க ஏற் பாட்டில் சிரமதானம் செய்யும் நடவடிக்கை கடந்த சனிக்கிழமை இடம் பெற்றது. இந்த சிரமதானத்தில் பொதுமக்கள் கலந்துகொண்டு துப்புரவுப் பணியில் ஈடுபடுகின்றனர். (ச)

# வைத்தியசாலையில் மற்றொரு காவலாளியும் தாக்கப்பட்டார்

திருகோணமலை, மே 10

திருகோணமலை பொது வைத்தியசாலையின் மற்றுமொரு காவலாளி மீதும் கடந்த வெள்ளிக்கிழமை தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை மாலை நோயாளிகளைப் பார்வையிடும் நேரத்தை தாண்டி நோயாளியொருவரை பார்வையிட பலர் வருகை தந்ததை காவலாளி தடுத்தபோது இந்த நோயாளரின் உறவினர்கள் அவர் மீது தாக்குதல் நடத்தினர் என திருகோணமலை துறைமுகப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றுமொரு காவலாளி தாக்கப்பட்டு திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# கைக்குண்டு வைத்திருந்த இருவர் கைது

கைக்குண்டொன்றை வைத்திருந்ததாக தெரிவிக்கப்படும் பெண்ணொருவர் உட்பட இருவர் கலேவெல பொலிஸாரால் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலேவெல பிரதேசத்தில் தனியார் பஸ் வண்டியொன்றில் கைக்குண்டை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இவர்கள் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்டவர்கள் திருகோணமலைப் பிரதேசத்தை சேர்ந்தவர்களென்று பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# கிழக்கில் சுகாதாரத்துறை சவால்களுக்கு மத்தியிலும் வளர்ச்சி

## அமைச்சர் சுபைர் தெரிவிப்பு

அம்பாறை, மே 10

சுகாதாரத்துறைச் சேவை இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பாற்பட்ட புனித சேவையாகும். இந்த வகையில் கிழக்கின் சுகாதாரத்துறை பல சவால்கள், இடையூறுகளுக்கு மத்தியிலும் வளர்ச்சி கண்டு வருகின்றது.

இவ்வாறு கிழக்கு மாகாணச் சுகாதார, சுதேச வைத்திய, கூட்டுறவு, விளையாட்டுத்துறை அமைச்சர் எம்.எஸ்.சுபைர் தெரிவித்துள்ளார்.

தேசிய சுகாதார மேம்பாடு தொடர்பாகச் சுகாதர அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட போட்டியில் தேசிய ரீதியாக 2ஆம் இடம்பெற்று வெள்ளி விருது பெற்றுள்ள நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலையின் மாவட்ட வைத்திய அதிகாரி, வைத்திய அதிகாரிகள், ஊழியர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் சுகாதாரத் துறையை மனிதநேய சேவையாக நினைத்து அமைச்சரென்ற வகையில் எனது பணிகளை மேற்கொண்டு வருகின்றேன்.

நான், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுப் பொறுப்பை ஏற்றதும் சுகாதார வசதிகளில் பின்தங்கியிருந்த குச்சவெளி, மூதூர், தம்பலாகாமம், கோமரங்கடவை போன்ற பிரதேசங்களுக்குச் சென்று சுகாதாரத்துறையை நேரில் ஆராய்ந்ததோடு, சுகாதாரத்துறைக் குறைபாடுகளையும் சீர்செய்து கொடுத்துள்ளேன்.

ஆடம்பர மாளிகைகளாகவோ வெளிச்ச வீடுகளாகவோ வைத்தியசாலைகளை வைத்திருப்பதில் அர்த்தமில்லை, அவை நோயாளரைத் திருப்திப்படுத்தும் சேவைகளை ஆற்றவேண்டும்.

மக்கள் நம்பிக்கை வைக்கும் துறையாகச் சுகாதாரத்துறையை நாம் மாற்றவேண்டும். இந்த வகையில் எம்மவர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் காரணமாக கிழக்கில் எத்தகைய சவால்கள், இடையூறுகள் வந்தபோதிலும் நம் சுகாதாரத்துறை வளர்ச்சி கண்டுவருவது குறித்து நாம் திருப்தி கொள்கின்றோம்.

நமது சுகாதாரத்துறை சார்ந்த உயரதிகாரிகள், வைத்திய அதிகாரிகள், ஊழியர்களின் அர்ப்பணிப்பான சேவைகள் காரணமாக மக்களுக்கு இன்று கிழக்கில் நல்ல சேவைகள் கிடைத்துவரும் அதேவேளை பல சாதனைகளும் படைக்கப்பட்டு வருகின்றன.

கிழக்கில் 125 வைத்தியசாலைகள் உள்ள அதேவேளை மத்திய அரசின் கீழுள்ள 6 வைத்தியசாலைகளுமுள்ளன. இதில் மத்திய அரசின் கீழுள்ள வைத்தியசாலைகள் தவிர ஏனைய அனைத்தும் எமது மாகாண அமைச்சின் பொறுப்பிலேயே உள்ளன.

வருடத்துக்குக் கிடைக்கும் நிதி ஒதுக்கீடான 150 மில்லியனையே கிழக்கிலுள்ள நான்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுகளுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டிய நிலையுமுள்ளது.

இந்த நிலையில் மக்கள் பங் களிப்பைப் பெறும் விடயத்தில்கூட நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை முன்னுதாரணமாகத் திகழ்வதில் நான் பெருமிதம் கொள்வதுடன் அமைச்சின் சார்பில் பாராட்டையும் தெரிவிக்கின்றேன்.

நல்ல நோக்குடன் எவற்றை முன்னெடுத்தாலும் வெற்றிபெறுவதுடன், சாதனைகளையும் படைக்கலாம்.

இந்த வகையில் யுத்த காலத்தில்கூட கிழக்கில் வைத்திய அதிகாரிகள், ஊழியர்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் சிறந்த, அர்ப்பணிப்பான சேவைகளை ஆற்றி வந்தமையையும் நாம் மறந்துவிடமுடியாது.

நாட்டின் இன்றைய சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தனது அமைச்சு தொடர்பான அரசியல் அதிகாரத்தைச் சகல மாகாண சுகாதார அமைச்சுக்களுக்கும் பங்கிட்டுக் கொடுத்துள்ளார்.

இந்த முன்னுதாரணச் செயற்பாடு மற்றும் சேவை மனப்பாங்கு காரணமாக நாட்டின் சுகாதாரத் துறைச் செயற்பாடுகள் சிறந்து விளங்குகின்றன. (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போலி கடனட்டை மூலம் பணமோசடி; பொறியியலாளர் உட்பட ஐவர் கைது

கொழும்பு, மே10

போலி கடனட்டைகள் மூலம் பண மோசடியில் ஈடுபட்டு வந்தனர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட கணினிப் பொறியிலாளர் ஒருவர் உட்பட்ட ஐந்துபோரை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்கிசை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

கைது செய்யப்பட்ட ஐந்து பேர் அடங்கிய குழுவின் தலைவராக மட்டக்களப்பைச் சேர்ந்த இந்தப் பொறியியலாளரே செயற்பட்டு வந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கப்பூரில் கணினித் துறையில் பொறியியல் பட்டம் பெற்றுள்ள இவர் கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ஜேர்மன் உள்ளிட்ட பல நாடுகளில் வசிக்கும் தன் நண்பர்களுடன் கூட்டு வலையமைப் பொன்றை மேற்கொண்டு போலிக் கடனட்டைகள் மூலமாக பெருந்தொகைப் பணத்தை மோசடி செய்துள்ளார் எனக் கூறப்படுகின்றது.

வெளிநாட்டவர்களின் கடனட்டைத் தகவல்களைப் பெறுவதற்காக இவர் இணையத்தளம் ஒன்றுக்கும், உள்நாட்டவர்களின் கடனட்டைத் தகவல்களுக்காக எரிபொருள் நிரப்பும் நிலைய ஊழியர்கள் பலருக்குப் பெரும் தொகைப் பணத்தை மாதாமாதம் கொடுத்து வந்துள்ளமை பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

கள்ளத்தனமாகப் பெறப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனட்டைகளின் தகவல்களைக் கொண்டு போலிக் கடனட்டைகளை தயாரிப்பதற்காக கனடா மற்றும் இந்தியாவிலிருந்து இரண்டு இயந்திரங்களையும் இவர்கள் கொள்வனவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவருக்கு உதவியாகச் செயற்பட்ட ஒரு தமிழரும் மூன்று முஸ்லிம்களுமே பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ச)

# ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கை விவகாரம்; தென்னாபிரிக்கா மீது பாய்கிறது இலங்கை

கொழும்பு,மே10

ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கைக்கு ஆதரவாக ஆபி ரிக்கத் தேசிய காங்கிரஸ் தென்னாபிரிக்காவின் ஆளும்கட்சி அறிக்கை வெளியிட்டுள்ள நிலையில், இலங்கை வெளிவிவகார அமைச்சின் கவனம் தென்னாபிரிக்கா மீது திரும்பியுள்ளது.

ஆபிரிக்கத் தேசிய காங்கிரசின் அறிக்கையால் விசனமடைந்துள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, போருக்குப் பந்திய நிலைமைகள் தொடர்பாக தென்னாபிரிக்காவுக்கு விளக்கமளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இராஜதந்திர முனையில் ஏற்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலை சமாளிப்பதற்கு கூட்டிணைவான மூலோபாயம் ஒன்று தேவைப்படுவதாக இலங்கையின் மூத்த அமைச்சர் டி.யு. குணசேகர தெரிவித்துள்ளார்.

தாம் விரைவில் ஆபிரிக்கத் தேசிய காங்கிரசுக்கு நிலைமைகளை விளக்குவோம் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

இதனிடையே, தென்னாபிரிக்காவின் ஆளும்கட்சியான ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு பரிட்டோரியாவில் உள்ள தமது தூதுவர் டி.விஜேசிங்கவிடம் இருந்து விளக்க அறிக்கை ஒன்றைக் கோரியுள்ளது.

இந்த அறிக்கையைத் தாம் எதிர்பார்த்துள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன்போன்ற நாடுகளின் அரசுகள் ஐ.நா அறிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், தென்னாபிரிக்காவில் இருந்து ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் என்ற கட்சியிடம் இருந்தே ஆதரவு அளிக்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

# கொத்து ரொட்டி விற்பனை நிலையங்களில் திடீர்ச் சோதனைகளை நடத்த ஏற்பாடு

கொழும்பு, மே 10

கொழும்பில் கொத்து ரொட்டி தயாரித்து விற்பனை செய்யும் உணவகங்கள் மீது கொழும்பு மாநகர சபையின் பொதுச் சுகாதார அதிகாரிகள் திடீர் சோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

சில உணவு விடுதிகள் சுகாதாரமற்ற முறையில் கொத்து ரொட்டிகளைத் தயாரிக்கின்றன என கொழும்பு மாநகர சபையின் பொதுச்சுகாதார திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கிராண்ட்பாஸ், மருதானை, கொம்பனித்தெரு மற்றும் பம்பலப்பிட்டி முதலான இடங்களில் பொதுச்சுகாதார அதிகாரிகள் முற்றுகைகளை மேற்கொள்ளவுள்ளனர் என்றும் கொத்து ரொட்டி மாதிரிகள் எடுத்துவரப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ச)

# மாணவரிடையே மோதல்; 26 பேர் காயம்

வெயாங்கொடையிலுள்ள சியானே தேசிய கல்வியியல் கல்லூரியில் இரு மாணவக் குழுக்களிடையே கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மோதலில் 26 மாணவர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

# போர்க் குற்றவாளிகளுக்கு பாதுகாப்பு வழங்கி வருகிறது ஆஸ்திரேலியா

## தமிழர் சீற்றம்; அந்நாட்டு ஊடகங்கள் தகவல்

கொழும்பு,மே 10

இலங்கையின் தூதுவராக அட்மிரல் திசார சமரசிங்கவை ஏற்றுக் கொண்டதன் மூலம் ஆஸ்திரேலிய அரசு போர்க்குற்றவாளிக்குப் பாதுகாப்பளிப்பதாக தமிழ்ச் சமூகத்தினர் குற்றம்சாட்டுவதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவுக்கான தூதுவராக முன்னாள் கடற்படைத் தளபதி அட்மிரல் திசார சமரசிங்க நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு கடந்த வெள்ளியன்று அறிவித்திருந்தது.

இவரது நியமனம் குறித்த தகவல்கள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெளியான போது, ஆஸ்திரேலியாவில் வாழும் தமிழ்ச் சமூகத்தினர், இவரை தூதுவராக ஏற்கக் கூடாது என்று பிரதமர் கிலாட் அரசுக்கு கோரிக்கை விடுத்திருந்தனர்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் இவர் இலங்கைக் கடற்படையில் பணியாற்றியவர் என்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர் என்றும் குற்றம்சாட்டியிருந்தனர். எனினும்,அண்மையில் வெளியான ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையில் அட்மிரல் திசார சமரசிங்க போர்க்குற்றவாளி என்று குறிப்பிடப்படவில்லை.

ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் சமஷ்டிக் கட்சி உறுப்பினர் ஜோன் முர்பி உரையாற்றியபோது, அட்மிரல் திசார சமரசிங்க ஆஸ்திரேலியாவுக்குப் பொருத்தமான தூதுவர் அல்ல என்று கூறியிருந்தார்.

இந்தநிலையில் அட்மிரல் திசார சமரசிங்கவின் நியமனம் இடம்பெற்றுள்ளதானது ஆஸ்திரேலிய தமிழ்ச் சமூகத்தினரை கோபமடைய வைத்துள்ளதாக ஆஸ்திரேலிய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ச)

சந்திப்பு....



ஐக்கிய தேசிய கட்சியின் இணைத் தலைவர் சஜித் பிரேமதாஸ நாராஹேன்பிட்டியிலுள்ள பௌத்த விகாரைக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சென்று பிக்குகளுடன் உரையாடுகிறார். (ச)

# அதிகாரங்களைக் குறைக்க வேண்டாம்; மாநகர மேயர்கள் கூட்டாகக் கோரிக்கை

புதிதாகக் கொண்டுவரப் படவுள்ள உள்ளூராட்சி சபைகள் திருத்தச் சட்டத்தின் ஊடாக மாநகர மேயர்களின் அதிகாரத்தைக் குறைக்க வேண்டாம் என நாட்டிலுள்ள அனைத்து மாநகரசபை மேயர்களும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாத்தளையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாநகர மேயர்களின் மாநாட்டின் போதே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் இருந்த உள்ளூராட்சிசபைகள் சட்டத்தில் காணப்பட்ட குறைப்பாடுகளை நிவர்த்தி செய்த பின்னரே முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ புதிய திருத்தங் களைக் கொண்டு வந்தார் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இந்த நிலையில் புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள திருத்தத்தில் மாநகர மேயர்களின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கக் கூடாது என்று அவர்கள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# குடும்பநல சுகாதாரசேவையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதிக்கு மனு

குடும்பநல சுகாதார சேவைகளில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பான மனுவொன்றை இலங்கை சுவசேவா சங்கத்தினர் கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளனர்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் அதிகாரிகள் தீர்மானங்களை மேற்கொள்ளத் தவறியதினாலேயே ஜனாதிபதியிடம் மனு வழங்கப்படுகின்றது என இலங்கை சுவ சேவா சங்கத் தின் தலைவர் காமினி குமார சிங்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் சுகாதார அமைச்சர் மற்றும் சுகாதார அதிகார சபைகள் தீர்க்கமான முடிவை வழங்கவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது மனுவில் ஒருங்கிணைந்த குடும்ப நல சுகாதார சேவைகள் மற்றும் தாதிமார் சேவைகளுக்கு வழிவகுக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.(ச)

# உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் நிராகரிப்பு; மேன்முறையீடுகளுக்கு நாளை மறுதினம் தீர்ப்பு

உள்ளூராட்சிசபைத் தேர்தல் வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த 63 மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 12ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

கடந்த வியாழக்கிழமை வழங்கப்பட இருந்த தீர்ப்பே நாளை மறுதினம் வியாழக்கிழமை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மனுவை விசாரிக்கவென அமைக்கப்பட்டுள்ள மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் ஆயத்தின் நீதிபதி உபாலி விஜேரத்ன சுகயீனமுற்றிருப்பதால் தீர்ப்பு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வேட்பு மனு நிராகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மேன்முறையீட்டு மனுக்கள் கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே நீதிபதி சத்தியா ஹெட்டிகே இதனை அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு தந்தை செல்வா நற்பணி மன்றத்தால் நடத்தப்பட்ட தந்தை செல்வா நினைவு தினத்தில் சிறந்த சமூக சேவையாளர் கௌரவிப்பும் இடம்பெற்றது. இதில் யாழ். சமூக அபிவிருத்தி மன்றப் பணிப்பாளர் ம.கணபதிப்பிள்ளைக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கிறார். (26)

# வட மாகாணம் பெற்றுள்ள இடிப்புகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே10

கடந்த காலங்களில் வட மாகாணம் பெற்றுக்கொண்ட இழப்புகளை மீளக்கட்டியெழுப்பும் முகமாக 'நெல்சிப்' திட்ட நிதி ஒதுக்கீடுகள்வழங்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்திப் பணிகள் யாவும் பிரதேச செயலகங்கள் மூலம் நிறைவேற்றுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்தார்வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன்.

யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் பிரதேச செயலர்களிடம் 'நெல்சிப்' திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டின் அனுமதிக் கடிதங்களைக் கையளிக்கும் நிகழ்வில் வரவேற்புரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

பொருளாதார அமைச்சால் வடபகுதி மக்களுக்குக் கிடைக்கப்பெற்ற இந்த நன்கொடை திட்டமிட்ட வகையில் நிறைவேற்றப்படவேண்டும்.

அரசால் வடமாகாணத்தில் உள்ளூர் கிராமங்களின் அபிவிருத்திக்காக உலக வங்கியிடம் இருந்து கடனாகப் பெற்று வடக்கின் வசந்தம் மஹிந்த சிந்தனையின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே நாம் கடந்த காலங்களில் இழந்தவற்றைக் கட்டுமானப் பணிகள் மூலம் அபிவிருத்தி செய்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.- எனவும் கேட்டுக்கொண்டார். (ம-313)

# வடகடல் நிறுவன குருநகர் கிளையுடன் ஏனைய கிளைகள் விரைவில் இணைப்பு

யாழ்ப்பாணம், மே 10

வடகடல் நிறுவனத்தின் நுணுவில, வென்னப்புவ கிளைகள் குருநகர் கிளையுடன் அடுத்த மாதம் ஒன்றிணைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் தற்போதைய தொழிலாளர்களைவிட இரு மடங்கான ஊழியர்களுக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

கைத்தொழில் அதிகாரசபையின் வடகடல் நிறுவனத்தின் வலை விற்பனை நிலையத்தைக் குருநகரில் அண்மையில் திறந்து வைத்த நிறுவனத்தின் தலைவர் ஆறுமுகம் பரந்தாமன் நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:

குருநகர் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்த நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் வலைகளை சிறுமீனவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இந்த வலை விற்பனை நிலையம் திறந்து வைக்கப்படவுள்ளது.

1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நிறுவனத்தில் 1200 தொழிலாளர்கள் பயன்பெற்று வந்தனர். அதன் பின்னர் யுத்தத்தால் பல்வேறு அழிவுகளை நிறுவனம் ஏற்க வேண்டிய சூழல் ஏற்பட்டது.

2000ஆம் ஆண்டு அரச நிறுவனமாக அமைச்சால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் வலை உற்பத்தியில் ஓரளவேனும் உயர்ந்த நிலையை அடைந்துள்ளோம்.

தற்போது எமது நிறுவனத்தின் ஊடாக 300 மெற்றிக் தொன் வலைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த நிறுவனத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக அமைச்சரவையினால் 152 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஏனைய இரு கிளைகளும் இணைக்கப்பட்டவுடன் அதிக எண்ணிக்கையான தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.- என்றார். (ம-313)

# நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,மே10

நல்லூர் கோட்டமட்ட தமிழ்த் தினப் போட்டிகள் யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெற்றது. இப் போட்டி முடிவுகள் வருமாறு:-

**வாசிப்பு-(பிரிவு-1)**

ப.பவதாரகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), து.வைஷ்ணவி (யாழ்.கொக்குவில் இ.ஆ. பாடசாலை), த.மயூரி (யாழ்.நல்லூர் சென்.பெனடிக்ற்).

**ஆக்கத்திறன் வெளிப்பாடு (பிரிவு 1)**

சி.சிவாம்சன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), பு சாளினி (யாழ்.கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை), ர.ஜெணார்த்தனன் (யாழ்.திருநெல்வேலி இ.த.க.பாடசாலை).

**பேச்சு (பிரிவு-1)**

க.கீர்த்திகன் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), சா.கஸ்தூரி (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), ஜெ.தனுஷா (யாழ். ஆனைப்பந்தி மெதடிஸ்த மிஷன் கல்லூரி).

**பாவோதல்**

த.ஜிவசாந் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), ஹரிஷ்யந்தி (யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), செ.சிவஸ்யா (யாழ். ஆனைப்பந்தி மெ.மி. கல்லூரி).

**இசையும் அசைவும் (பிரிவு-1)**

கு.பானுஜர (யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), தே. அபிராம் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), இ.விவேகா (யாழ். நல்லூர் சென்.பெனடிக்ற் கல்லூரி)

**வாசிப்பு-(பிரிவு-2)**

வி.வத்சாங்கிதசர்மா (யாழ். இந்துக் கல்லூரி), அ.டேனுஷா (யாழ்.அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), த.விதுர்ஷன் (யாழ்.இந்து தமிழ்க் கலவன் பாடசாலை).

**பேச்சு (பிரிவு-2)**

த.அபிநாத் (யாழ்.இந்துக் கல்லூரி), து.கஜேந்தினி (யாழ். அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), கை.நிஷாந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

**பேச்சு (பிரிவு-3)**

இ.ஜனரஞ்சினி (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), ம.வினிசியா(யாழ்.அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), ஞா.கஜவாணி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**பேச்சு (பிரிவு-4)**

க.யஸ்மிதா(கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.குணவரன் (யாழ்.இந்துக் கல்லூரி), பி.கஜாஸி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**பேச்சு (பிரிவு -5)**

அ.உமாகரன் (யாழ்.இந்துக் கல்லூரி), இ.சாமந்தி (கொக்குவில் இந்துக் கல்லூரி), வி.விஜயதர்சினி (யாழ்.முத்துத்தம்பி மகா வித்தியாலயம்).

**பாவோதல் (பிரிவு-2)**

உ.விதுஷன்(யாழ்.இந்துக் கல்லூரி), வீ.நிதுர்ஷியா (அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), பு.கஜப்பிரியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**பாவோதல் (பிரிவு -3)**

சி.சியாமினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), வி.கோபிகா (யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி), ஸ்ரீ.சுகிர்தா (யாழ்.அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்).

**பாவோதல் (பிரிவு-4)**

உ.ரசிந்தா(கோண்டாவில் இந்து ம.வித்தியாலயம்), ச.சரணியா(கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்), த.ஹம்சாயினி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி).

**பாவோதல் (பிரிவு -5)**

த.எழிலினி (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.ஜசிந்தா (யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயம்).

**தமிழறிவு வினாவிடை (திறந்த போட்டி)**

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயம், இளையதம்பி மகா வித்தியாலயம்.

**விவாதம் (திறந்தபோட்டி)**

யாழ்.இந்துக் கல்லூரி.

**நாட்டார்பாடல் (திறந்தபோட்டி)**

கு.குகப்பிரியா (கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.துவாரகா(யாழ்.கலட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை) *(வளரும்)*

# கலாபூஷணம் விருதுக்கு விண்ணப்பம்

நவாலி,மே10

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் கலாபூஷண விருது வழங்குவதற்கு 60 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஓவியம், நாடகம், வில்லுப்பாட்டு, தவில், நாதஸ்வரம், சினிமா, நாட்டுப்புறவியல், இலக்கியம், நாட்டுக் கூத்து, ஊடகம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்பங்களைப் பிரதேச செயலகங்களிலிருந்து பெற்று எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ம-100)

# பரிசளிப்பு விழா

தென்மராட்சி, மே10

தென்மராட்சி கல்வி வலயத்தினால் நடத்தப்பட்ட சைவ சமயபாட போட்டிப்பரீட்சைகளில் சித்தி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ சமய பாட ஆசிரிய ஆலோசகர் செல்வி இ.இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தமும், சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய அதிபர் நா.அருட்சோதி, சாவகச்சேரி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன், இளைப்பாறிய அதிபர் சி.ஜெயக்குமார், சாவகச்சேரி திருக்கணித நிலைய முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம், இளைப்பாறிய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.பாலசுப்பிரமணியம்,வலய ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் திருமதி ச.கோகுலதாசன் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-207)

# நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,மே10

வேலணை, பள்ளம்புலம் முருகமூர்த்தி சனசமூக நிலைய புதிய ஆண் டுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்-க.விவேகானந்தன், உப தலைவர்-க.இராசலிங்கம், செயலாளர்-செ.ஜெயகாந்தன், உப செயலாளர்- த.அருணகிரிநாதன், பொருளாளர்- சொ.சிவயோகலிங்கம்,

வாசிகசாலைப் பொறுப்பாளர்-வே.இராசரட்ணம், சமயப் பொறுப்பாளர்-ப.ஞானபண்டிதன், கலை, கலாசாரப் பொருளாளர்-சு.கேதீஸ்வரன், விளையாட்டுப் பொறுப்பாளர்- யோ.முகுந்தன், சுற்றாடல், சுகாதாரப் பொறுப்பாளர்-ச.கைலாயபதி,

பத்திராதிபர்-சி.வரதலிங்கம், உறுப்பினர்கள்-மு.செல்லையா, சு.மகேந்திரன், செ.ரஞ்சன், பா.முகிலன், காப்பாளர்- சு.செல்வரட்ணம், எண்பார்வையாளர்-ப (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
மாற்று மத நண்பர்கள், சரியான நேரத்திற்கு கை கொடுத்து உதவுவர். வீண் வம்பு விவகாரங்களில் இருந்து விடுதலை பெறுவீர்கள். மற்றவர்கள் சொல்வதை நம்பாமல், எதிலும் நீங்களே தீவிரமாக ஆலோசனை செய்து செயற்படுவீர்கள். வெளியிடங்களுக்குச் செல்லும் போது, தொடர்ச்சியாக வாகன வசதிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள்

**இடபம்:**
விருப்பம் இல்லாமல் சில செலவுகளைச் செய்வீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் வீடு வந்து சேரலாம். மற்றவர்களை யோசிக்க வைக்கும் வகையிலான சில காரியங்களைச் செய்வீர்கள். வறட்டுப் பிடிவாதங்களைத் தவிர்த்து, அனைவரிடமும் கலகலப்பாகப் பழகுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகள் சரியான நேரத்திற்கு கைக்குக் கிடைக்கலாம்.

**மிதுனம்:**
மனைவி, குழந்தைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். மற்றவர்களின் நிர்ப்பந்தங்களுக்கு ஆள்பட்டு சில வேலைகளைச் செய்வீர்கள். சில காரியங்களைச் செய்ய மறந்து, அதனால், அவதிகளுக்கு ஆள்படலாம். வெளியிடங்களில் சிலரிடம் சண்டை போடலாம்.

**கடகம்:**
கலகலப்பான அனுபவங்களால் கவலைகளை மறக்கும் நாள். எந்த வேலையையும் பின்னர் என, பிற்போட்டு வைக்காமல் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பல நாள் ஆசை ஒன்று நிறைவுக்கு வரும். சிறிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில் பெரிய அளவில் ஆதாயம் கிடைக்கலாம். தூரத்து உறவினர்கள் சிலர் வீட்டிற்கு வரலாம்.

**சிங்கம்:**
பழைய கடன் மிகுதிகளை திரும்பச் செலுத்தலாம். தெய்வ காரியம் ஒன்றுக்காக சில செலவுகளைச் செய்யலாம். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் ஆதரவைப் பெற்று மகிழ்ச்சி அடைவர். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்ட குடும்ப உறுப்பினர்கள் மனம் மாறுவர். யாரிடமும் தேவையில்லாமல் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும்.

**கன்னி:**
சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப் பளுவைச் சந்திக்கலாம். சிலருடன் சிறிய விடயம் ஒன்றுக்காக பெரிய அளவில் விவாதம் செய்யலாம். நண்பர்களுக்காக பிணை கொடுப்பீர்கள். அடமானமாக வைத்த பொன், பொருள்களை மீட்கலாம். கடந்த கால அனுபவம் ஒன்றை அசைபோட்டுப் பார்ப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும்.

**துலாம்:**
எதிர்பார்த்த பணவரவுகளைப் பெற்றாலும், ஏதாவது ஒரு வகையில் செலவுகளைச் சந்திக்கலாம். பொலிஸ் தொடர்பான பணியில் இருப்போருக்கு அலைச்சல் கூடும். மாற்று மதத்தினர் வழியில் மனதிற்கு இனிய உதவி கிடைக்கலாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர், உங்களைத் தேடி வரலாம். இழுபறியாக இருந்த காரியம் ஒன்று முடிவுக்கு வரலாம்.

**விருச்சிகம்:**
அனைவரிடமும், அன்பாகவும், கனிவாகவும் நடந்து கொள்ளும் நாள். பெரிய மனிதர் ஒருவரின் நட்பு கிடைக்கலாம். தொழில் ரீதியாக புதிய ஒப்பந்தங்கள் போடலாம். உங்களை வைத்து காரியம் சாதிக்க நினைத்த சிலர் ஏமாந்து போகலாம். எதிர்பாராத சில விடயங்கள் நடக்கலாம். பொன், பொருள்களை அடமானம் வைத்து கடன் பெறலாம்.

**தனுசு:**
தேக ஆரோக்கியத்தில் குறைபாடு ஏற்பட்டு வழக்கமான பணிகளில் தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். கணவன், மனைவி இடையே சண்டை, சச்சரவு உருவாகும். உங்களை சரியாகப் புரிந்து கொள்ளாமல் சிலர் நடக்கலாம். வராத பணவரவு ஒன்றைப் பற்றி பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். மனக்குழப்பங்கள் அதிகரிக்கும்.

**மகரம்:**
புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்ப உறுப்பினர்கள் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். உடல் நலத்தில் அதிக அக்கறை காட்டுவீர்கள். உறவினர்கள் சிலரின் அன்புக் கட்டளைகளுக்கு ஆள்பட்டு நடக்கலாம். நீண்டநாள்களாகப் பார்க்க நினைத்த ஒருவரைப் பார்க்கலாம்.

**கும்பம்:**
முள்ளாக இருந்த சில பிரச்சினைகள் சுமுகமாக முடிவுக்கு வரும் நாள். பிள்ளைகள் சில விடயங்களில் பிடிவாதமாக நடந்து கொள்வது கண்டு எரிச்சல் அடையலாம். புறம் பேசும் சிலரை அடையாளம் கண்டு கொள் வீர்கள். கடனாகக் கொடுத்த பணம் ஒன்று திரும்பி வரலாம். குறுக்கு வழி சிந்தனைகளைத் தவிர்த்து, எதிலும் நேர்மையாகச் செயற்படுவீர்கள்.

**மீனம்:**
சில வேலைகளுக்காக ஒன்றுக்கு பல முறை அலைய நேரிடலாம். உறவினர்கள் வழியில் உருவான மனக்கசப்புகள் நீங்கும். மறைமுக போட்டிகள், எதிர்ப்புகளைச் சந்திக்கலாம். திறமைக்கு சவால் விடும் வகையிலான சில விடயங்கள் நடக்கலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேசாமல் தவிர்க்கலாம். சுப நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.

# முள்ளிவாய்க்கால் சமரின் இழப்புக்களை விடவும் 'இராஜதந்திரப் போர்' அரசுக்கு இனி உக்கிரம்!

இலங்கை அரசு, விடுதலைப் புலிகளுடனான இறுதிக் கட்டப்போரில் ஆயிரக்கணக்கான தமிழ் மக்களை குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என்று பாராமல் விமான மூலமாகவும், ஆட்லறி ஷெல் மூலமாகவும் ஈவிரக்கமின்றிக் கொன்று குவித்தது.

இந்த யுத்தத்தில் இரண்டு கண்களை இழந்து, கைகளை இழந்து, இரண்டு கால்களை இழந்து, அநாதரவாக அடுத்த கட்ட நகர்வு பற்றி சிந்திக்க முடியாமல் தமிழ் மக்கள் போர் வடுக்களைச் சுமந்து கொண்டு தவிக்கின்றார்கள்.

இத்தனை சம்பவங்கள் இடம்பெற்றும், ஒன்றுமே நடக்கவில்லை, யுத்தத்தில் பொதுமக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று சொல்லி முழு உண்மையையே மூடி மறைக்கும் சிங்கள அரசு எதிர்வரும் காலங்கள் தமிழ் மக்களை நிரந்தர அடிமைகள் ஆக்குவது ஒன்றும் பெரிய விடயம் அல்லவே!

தமிழ் மக்களின் கண்ணீரில் சிங்கள அரசு குளிர்காய நினைக்கிறது. கொல்லப்பட்டது விடுதலைப் புலிகள் மட்டுமல்ல அப்பாவி பொது மக்களும்தான். இலங்கைத் தமிழ் மக்களை இலங்கை அரசே கொலை செய்திருக்கிறது.

போர்க்குற்றங்களை ஏற்றுக்கொள்ளாத இந்த அரசு எப்படித் தமிழ் மக்களுக்கு தீர்வை வழங்கப்போகிறது. இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றம் தொடர்பாக இல்ங்கை அரசு மீது ஐ.நா. அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்தப் போர்க்குற்றங்களை மூடி மறைப்பதற்காக என்ன நடவடிக்கை என்றாலும் அதில் இறங்குவதற்கு அரசு தயாராகவுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான போரில் வெற்றியீட்டியுள்ள மாயையில் மூழ்கியிருக்கும் சிங்கள அரசு அந்த யுத்தத்தில் இறந்து போன அப்பாவிப் பொது மக்களின் நிலைமையைப் பற்றி ஒரு சிறு துளி கூட சிந்திக்கவில்லை.

பயங்கரவாத பிடியில் இருந்து பொதுமக்களை மீட்டதாக அடிக்கடி சொல்லும் அரசு. அந்த மக்களை உயிருடன் மீட்பதற்காக எந்த நடவடிக்கையையும் போரின்போது மேற்கொள்ளவில்லை. ஐ.நா அறிக்கையில் வெளிப்படையாக இது வெளி வந்துள்ளது.

அதாவது பாதுகாப்பு வலயத்தை உருவாக்கி பொது மக்களை ஒதுங்குமாறு கூறிவிட்டு அந்தப் பகுதிக்குள் விமானம் மூலமும் ஆட்லறி ஷெல் மூலமாகவும் கண்மூடித்தனமாகத் தாக்குதலை மேற்கொண்டிருந்தது அரசு.

வன்னியில் இறுதிக்கட்ட யுத்தத்தின் போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்களால் சர்வதேசத்துடன் பகைத்துக் கொண்ட இலங்கை அரசு இந்தியா, சீனா, ரஷ்யா, சிரியா, ஈரான், பர்மா, பாகிஸ்தான், லிபியா போன்ற நாடுகளுடன் தனது உறவுகளை வலுப்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான் இறுதிக் கட்டப் போரின் போது இலங்கை அரசு தனது வளங்களையும், வெளிநாடுகளின் உதவிகளையும் எவ்வாறு பயன்படுத்தியதோ அதேபோல இலங்கை அரசு மீதான போர்க்குற்றங்களை மூடிமறைப்பதற்கு மீண்டும் இராஜதந்திரப் போரை வழி நடத்துவதற்கு தனது வளங்களையும், வெளிநாடுகளின் உதவிகளையும் முழுமையாகப் பயன்படுத்துகிறது.

இதன் மூலம் இலங்கை மீது ஐ.நா . மேற்கொண்ட போர்க்குற்ற விசாரணைகளில் இருந்து தப்பிவிட முடியும் என்று இலங்கை அரசு நினைக்கிறது.


போர்க்குற்றம் தொடர்பில் இலங்கை அரசு தன்னுடன் உறவுகளுடன் உள்ள நாடுகளைக் கொண்டு போர்க்குற்ற விசாரணைக்கு முழுமையான எதிர்ப்பு நடவடிக்கையில் இறங்கியுள்ளது. இதன் முதற் கட்டமாக தனியார் போக்குவரத்துத்துறை அமைச்சர் டீ.பி. இரத்நாயக்க தலைமையில் 10 லட்சம் கையெழுத்துக்களைப் பெறும் வேட்டை ஆரம்பமாகிவிட்டது.

### முழு வீச்சில் கையெழுத்து வேட்டை

பௌத்த சிங்களப் பேரினவாதிகள் மற்றும் கத்தோலிக்க மதத் தலைவர்களும், நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராகக் களத்தில் குதித்துள்ளனர்.

கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தின் மீது தாக்குதல் நடத்த முற்பட்டபோது ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக்கின் எச்சரிக்கையால் இந்த நடவடிக்கையைக் கைவிட வேண்டிய நிலைக்கு இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், சீனா போன்ற நாடுகளிலிருந்தும் போர்க்குற்றம் தொடர்பில் இருந்து தன்னை விலக்கிக்கொள்ள இராஜதந்திரிகளின் ஆலோசனைகளைப் பெற்றுவரும் இலங்கை அரசு. இது தொடர்பாக அறிவதற்கு இலங்கையில் இருந்து பல குழுக்களையும் அந்த நாடுகளுக்கு அனுப்பியுள்ளதாகத் தெரியவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்க்குற்ற அறிக்கையின் முக்கியத்தை அறிந்து கொண்டதனால் தான் இலங்கை தொடர்ந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

இது இவ்வாறு இருக்க, இலங்கை ஆட்சி மாற்றத்தை எதிர்கொள்ளும் நிலையை ஏற்படுத்துவதன் மூலம் ஐ.நா. தனது நடவடிக்கையை ஆரம்பித்துக் கொள்ளலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை அரசு கூறுவது போல் ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் சீனா, ரஷ்யா ஆகியவற்றின் வீட்டோ அதிகாரத்தின் மூலம் ஐ.நாவின் நடவடிக்கை முறியடிக்கப்பட்டாலும் ஐ.நா. தனது அறிக்கையை மனித உரிமை ஆணைக்குழு ஊடாகவும் நகர்த்த முடியும்.

அதுமட்டுமல்லாது அதற்கான ஆதரவை வெளிநாடுகளில் இருந்து பெற்று இலங்கை மீது பொருளாதார மற்றும் இராஜதந்திர தடைகளைக் கொண்டு வரமுடியும்.

**தமிழர்களை 'வலை'யில் வீழ்த்த முயற்சி**

இந்த ஐ.நாவின் போர்க்குற்றம் தொடர்பான நடவடிக்கைகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதற்கு ஈழத்திலும் வெளிநாடுகளிலும் உள்ள தமிழ் அமைப்புக்களையும் செயற்பாட்டாளர்களையும் தனது வலைக்குள் வீழ்த்த இலங்கை அரசு பகீரத முயற்சி செய்து வருகிறது.

இன்று சர்வதேசம் எமது பக்கம் திரும்பிப் பார்க்கக் காரணமாக அமைவது என்று பார்த்தால் விடுதலைப் புலிகள் நடத்திய போராட்டம், அவர்களின் நிர்வாகம், தொழில்நுட்ப அறிவு, அரசியல்அறிவு போன்றவைதான்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டுள்ள நிலையில் போர்க்குற்றங்கள் தொடர்பில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது. ஆனால் இலங்கை அரசு மீது போர்க்குற்ற விசாரணைகளை மேற்கொள்ள முடியும். இலங்கையில் சிங்கள அரசியல் கட்சிகள் தொடக்கம் பௌத்த சிங்கள, கிறிஸ்தவ மதத் தலைவர்கள் வரையிலும் தமது நீதி, நேர்மையான தர்மத்தை மறந்து போர்க்குற்ற விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்காமல், அதற்கு பதில் கூறமுடியாமல் இருக்கும் அரசு ஐ.நாவின் அறிக்கையினை எதிர்த்து வருகிறது.

முள்ளிவாய்க்காலில் தமிழ்மக்கள் சந்தித்த தோல்வியை ஈடுகட்டுவதற்கு வேண்டுமாயின் இலங்கை அரசின் ஐ.நா. போரக்குற்றத்துக்கு எதிரான இராஜதந் திர நகர்வுகள் தோற்கடிக்கப்படவேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற சமரை விட உக்கிர சமராக எதிர்வரும் வாரங்கள் இலங்கை அரசுக்கு இருக்கப்போகின்றன. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சந்தித்த இழப்புக்களை விட இராஜதந்திரப் போர் மிகவும் கடுமையானதாகவே இருக்கப்போகிறது.

**படை அதிகாரி ஒப்புதல்**

இறுதிக் கட்டப் போரில் ஈடுபட்ட படைத்த தளபதிகள் போர்க் குற்றத்தை மேற்கொண்டதாக அந்தப் போரில் ஈடுபட்ட மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தெரிவித்திருந்தார். இறுதிக்கட்ட யுத்தத்தின்போது 55 மற்றும் 59ஆவது படைப்பிரிவுகளை வழிநடத்தியிருந்த மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தற்போது பிரிட்டனிலுள்ள இலங்கைத் தூதரகப் பாதுகாப்பு ஆலோசகராகக் கடமையாற்றுகின்றார்.

யுத்தகாலத்தின்போது தான் வழிநடத்திய படைப் பிரிவின் எந்தவொரு படைவீரரும் பொதுமக்களின் இலக்குகளைத் தாக்கவில்லை என்பதுடன் யுத்தத்தில் இறந்த விடுதலைப் புலி உறுப்பினர்களின் உடல்களை போர் தர்மங்களுக்கு ஏற்ப புதைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார்.

**முள்ளிவாய்க்காலில் நடைபெற்ற சமரை விட உக்கிர சமராக எதிர்வரும் வாரங்கள் இலங்கை அரசுக்கு இருக்கப்போகின்றன. இலங்கை அரசு விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் சந்தித்த இழப்புக்களை விட இராஜதந்திரப் போர் மிகவும் கடுமையானதாகவே இருக்கப்போகிறது.**

அவ்வாறு புதைக்கப்பட்ட இடங்களை வரைபடமாக பதிவு செய்து அதனை இராணுவத் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தாகவும் அவர் தெரிவிக்கின்றார். சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் சாதாரண உறுப்பினர்களைக் கூட பாதுகாப்புடன் அழைத்துச் சென்று ஓமந்தை சோதனைச்சாவடியில் ஒப்படைத்ததாகவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.

## துன்னாலைச் செல்வம்

விடுதலைப் புலிகளின் முன்னாள் முக்கியஸ்தர்களான தயா மாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் மட்டுமன்றி விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் தாய், தந்தையையும் பாதுகாப்பாக அழைத்துவந்து ஓமந்தை சோதனைச் சாவடியில் ஒப்படைத்ததாக தெரிவித்தார். படைத்தளபதிகளான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா, மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன ஆகியோர் போர் தர்மங்களை மதித்து நடக்காததே இன்றைய சர்வதேச நெருக்கடிகளுக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கின்றமையை அவர் சுட்டிக்காட்டுகின்றார்.

பிரிட்டன் தூதரகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது மேஜர் ஜெனரல் பிரசன்ன சில்வா தனது நண்பர்கள் மட்டத்தில் இந்தத் தகவல்களைப் பகிர்ந்துகொண்டிருந்ததாக இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆகவே போர்க் குற்றம் தொடர்பாகப் பல கோரமான செய்திப் படங்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில், இந்த யுத்தத்தில் ஈடுபட்ட படை அதிகாரிகளில் யார், யார் போர்க்குற்றம் புரிந்தார்கள் என்பது வெளிச்சத்துக்கு வருவதற்கு குறுகியகாலம்தான் இருக்கிறது.

**அரசின் மீது விழுந்த பேரிடி**

படை அதிகாரி ஒருவரே முதல் தடவையாக இரண்டு படை அதிகாரிகள் போர்க்குற்றம் இழைத்துள்ளார் கள் என்று சொன்னது இலங்கை அரசு போர்க் குற்றங்களை மூடி மறைப்பதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஒரு பேரிடியாக அரசின் தலையில் விழுந்திருக்கிறது.

இன்னும் எத்தனை படை அதிகாரிகள் இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற போர்க்குற்றங்களை வெளிப்படையாக அறிவிக்கப் போகிறார்களோ என்பது போகப்போகத்தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடையா? கொடுமையா?



அகங்காரத்தை அகங்காரமாவே சிலர் வெளியிடுவார்கள். ஆனால் அதை விடக் கொடுமை தங்கள் அகங்காரத்தைப் பணிவு மாதிரி அடக்கம் போலப் பொய்யாகச் சிலர் வெளிப்படுத்துவார்கள். அது இன்னும் மோசமானது. அருவருக்கத்தக்கது. காரணம் அகந்தையை அகந்தையாகவே வெளிப்படுத்துகிறவர்கள் என்றாவது திருந்தி விட வாய்ப்பு உண்டு. ஆனால் அடக்கம் போலக் காட்டிக் கொள்ளும் அகந்தையானவர்கள் ஒருநாளும் திருந்தமாட்டார்கள். அவர்கள் வஞ்சனையாளர்கள்.

ஒரு பெரிய பதவி வகிப்பவர் எல்லா மேடைகளிலும் எல்லா விஷயங்களையும் பற்றி நீண்ட நேரம் தப்புத் தப்பாக மனம் விரும்பாத வகையில் பேசுவார். ''நான் படிக்காதவன், ஒன்றும் அறியாதவன் பாமரன்'' என்று அடக்கமாகப் பேசுவது போல கேட்பவர்களை முட்டாள்களாக நினைத்துக் கொண்டு அபத்தம் அபத்தமாக அகங்காரத்தோடு அறிவுரைகள் சொல்வார். தான் பேசும் விசயங்களில் தன்னைத் தவிர வேறு யாருக்கும் அக்கறை இல்லை என்கிற அவரது அசட்டு அகங்காரம் அவரது ஒவ்வொரு அசைவிலும் பேச்சின் ஒவ்வொரு அசைவிலும் வெளிப்படும். அவர் உய்யவோ, உயரவோ கொஞ்சமும் வழியில்லை.

கோயிலுக்கு நன்கொடை கொடுப்பதில் கூட இந்தப் பணிவான அகங்காரத்தைப் பலர் வெளியிடுவார்கள். ''இந்த மண்டபம் நாங்கள் கட்டிக் கொடுத்தது. கட்டிக் கொடுத்தோம் என்று சொல்லக் கூடாது. எங்கள் மூலமாக சுவாமி கட்டிக் கொண்டார்'' என்பார்கள்.

கடவுளுக்கே கட்டிக் கொடுத்தவன் தான் என்ற கட்டுக்கடங்காத கர்வத்தை கோயில் பணியில் பொதிந்து வைக்கிறார்கள்.

தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டி முடித்த இராஜராஜ சோழன் பெரிய உடையார், பெரிய நந்தி, பெரிய கோயில் கட்டிய பெரிய ராஜா என்கிற பெரிய கர்வத்தில் இருந்தான். இரவு கனவில் சிவபெருமான் தோன்றினார். ''சுவாமி! கோயில் தாங்கள் தங்குவதற்கு வசதியாக இருக்கிறதா?'' என்று கேட்டான் இராஜராஜ சோழன். சுவாமியோ ''ஏதோ கிழவி கொடுத்த நிழலில் ஒதுங்கி இருக்கிறேன்'' என்று சொல்லிவிட்டு மறைந்து விட்டார்.

இராஜராஜனுக்குத் தூக்கம் போய்விட்டது. துக்கம் வந்துவிட்டது.

கிழவி கொடுத்த நிழலா.....? நாமல்லவா பெருமான் தங்க நிழல் விழாத கோபுரம் கட்டி அவருக்கு நிழல் கொடுத்தோம். கடவுள் இப்படிச் சொல்லிவிட்டாரே'' என்று கவலைப் பட்டிருக்கிறான்.

மறுநாள் விசாரித்த போதுதான் மன்னனுக்கு உண்மை தெரிய வந்தது. இராஜராஜ கோபுரத்தைக் கட்டிய போது வேலை பார்த்த சிற்பிகளுக்கு ஒரு கிழவி இலவசமாக நாள்தோறும் மோர் கொடுத்திருக்கிறார். அங்கே கிடந்த ஒரு சதுரமான கல்லிலே உட்கார்ந்துகொண்டு இந்த அறப்பணியை அவர் செய்திருக்கிறார். அவளுக்கு நாம் ஏதாவது திருப்பிச் செய்ய வேண்டும் என்று சிற்பிகள் நினைத்தார்கள். கிழவியிடமே கேட்டார்கள். ''உன் நினைவாக இந்தக் கோபுரத்தில் ஏதாவது வைக்கவேண்டும், இறைவனுக்கு நீ ஏதாவது கொடு'' என்றார்கள்.

''கொடுப்பதற்கு என்னிடம் என்ன இருக்கிறது? என்ற கிழவி தான் தினந்தோறும் உட்கார்ந்திருந்த கல்லைப் பார்த்து, ''இதுதான் இருக்கு, வேண்டுமென்றால் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள்.

கோபுரத்தின் நான்கு பக்க வேலைகளும் முடிந்தன. கூரையில் ஒளிபடாத வகையில் கல் ஒன்று வைக்க வேண்டியிருந்தது. அந்தக் கிழவியின் கல்லை எடுத்து மேலே வைத்து விட்டார்கள். அப்போது தான் மன்னர் புரிந்து கொண்டார். தான் செய்த உதவியைவிட இறைவன் அந்தக் கிழவியின் பணியைத் தான் ஏற்றிருக்கிறார் என்பதை. அத்தோடு அவரது கர்வமும் மறைந்து விட்டது.

பிரபலமான நகைக்கடை உரிமையாளர் ஒருவர் ஒரு மருத்துவமனைக்கு ஒரு கட்டம் கட்டிக் கொடுத்தார். நன்கொடையாளர் என்ற இடத்தில் தமது பெயரைப் போடாமல் பொது மக்கள் என்று பெயர் வைத்து விட்டார். அதற்கு அவர் சொன்ன காரணம் ஆச்சரியமானது;

''இந்தப் பகுதி மக்கள்தான் என் நகைக் கடையின் வாடிக்கையாளர்கள். அவர்கள் கொடுத்த காசுதானே என் கையில் சேர்ந்து இப்போது கட்டடம் ஆனது. எனவே நிச்சயமாக இது அவர்கள் பணம்.... அவர்கள் பெயர்தான் போட வேண்டும்... போட்டு விட்டேன்'' என்றார். இப்படியும் சில உயர்ந்த மனிதர்கள்.

இன்னொரு மனிதர்; ஆஞ்சநேயர் கோயிலில் பிரசாதமாக மிளகுவடை கொடுத்துக் கொண்டிருந்தார். வாங்கியவர்கள் ஆச்சரியமாக மிளகுவடையைத் திருப்பித் திருப்பிப் பார்த்தார்கள். மிளகு வடையின் ஒரு பக்கத்தில் உபயம் என்று அவர் பெயர் இறப்பர் முத்திரையிடப்பட்டிருந்தது. மறுபக்கத்தில் ''அவர் கடை விளம்பரம் இறைபணியில்'' என்று ஒட்டப்பட்டிருந்தது. கொடுமையல்லவா!

கொடை பெரிதல்ல! எதற்கு, எப்படி, எந்த மனோ நிலையில் கொடுக்கப்பட்டது என்பதே மிக முக்கியம்.

சுகி.சிவம்.

# கூகுள் தேடியந்திரத்தின் பயனுள்ள புதிய வசதி



இணையத்தில் கொட்டிக்கிடக்கும் கோடி தகவல்களில் நமக்கு தேவையானதை நொடிப்பொழுதில் தேடிக் கொடுக்கும் மிகச் சிறந்த பணியைத் தேடியந்திரங்கள் செய்கிறது.

அதிலும் கூகுளின் செயற்பாடு பிரம்மிக்க வைக்கிறது. கூகுள் தேடியந்திரம் அடிக்கடி ஏதாவது ஒரு புதிய வசதிகளை வாசகர்களுக்குக் கொடுத்துக் கொண்டே இருக்கும். தற்போதும் ஒரு புதிய வசதியை எமக்குக் கொடுத்துள்ளனர்.

இனி கூகுள் தேடியந்திரத்தில் முடிவுகளில் ஒரு பட்டன் வரும். கூகுளில் நமக்குக் கிடைக்கும் முடிவு பயனுள்ளதாக இருந்தால் அதற்கு நேரே உள்ள இந்த பட்டனை க்ளிக் செய்து வாக்குப் போட்டு விட்டால் அடுத்தவர்களுக்கும் இது பயனுள்ளதாக இருக்கும்.

கூகுள் இனி ஓட்டுக்களை வைத்தே பதிவுகளை முன்னிலைப்படுத்தும். ஆகவே மற்ற தேவையில்லாத தளங்கள் கூகுளில் வருவது முற்றிலும் தடுக்கப்படும்.

எப்பொழுதுமே கூகுளில் ஏதாவது ஒரு புதிய வசதியை பொது சேவைக்கு வெளியிடுவதற்கு முன் அந்த வசதியை சோதனை(Experimental)மூலமாகத் தான் வெளியிடுவார்கள். அதேபோல்தான் இந்த +1 வசதியையும் நமக்கு அறிமுகப்படுத்தி உள்ளார்கள்.

இந்த வசதியை உங்கள் கணினியிலும் கொண்டு வர முதலில் உங்கள் கூகுள் கணக்கில் நுழைந்து கொள்ளுங்கள். பிளாக்கர், யூடுப், ஜிமெயில் இப்படி எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. அடுத்து இந்த லிங்கில் க்ளிக் செய்து கூகுள் தளத்துக்குச் செல்லுங்கள்.

அங்கு ஒரு விண்டோ தோன்றும். அதில் உள்ள Join this experimental என்ற ஒரு பட்டன் இருக்கும் அதில் க்ளிக் செய்யுங்கள். அந்த பட்டனை அழுத்தியவுடன் அந்த +1 பட்டன் உங்கள் கூகுள் கணக்கில் சேர்ந்து விடும்.

# முப்பரிமாணத்துடன் கூடிய ஐபோன்கள் விரைவில் அறிமுகம்



கண்ணாடி அணிய அவசியமில்லாத 3டி ஐபோன்களை தயாரித்து விற்பனைக்கு விட உள்ளது ஆப்பிள் நிறுவனம்.

தற்போதுள்ள 3டி வீடியோக்களும், படங்களும் பார்ப்பதற்கு அதற்கான பிரத்தியேக கண்ணாடிகள் அவசியம் தேவை.

தற்போது அப்பிள் நிறுவனம் அதற்கான திரைகளைத் தயாரித்து அதன் வழியாகப் படங்களைக் காண்பிக்க வைப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறது.

இதற்காக ஹாலோகிராம் சங்கேத குறியீடுகளை உபயோகித்து சோதனைகளை நடத்தி வருகிறது. இந்த முயற்சி வெற்றி பெறும் பட்சத்தில் ஐபோனிலும், கணினியிலும் பயன்படுத்த முடிவு செய்துள்ளது.

# கணினியை மறுதொடக்கம் செய்யாமல் மற்றொரு இயங்குதளத்துக்கு மாற்றுவதற்கு வழியுண்டு...

ஒன்றுக்கு மேற்பட்ட இயங்குதளங்களை எமது பயன்பாட்டிற்கு ஏற்ப உதாரணமாக Windows இருந்தாலும் Movies, Cricket Live பொதுவாக இணையத்தளப் பயன்பாட்டுக்கு என்று Ubundu, Redhat போன்ற இயங்குதளங்களைப் பயன்படுத்துவோம்.

சில நேரங்களில் விண்டோஸ் பயன்படுத்திக் கொண்டிருக்கும் போது முக்கிய குறிப்புக்காக இணையம் தேவைப்படும் போது கணினியை மறுதொடக்கம் செய்து உபுண்டு செல்ல நேரம் தேவைப்படும் என்று கருதி விண்டோஸில் சென்று விடுவோம்.

இவ்வாறு செல்வதைத் தவிர்க்க Sun virtual box என்ற இந்த மென்பொருளைத் தரவிறக்கம் செய்து விண்டோஸ் அல்லது உபுண்டுவிலோ நிறுவிக் கொள்ளுங்கள். விண்டோஸ், உபுண்டு இதற்கு ஏற்றவாறு Sun virtual boxயைத் தரவிறக்கம் செய்து கொள்ளுங்கள்.

பிறகு அதில் உங்களுக்குத் தேவையான மற்றொரு இயங்குதளத்தை நிறுவிக் கொள்ளுங்கள். தேவைக்கு ஏற்றவாறு ஒரு இயங்குதளத்தில் இருந்து மற்றொரு இயங்குதளத்திற்கு சில நொடிகளில் மறுதொடக்கம் ஏதும் செய்யாமல் Virtual box வந்து தேர்வு செய்யலாம்.

இதில் ஒரே ஒரு குறை என்னவென்றால் System Speed கொஞ்சம் குறைவானது. என்றாலும் இரண்டு இயங்குதளமும் தனித்தனி நினைவகமும் தேவை இல்லை. இரண்டும் பகிர்ந்து கொள்ளும் என்பது கூடுதல் சிறப்பு. கணினியும் பாதுகாப்பாக இருக்கும்.

# கோப்புகளைச் சேமிக்க




உங்களது இணையத் தளத்தில் கோப்புக் களை இணையத்தளங் களில் பாதுகாப்பாகச் சேமித்து வைக்க முடி யும். இதன் மூலம் எங்கிருந்து வேண்டு மானாலும் உபயோகப் படுத்தலாம்.

இந்தத் தளத்தில் உங்களின் கோப்புக்களை இணையம் மூலம் இலவச மாகச் சேமித்து வைக்க லாம். இந்தத் தளத்தில் சென்று உங்களைப் பதிவு செய்து கொண்டு சேமித்து வைக்கலாம்.

இங்கு 5GB அளவுடைய கோப்புக்களை இலவசமாகச் சேமிக்கலாம். அதற்கு மேற்பட்டதாயின் கட்டணம் செலுத்த வேண்டும். இந்த இணைய சேமிப்புத் தளமானது IPHONE, ANDROID தொலைபேசிகளில் மென்பொருளாகத் தரவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

**இணையத்தள முகவரி**

உங்களின் MP3 வடிவிலான பாடல்களை சேமித்து பின்னர் அந்தத் தளத்திலே கேட்டு ரசிப்பதற்கு WWW.MOUGG.COM உதவுகிறது. இந்த தளத்தில் பாடல்களை சேமித்து பின்னர் அந்தத் தளத்திலே கேட்க முடியும்.

இங்கு இலவசமாக 1எஆ அளவுடைய பாடல்களை சேமிக்க முடியும். மேலதிகமாக சேமித்து வைக்க கட்டணம் செலுத்த வேண்டும். இந்த தளத்துக்குச் சென்று உங்களைப் பதிவு செய்து கொண்டால் இங்குள்ள UPLOAD என்பதைக் கிளிக் செய்து பாடல்களை சேமிக்க முடியும். இந்தத் தளமும் APPLE, ANDROID அப்பிளிகேசன் மூலம் தொலைபேசிகளில் மென்பொருளாகத் தரவிறக்கம் செய்து பாடல்களைப் பதிவு செய்து கேட்க முடியும்.

# தாவர உணவுகளை மட்டும் உண்ணும் சிலந்தியினம் கண்டுபிடிப்பு

தாவர இனங்களை மட்டும் உணவாக எடுத்துக் கொள்ளும் சிலந்திவகை ஒன்றை அறிவியலாளர்கள் தற்போது கண்டுபிடித்துள்ளனர்.

பகீரா கிப்லிங்கி (Bagheera kiplingi) எனப்படும் இவ்வகை சிலந்திகள் மத்திய அமெரிக்காவிலும், மெக்சிக்கோவிலும் வாழ்ந்து வருகின்றன. இவையே சிலந்தி வகைகளில் தாவர உணவை மட்டும் உண்பவை.

இதுவரை கண்டறியப்பட்ட கிட்டத்தட்ட 40,000 சிலந்தி வகைகள் அனைத்தும் ஊனுண்ணி வகைகளாகும். இது குறித்த ஆய்வுக் கட்டுரை நடப்பு உயிரியல் என்ற அறிவியல் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. ஐக்கிய அமெரிக்காவின் பென்சில் வேனியாவின் விலனோவா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் கறி என்பவரின் தலைமையில் இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. பாயும் சிலந்தி தேள் வகுப்பைச் சேர்ந்த இவை 5-6 மில்லி மீற்றர் நீளமானவை. புரதங்கள் நிறைந்த அக்காசியா வகைத் தாவரங்களின் குருத்துக்களையே இவை பெரும்பாலும் உண்கின்றன. இவ்வகை சிலந்திகளின் ஊனுண்ணாமை முதற் தடவையாகக் கொஸ்டாரிக்காவில் 2001ஆம் ஆண்டில் எரிக் ஒல்சென் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் 2007ஆம் ஆண்டில் கிறிஸ்டோபர் மீகன் என்பவரால் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் தற்போது பேராசிரியர் கறியின் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கறி தாவரங்களை மட்டுமே தேடிச் செல்லும் சிலந்தி வகை உலகில் இதுவொன்றே" எனத் தெரிவித்தார். இவை பாயும் சிலந்திகளாதலால் தமது உணவுக்காக வலைகளைப் பின்ன வேண்டிய அவசியம் இல்லை.

# குரோம் நீட்சி: பல சுட்டிகளை ஒரே நேரத்தில் திறப்பதற்கு

பயர்பொக்ஸ்(Firefox) பிரவுசருக்கு அடுத்தபடியாகத் தற்போது பலரால் பயன்படுத்தப்படும் பிரவுசர் Google Chrome ஆகும்.


விரைவில் பயர்பொக்ஸ் பிரவுசருக்கு இணையாக வந்து விடும் எனப் பலராலும் நம்பப்படுகிறது. பயர்பொக்ஸ் நீட்சிகள்(Addons) போலவே குரோம் நீட்சிகளும் (Extensions) பயன்படுத்தப்படுகின்றன.

பல சுட்டிகளை ஒரேநேரத்தில் அதாவது ஒரே கிளிக்கில் நம்மால் திறக்க இயலாது.

ஒவ்வொரு சுட்டியாகத் தனித்தனியாகக் கிளிக் செய்து திறக்க வேண்டும். இந்த நீட்சி இதனை எளிதாக்குகிறது.

உங்கள் மவுசின் வலது பட்டனை அழுத்திக் கொண்டு அனைத்துச் சுட்டிகளையும் தேர்வு செய்தால் போதும். அனைத்து சுட்டிகளும் தனித்தனியாகத் திறந்து கொள்ளும்.

உங்கள் வசதிக்கேற்ப தெரிவு செய்யும் மவுஸ் பட்டனையோ அல்லது கூடுதலாக ஏதாவது ஒரு பட்டனையோ மாற்றிக் கொள்ளலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஓலைக் கொட்டிலாக இருந்து இன்று நிமிர்ந்து நிற்கும் தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை

ஈழத்தின் வடகரையை அணி செய்யும் பாக்குநீரிணையில் அலை யோசையைக் கேட்டுக் கொண்டிருக்கும் பருத்திமா நகரில் பயிர்ச் செய்கைக்குரிய நீர்வளமும் நிலவளமும் இணைந்து காணப்படுவது தம்பசிட்டிப் பிரதேசம். இந்தத் தம்பசிட்டிக் கிராம மக்களுக்கு கல்வியறிவு போதிக்க வேண்டுமென்ற நோக்கோடு 1850 ஆம் ஆண்டு ஆங்கிலேய மெதடிஸ்த மிஷனரியினரால் தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. இந்தப் பாடசாலையின் ஆரம்ப காலம் தொடர்பாக எந்தவிதமான எழுத்து மூல ஆதாரங்களும் கிடைக்கப் பெறவில்லை. எனினும் கிடைக்கப் பெற்ற வாய்மொழிச் சான்றாதாரங்கள் மூலமாக, ஆரம்பத்தில் இந்தப் பாடசாலையின் அதிபர்களாக மெதடிஸ்த மிஷனரிப் போதகர்களே இருந்துள்ளனர் என அறியமுடிகின்றது. அத்துடன் ஓலைகளால் வேயப்பட்டிருந்த இரண்டு கொட்டில்களில் மாணவர்கள் நிலத்திலிருந்தே கல்வி கற்றனர் எனவும் அறியமுடிகின்றது.

1900 ஆம் ஆண்டளவில் பனை மரங்களினால் நிர்மாணிக்கப்பட்ட ஐம்பது அடி நீளமான மண்டபமொன்றும், இரண்டு இருபத்தைந்து அடி நீளமான கொட்டில்களும் பாவனைக்கு இருந்திருக்கின்றன. அத்தோடு இணை வாங்குகள் சிலவும் பயன்பாட்டில் இருந்துள்ளன. தற்போது அமைந்துள்ள நிலையான மண்டபத்திலிருக்கும் எழுத்து மூலச்சான்றின்படி இந்த மண்டபம் 1939 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

இந்தப் பாடசாலையின் நீண்ட வரலாற்றிலே 1890 ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் டொனால்ட் கந்தையா என்பவர் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். 1920 முதல் 1930 வரை செல்லையா என்பவர் தலைமை ஆசிரியராகச் சேவையாற்றியுள்ளார். 1930 முதல் 1950 வரை ஜே. எம். ஆழ்வாப்பிள்ளை என்பவர் தலைமை ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார் என அறியமுடிகின்றது. இவரது காலப் பகுதியில் பாடசாலை கல்வி, ஒழுக்கம் போன்றவற்றில் சிறந்து விளங்கியமையால் பாடசாலையின் 'பொற்காலம்' எனவும் போற்றப்படுகின்றது. 1950 தொடக்கம் 1975 வரையான ஆண்டுகளில் தம்பிப்பிள்ளை, நவாலி செல்லையா, மயில்வாகனம், வீரகத்திப்பிள்ளை, மு.இராஜதுரை, கந்தசாமி ஆகியோர் தலைமை ஆசிரியர்களாகக் கடமையாற்றியுள்ளனர். இந்தக் காலத்தில் தான் இந்தப் பாடசாலை தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை எனப் பெயர் மாற்றம்பெற்றது.

1976 ஆம் ஆண்டு இந்தப் பாடசாலையின் அதிபராக நா.சந்திரசேகரம் பொறுப்பேற்றார். இந்தக் காலத்தில் ஆறு ஆசிரியர்களும் 215 மாணவர்களும் இருந்துள்ளனர். இவரின் காலத்தில் ஓலைக் கொட்டில்கள் அகற்றப்பட்டு நிரந்தர வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட்டன. இவரது சிறப்பான நெறிப்படுத்தலால் பாடசாலை பல்வேறுதுறைகளிலும் வளர்ச்சி பெற்றது. கல்வி, கலை, ஒழுக் கம், கலாசாரம், விளையாட்டு போன்ற சகல துறைகளிலும் சிறந்து விளங்கியது. இவர் ஆரம்பித்த சமய வழிபாட்டு முறைகள், பூசை ஒழுங்குகள் என்பன இன்று பேணப்பட்டு வருகின்றன.




இவரது காலத்தில் பாடசாலையின் அயற்கிராமங்களான இன்பருட்டி, அல்வாய், புலோலி, மடத்தடி, வியாபாரிமூலை போன்ற பகுதிகளிலிருந்து அதிகளவான மாணவர்கள் இந்தப் பாடசாலையில் இணைந்தனர். இத 'னால் 215 ஆகவிருந்த மாணவர் எண்ணிக்கை 700 ஐ எட்டியது. சகல வகுப்புகளிலும் மூன்று பிரிவுகள் வைக்கப்பட்டன. இடப்பற்றாக்குறை காரணமாக அருகிலிருந்த பழைய வீடும் பாடசாலையின் தேவைக்குப் பயன்படுத்தப்பட்டது.

இதுவரை காலமும் தரம் ஐந்து வரையான வகுப்புக்களைக் கொண்டிருந்த இந்தப் பாடசாலை 1985 முதல் தரம் ஆறு வகுப்பையும் செயற்படுத்தியது. அத்துடன் பாடசாலையின் தரமும் உயர்ந்தது.

**சரணா**

1995 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்திலேயே அதிக புள்ளிகளைப் பெற்று மாவட்ட முதல் நிலை மாணவனாக பா.செந்தில் என்ற மாணவன் தெரிவாகியமை இந்தப் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதாகும். (தொடரும்)


# வடமராட்சி கிழக்கு மக்களின் அவசர தேவைகள் நிறைவேற்றப்படுமா?

கடந்த 30 ஆண்டுகால யுத்தம் வடமராட்சிப் பகுதியைப் பெருமளவில் பாதித்துள்ளது. அந்த வகையில் வடமராட்சிப் பகுதியில் பெரும் அழிவுகளைச் சந்தித்த பிரதேசங்களில் வடமராட்சி கிழக்குப் பகுதி முக்கியமானது. இது கடற்கரையோரமாக அமைந்துள்ளதால் பிரதேசத்தின் பெரும்பகுதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடக்கப்பட்டிருந்தது. இதனால் போரின்போது மிகவும் மோசமான அழிவுகளைச் சந்தித்தது. ஆனாலும் யுத்தம் விட்டுச்சென்ற வடுக்களைத் தாங்கியவாறு அபிவிருத்தியை நோக்கிப் பயணித்துக் கொண்டு இருக்கிறது. இந்தப் பிரதேசம் மருதங்கேணிப் பிரதேச செயலக நிர்வாக எல்லைக்குள் இருக்கின்றது. பிரதேச செயலாளராக திருலிங்கநாதன் கடமையாற்றி வருகின்றார்.

18 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய இந்தப் பிரதேசத்தில் 11 பிரிவுகள் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளன. ஏனைய ஏழு பிரிவுகளில் வெற் றிலைக்கேணி, போக்கறுப்பான், முள்ளியான், நாகர்கோயில் மேற்கு, நாகர் கோயில் கிழக்கு, நாகர்கோயில் தெற்கு, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகள் இன்னமும் விடுவிக்கப்படாத நிலையில் உள்ளன.

இதேவேளை விடுவிக்கப்பட்ட 11 கிராம சேவகர் பிரிவுகளிலும் 3ஆயிரத்து 800 குடும்பங்களைச் சேர்ந்த 12 ஆயிரம் பேர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் வாழ்வாதாரத் தேவைகள் தொண்டு நிறுவனங்களினால் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாகப் பிரதேச செயலாளர் எஸ்.திருலிங்கநாதன் தெரிவித்தார்.

இதேவேளை போக்கறுப்பான், வெற்றிலைக்கேணி, முள்ளியான் ஆகிய பகுதிகள் உயர்பாதுகாப்பு வலயங்களிலிருந்து நீக்கப்பட்டு இந்த மாத இறுதியில் மீள்குடியமர்வு நடைபெறவுள்ளதாக மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பிரதேசத்தில் 874 குடும்பங்கள் மீள் குடியமர்வதற்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.



ஏனைய கிராம சேவகர் பிரிவுகளான நாகர்கோயில் மேற்கு, நாகர் கோயில் கிழக்கு, நாகர்கோயில் தெற்கு, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகள் இன்னும் உயர் பாதுகாப்பு வலயத்தினுள்ளேயே உள்ளன.

பாடசாலைகளைப் பொறுத்தவரை வடமராட்சி கிழக்கில் 19 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் தற்போது 13 பாடசாலைகள் இயங்கி வருகின்றன. ஏனைய பாடசாலைகள் இன்னமும் விடுவிக்கப்படாத பகுதிக்குள் உள்ளன.

தற்போது இந்தப் பகுதியில் இயங்கிவரும் 13 பாடசாலைகளில் கல்வியில் மாணவர்கள் பாராட்டப்படக்கூடிய வகையில் தமது முன்னேற்றத்தை காட்டி வருகின்றனர். இவர்கள் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை, புலமைப் பரிசில் பரீட்சை என்பவற்றில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.

போக்குவரத்தைப் பொறுத்தவரையில் வடமராட்சி கிழக்குக்கான பஸ் சேவைகளைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலையினர் வழங்கி வருகின்றனர். அம்பன், பொற்பதி, மணற்காடு நாகர்கோயில் பகுதிகளிற்கென 26 பஸ் சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன. காலை 5.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரை ஒழுங்காக இந்தச் சேவைகள் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கிழக்குக்கான மருத்துவ சேவையை மருதங்கேணி வைத்தியசாலை மேற்கொண்டு வருகின்றது. இங்கு 2 வைத்தியர்கள், 5 பெண் தாதிய உத்தியோகத்தர்கள், ஆண் தாதிய உத்தியோகத்தர் ஒருவரென 8 பேர் கடமையாற்றி வருகின்றனர். வெளிநோயாளர் பிரிவு, பற்சிகிச்சை நிலையம் ஆகியன இங்கு அமைக்கப்பட்டுச் சிறப்பான சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மாதாந்தம் சுமார் 1000 பேர் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை இந்த வைத்தியசாலையின் அபிவிருத்தி தொடர்பாகப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் தெரிவிக்கையில்:-

"இங்கு 'என்றிப்' திட்டத்தின்கீழ் 27 மில்லியன் ரூபா செலவில் விடுதிகள், வெளிநோயாளர் பிரிவு என்பன புனரமைக்கப்படவுள்ளன. அத்துடன் தண்ணீர்த் தாங்கியும் அமைக்கப்படவுள்ளது'' எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இந்தப் பிரதேச மக்களின் அவசர தேவைகளை நிவர்த்தி செய்யவென 2 அம்புலன்ஸ் வாகனங்கள் சேவையில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் மேலதிக சிகிச்சைகள் பெறும் நோயாளிகளுக்கு இது பெரும் உதவியாக அமைந்துள்ளது.

அத்துடன் நெய்தல் நிலமாகக் காணப்படும் இந்தப் பகுதியின் பிரதான தொழிலாக மீன்பிடி விளங்குகின்றது. இவர்களின் மீன்பிடித் தொழிலை மேம்படுத்த தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வருவதாகத் தெரிகின்றது. ஆனாலும் பாதுகாப்பைப் பொறுத்த வரையில் இந்தப்பிரதேசத்தில் பொலிஸ் நிலையம் ஒன்று அமையாதது பொதுமக்களுக்குச் சிரமங்களை ஏற்படுத்துகின்றது.

தற்போது நாகர்கோயில் வரையுள்ள மக்கள் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்துக்கும் நாகர்கோயில் தொடக்கம் வடமராட்சி கிழக்கின் ஏனைய பகுதி மக்கள் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்துக்கும் செல்லவேண்டியுள்ளது. குறிப்பாக இந்தப்பகுதியில் ஒரு சம்பவம் இடம்பெற்றால் அது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் அல்லது பருத்தித்துறைப் பொலிஸார் வருவதற்கிடையில் குற்றவாளிகள் தப்பித்து விட வழியேற்படுகின்றது.

**ஹரீஸ்**

அப்பகுதியில் பொலிஸ் நிலையம் ஒன்றை நிறுவ ஏற்கனவே கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகப் பொதுமக்களும் அரச அதிகாரிகளும் தெரிவிக்கின்றனர். எனவே இப்பிரதேசத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென தனியான பிரதேச செயலகம், மருத்துவமனை மற்றும் ஏனைய அரச அலுவலகங்கள் இருப்பதைப் போன்று தனியான பொலிஸ் நிலையம் ஒன்றும் அமையவேண்டும்.

ஏனைய பிரதேச மக்களைப்போல வடமராட்சி கிழக்கு மக்களுக்கும் பொலிஸ் சேவை கிடைக்க வேண்டும் என்பதே அனைவரதும் வேண்டுகோளாக உள்ளது. *(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VISA - வீசா
Consultancy Service

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,***

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC**, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)


## விபத்துகளில் இருவர் காயம்

வீதி விபத்துக்களில் சிக்கி இருவர் காயமடைந்தனர். முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பகுதியில் வீதியோர வடிகாலுக்குள் மோட்டார் சைக்கிள் சில்லு இறங்கியதில் இதே இடத்தைச் சேர்ந்த ஆர். கபிலராஜ் (வயது 23) என்பவரும் மந்துவில் பகுதியில் வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் தூக்கி வீசப்பட்டு இதே இடத்தைச் சேர்ந்த ரி.விஜயகுமார் (வயது 24) என்பவரும் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

(ம-207)


**காணி விற்பனைக்கு**

3 பரப்பு விலாசமுள்ள காணி நல்லூர் வலயக்கல்வி அலுவலகம் அருகாமையில் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

தொடர்பு:- 0770569696.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 11.05.2011 விநியோகிக்கப்படும்.

விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். மீண்டும் இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

* றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* ஜென்சிபாம், முதலாம் கட்டை, பருத்தித்துறை
* துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்
* P.ரவி தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி

T.P.: 021 222 2867, 0776090926

(3902)(49-50)


# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
## குமாரசாமி நந்தகோபன்

மலர்வு
07.02.1989
உதிர்வு
30.04.2009

*திதி: ஸப்தமி (10.05.2011)*

ஆண்டுகள் இரண்டு கடந்துவிட
தெரிவது எம் நினைவில் உன் ஆசை முகம்
நீ காற்றிலே கலந்த செய்தி
கண்களை ஈரமாக்க
நேற்றுவரை சிரித்தவனே.....
நெஞ்சமெல்லாம் உன் நினைவு....
ஆண்டுகள் இரண்டாகினும்
இறையடியில் நீயிருப்பாய்...
இதயமதில் அமைதி கொள்வோம்
உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை
வேண்டுகின்றோம்.

அப்பா, அம்மா, அக்காமார், அண்ணா,
அத்தான், தம்பி (சிந்துஜன்).

T.P: 026 320 4310 (3893) (49,19,21)


# இசைப்பிரியர்களே



பிரபல பாடகர் S. திவாகரோடு யாழ். இளங்கலைஞர்கள் இணையும்
**"சுருதிலயா இசைக்குழு"**
சகோதர மொழிக் கலைஞர்களையும் தேவைக்கேற்ப சக்தி சூப்பஸ்ரார் கலைஞர்களையும் இணைக்கும் கலகலப்பான இசை நிகழ்வுகளை தங்கள் ஆலயங்களில் நிகழ்த்த எம்மை அழைத்து நிகழ்வுகளைச் சிறப்பியுங்கள்.

தொடர்புகளுக்கு: **ஜெயா சவுன்ஸ்,**
**சூராவத்தை,**
**சுன்னாகம்.**
T.P: 0771107601, 0776913010


**பக்தி இசை நிகழ்வு**

பிரபல பாடகர் திவாகர் அவர்களின் புதல்வி தினிசாவும் இணைந்து TMS அவர்களின் பக்திப் பாடல் நிகழ்ச்சிகளையும் மட்டுப்படுத்தப்பட்ட வாத்தியங்களுடன் அழைத்து மகிழலாம்.


தொடர்புகளுக்கு: பாடகர் S. திவாகர்
தொடரூந்து சாலை,
சூராவத்தை, சுன்னாகம்.

(3998)


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10.06.1931
மறைவு
02.05.2009



# அரியகுட்டி துரைராஜா

அன்பின் திருவுருவாய் உதிரத்தை உரமாக்கி
மெழுகாக உந்தனை வருத்தி எம் வாழ்வில் விளக்கேற்றி
நானிலத்தில் உயர்வுடன் நாம் வாழ வழி தந்த எம் தந்தையே!
காலன் உம்மைப் பறித்து இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
ஆண்டாண்டு காலத்துக்கும் நிலைத்த நினைவுகளின்
நீட்சியுடன் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்தித்து நிற்கின்றோம்.

[illegible] வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (3918)

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

(49,19,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மின்பாவனைக்கு மின்சார சபைதான் காரணமா?

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்திப் பணிகள் பொது மக்களை எந்தளவுக்குச் சென்றடைகின்றன என்பது பற்றிக் கொஞ்சம் சிந்திக்க வேண்டும்.

இவற்றில் மின்சார சபையால் மேற்கொள்ளப்பட்டு வரும் மின் இணைப்புத் தொடர்பான அபிவிருத்திப் பணிகள் பூரணமாக அனைத்துப் பகுதிகளுக்கும் கிடைக்கின்றதா?

யாழ்.மாவட்டத்தில் மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்கள் உட்பட ஏனைய பிரதேசங்களுக்கும் 'வடக்கின் வசந்தம்' போன்ற திட்டங்கள் மூலம் மின்சாரப் பணிகள் துரிதப்படுத்தப்பட்டு வருவதாகவும் மின்சார சபையால் தெரிவிக்கப்பட்டது.

அண்மைக்காலமாக பல பிரதேசங்களிலும் சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பயன்படுத்துவோர் அதிகரித்திருப்பதுடன் பெரும் எண்ணிக்கையான குற்றவாளிகள் மின்சார சபையின் தேடுதல் நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்டும் உள்ளனர்.

''திருடனாய் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது'' என்பது போல் இவ்வாறு சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெறுபவர்கள் தான் இதில் கவனம் கொள்ள வேண்டிய தேவையுள்ளது.

வளர்ந்து வரும் இயந்திர மயமான வாழ்க்கையில் மனிதனின் அன்றாடத் தேவைகளும் இயந்திரச் சாதனங்களால்தான் நிறைவேற்றவேண்டிய நிலை உள்ளது.

இதனால் தமது தேவையின் நிமித்தம் சட்ட திட்டங்களை மீறி சட்டவிரோதமான மின்சாரப் பாவனையைப் பெற வேண்டிய கட்டாயத்துக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

அபிவிருத்திப் பணிகள் சீரான முறையில் மேற்கொள்ளப்பட்டால் ஏன் தான் மக்கள் இத்தகைய செயல்களைச் செய்வதற்குத் தூண்டப்படுகின்றார்கள்.

பொதுமக்கள் நீதிமன்றத்தில் தமக்குக் கிடைக்கும் அபராதங்களை விட தமது தேவைகள் எந்தளவுக்கு நிறைவேற்றப்படுகின்றன என்பதில் தான் குறிக்கோளாக இருப்பார்கள்.

யாழ்.மாவட்டத்தின் நகர வாழ்க்கையைப் போல் கிராமத்தவர்களும் தமது வாழ்வியலை மாற்றப்பழக்கப் படுத்திக் கொண்டார்கள்.

இந்த நிலையில் கிராமப் புறங்கள் மறைவான இடங்களாக இருப்பதால் சட்டவிரோதமான செயல்களைச் செய்வதற்கு சூழலும் ஒரு விதத்தில் காரணமாக அமைகின்றது.

இவ்வாறு சட்டவிரோதமான மின்சாரப் பாவனையால் பொதுமக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் அல்லது விளைவுகள் தொடர்பாக மின்சாரசபையால் விழிப்புணர்வான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமானதாகும்.

சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்ளும் பயனாளிகள் மின்சாரம் பெறும் முறைகள் தொடர்பான பூரணமான தகவல்களைப் பெற்றுக் கொண்டிருக்கமாட்டார்கள்.

இதனால் உயிராபத்தான சம்பவங்களையும் எதிர்கொள்ளவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராமப் புறங்களில் மின்சார சபையினூடாக அபிவிருத்திப் பணிகளை துரிதப்படுத்த வேண்டியது அவசியமான தேவைகளில் ஒன்றாகும்.

குறைந்த கட்டணங்களிலும் கடனுதவி அடிப்படையிலும் மானிய முறையில் கிராமசேவகர் பிரிவுகளூடாக மின்சாரம் பெறும் தேவை தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி தேவைகளுக்கேற்ப மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் அவசியமானதாகும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மின்சார சபையினூடாக துரித கதியில் மேற்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியமாகும்.

இதன்மூலம்தான் சட்டவிரோத மின்சாரப் பாவனையாளர்களைக் கட்டுப்படுத்த முடியும். இல்லாவிடில் எத்தனை தடவைகள் தண்டம் அறவிட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டாலும் தமது தேவைகளை நிறைவேற்றுவதில் தான் அவர்களது கவனம் இருக்கும்.

அண்மைக்காலமாக யாழ்.மாவட்டத்தில் அதிகரித்துவரும் இன்னொரு முக்கிய பிரச்சினை அடிக்கடி மின்சாரம் தடைப்படுதல்.

அடிக்கடி இடம்பெறும் மின்தடையால் பவனையாளர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

உயர் மின்னழுத்தப் பணிகள் நடைபெற்றுவருவதால் மின்சாரத்தைக் குறித்த நேரங்களுக்கு இடைநிறுத்தி மீண்டும் வழங்கி வருவதாக மின்சார சபையினால் தகவல் தெரிவிக்கப்படுகிறது.

**பாண்டியம்மா**

மக்களின் தற்போதைய அன்றாடத் தேவைகளில் மின்சாரப் பாவனையானது இன்றியமையாத ஒன்றாக இருக்கும் சூழ்நிலையில் அடிக்கடி மின்சாரம் தடைப்படுதல், அல்லது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பிரதேசங்களுக்கு மின்சாரம் வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனம் எடுக்கவேண்டியது அவசியமான ஒன்றாக உள்ளது.

பொதுமக்களுக்கான அபிவித்திப் பணிகளைச் செய்யும் அரசு அவை உரிய வகையில் எவ்வாறான படிமுறைகளில் நிறைவேற்றப்படுகின்றன என்பது தொடர்பாகவும் அக்கறை கொள்ள வேண்டும்.

இவ்வாறான தேவைகள் நிறைவேற்றப்படாமல் விட்டால் சட்டவிரோத மின்பாவனையாளர்கள் அதிகரித்துச் செல்லும் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும். ✱

பிரவேசம் இலவசம் !
एडसिल
edCiL
INDIAN
Education Fair
முதல்முறையாக யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் இந்தியக் கல்விக் கண்காட்சி
17th, 18th May 2011
யாழ்ப்பாணம் பொது நுலகத்தில்
17th - 9.00 am to 5.00 pm
18th - 9.00 am to 1.00 pm
இந்திய கல்விக் கண்காட்சி 2011 உங்களுக்கு வழங்குவது என்ன?
- பட்டதாரி மற்றும் முதுநிலைப் பட்டதாரி கல்வியை வழங்கும் இந்தியக் கல்வி நிலையங்கள்
- இலவச தொழில்சார் வழிகாட்டுதலும் ஆலோசனையும்
- தொழில் பயிற்சி நிலையங்கள்
- தொழில்சார் திட்டமிடல் பற்றிய கருத்தரங்குகள்
- விமானப் போக்குவரத்துத் துறை கல்வி நிலையங்கள்
- வியாபாரப் பாடசாலைகள்
- த்கவல் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் கல்லூரிகள்
- தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையங்கள்
- சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவ கல்வி நிலையங்கள்
- ஹொட்டேல் முகாமை மற்றும் சுற்றுலா கல்வி நிலையங்கள்
- நிதி மற்றும் வங்கித் தொழில் கல்வி நிலையங்கள்
- கடற் போக்குவரத்துக் கல்வி நிலையங்கள்
- கல்வி ஆலோசகர்கள்
- உள்ளக வடிவமைப்பு மற்றும் கட்டடக்கலை நிலையங்கள்
- செயலக அலுவல் பயிற்சி நிலையங்கள்
- மருத்துவ மற்றும் தாதிமார் கல்வி நிலையங்கள்
- மூன்றாம்நிலை கல்வி நிலையங்கள்
- நுண்கலை மற்றும் நவநாகரிகக் கலை பாடசாலைகள்
ORGANISED BY
edCiL
EdCIL (India) Limited
A GOVERNMENT OF INDIA ENTERPRISE
SUPPORTED BY
CONSULATE GENERAL OF INDIA JAFFNA
PROFESSIONAL EXHIBITION ORGANISER
LECS
LANKA EXHIBITION
SAES
4th Floor, Automobile Association Building,
No. 40, Sir Mohamed Macan Marker Mw, Colombo 03
Tel: 011 2390560-2 Fax: 011 2390563
E-mail: sudesh@saexhibitions.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10 மே 2011 செவ்வாய்க்கிழமை

# உயிரிழந்த ஒசாமாவின் சடலத்தை மாடிப்படி வழியாக இழுத்து வந்தனர்

## தப்பிய மனைவிகளில் ஒருவர் தகவல்

இஸ்லாமாபாத், மே 10

பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் ஆடம்பர பங்களாவில் தலைமறைவு வாழ்க்கை நடத்திய பின்லேடனை அமெரிக்கச் சிப்பாய்கள் சுட்டுக் கொன்றனர்.

அந்த பங்களாவில் பின்லேடன் தன்னுடைய குழந்தைகளுடன் 5 ஆண்டுகளாக இரகசியமாக வாழ்ந்துவந்தார். தாக்குதல் சம்பவத்தில் தப்பிய பின்லேடனின் மனைவிகளில் ஒருவர் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளிடம் நடந்த சம்பவம் குறித்து விவரித்தார்.

அவர் கூறுகையில், பின்லேடன் அபோதாபாத் பங்களாவில் மாடியில் தங்கியிருந்தார்.

அதில் 3 அறைகள் உள்ளன. அமெரிக்கச் சிப்பாய்கள் திடீர் என்று மாடியில் இறங்கித் தாக்குதல் நடத்தினார்கள். இதில் பின்லேடன் உயிரிழந்ததும் அவரது உடலை மாடிப்படிகள் வழியாக தர தரவென்று இழுத்துக் கொண்டு கீழே வந்தனர் என்றார்.

இதேபோல், பின்லேடனின் மகளும் பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகளிடம், தனது தந்தையை அமெரிக்கச் சிப்பாய்கள் கொன்று மாடிப்படிகள் வழியே இழுத்துக் கொண்டு வந்ததைத் தான் நேரில் பார்த்தார் எனத் தெரிவித்துள்ளார். இந்தத் தகவலை பாகிஸ்தான் இராணுவ அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். பின்லேடன் அமெரிக்காவைப் பயமுறுத்தி வைத்திருந்தாலும், அவரது மறைவுக்குப் பின்னர் அவரது குழந்தைகள் எந்த நாட்டிலும் குடியுரிமையின்றி இருக்கிறார்கள்.

1994ஆம் ஆண்டு சவூதி அரேபியா, பின்லேடனின் குடியுரிமையை இரத்துச் செய்துவிட்டது. அதன் காரணமாக அவரின் பிள்ளைகள் குறிப்பிட்ட நாட்டின் குடியுரிமையில்லாது இருக்கின்றனர் எனப் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சு அதிகாரி கூறினார். பின்லேடனின் குழந்தைகளுக்கு 4 வயது முதல் 12 வயது இருக்கும். அவர்கள் ராவல்பிண்டியிலுள்ள ஒரு வீட்டில் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர். (ம)



ஜகர்தாவில் நடந்த 18ஆவது ஆசிய உச்சி மாநாட்டில் மலேஷியாப் பிரதமர் நஜிப் ரஷாக் இந்தோனேசிய அதிபர் சுசிலோ பாம்பாங் ஆகியோர் சந்தித்து உரையாற்றுகின்றனர். (ம)

# பாகிஸ்தானில் அதிரடிச் சோதனை; பல்வேறு பகுதிகளில் 25 பேர் கைது

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் பாகிஸ்தான் உளவுத்துறையினரும், பாதுகாப்புப் பொலிஸாரும் நடத்திய அதிரடி சோதனையில் 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்னர் அவ்விவகாரம் குறித்துப் பாகிஸ்தான் மீதான அமெரிக்காவின் நெருக்கடி அதிகரித்து வருகிறது.

அபோதாபாத் அருகிலுள்ள பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 25 பேரை பாகிஸ்தான் பாதுகாப்புப் படையினர் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர். எனினும் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகார பூர்வமாக வெளியிடப்படவில்லை.

அபோதாபாத் அருகேயுள்ள மதரசாக்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சந்தைகள் ஆகியவற்றில் அதிரடிச் சோதனையில் ஈடுபட்ட பாதுகாப்புப் பொலிஸார் நூற்றுக்கணக்கானோரை கைது செய்தனர் என முன்னாள் அமைச்சர் லலா அலி அப்சல் ஜடூன் தெரிவித்துள்ளார். (ம)

# பாகிஸ்தானில் பின்லேடன் பதுங்கியிருந்த விடயம் 4ஆண்டுகளுக்கு முன்பே முஷாரப்புக்குத் தெரியும்

லண்டன், மே 10

ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானில் தான் பதுங்கியிருக்கிறார் என்ற விடயம் நான்கு ஆண்டுகளுக்கு முன்னரே அப்போதைய ஜனாதிபதி முஷாரப்புக்குத் தெரியும் என ஆப்கானிஸ்தான் உளவுத் துறையின் முன்னாள் தலைவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச தீவிரவாதி ஒசாமா பின்லேடன் பாகிஸ்தானிலுள்ள அபோதாபாத் நகரிலுள்ள ஒரு பங்களாவில் பதுங்கியிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது குறித்து ஆப்கானிஸ்தான் உளவுத் துறை முன்னாள் தலைவர் அம்ருல்லா சிலே ஒரு பத்திரிகைக்குப் பேட்டி அளித்துள்ளார். அதில் பின்லேடனும் அவரது கூட்டாளிகளும் பாகிஸ்தானின் மலைப் பகுதியிலேயே பதுங்கி இருக்கின்றனர் என்ற விடயம் கடந்த 2005ஆம் ஆண்டிலேயே எங்களுக்குத் தெரியும். இதை முஷாரப்பும் அறிவார்.

2007ஆம் ஆண்டு அபோதாபாத்திலிருந்து மிக குறைந்த தூரத்திலுள்ள மான்ஷெரா நகரில் பின்லேடன் தங்கியிருந்தார். அங்கு 2 வீடுகளில் அல்-குவைதா தீவிரவாதிகள் பாதுகாப்பாகத் தங்கியிருந்தனர்.

அப்போது பாகிஸ்தான் ஜனாதிபதியாக முஷாரப் பதவி வகித்து வந்தார். முஷாரப்புக்கும், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி சர்காய்க்கும் இடையில் இடம் பெற்ற சந்திப்பின்போது இவ்விடயம் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் அதை முஷாரப் ஏற்கவில்லை. பின்லேடன் பாகிஸ்தானில் இல்லை எனக் கோபத்துடன் மறுத்து விட்டார். இதையடுத்து அந்தப் பிரச்சினைக்கு அப்போது முற்றுப்புள்ளி வைக்கப் பட்டு விட்டது எனக் கூறப்பட்டுள்ளது. (ம)

# வெடித்துச் சிதறியது விமானம் இந்தோனேஷியாவில் 27 பேர் பலி!

ஜகர்த்தா, மே 10

இந்தோனேஷியாவில் விமானம் வெடித்துச் சிதறியதில் அதில் பயணம் செய்த 27 பேரும் பரிதாபமாக இறந்தனர். இந்தோனேசியாவின் மேற்குப் பகுதியில் உள்ள சாரோங் நகரிலிருந்து கைமனா நகருக்கு இரட்டை என்ஜின் பொருத்தப்பட்ட ஒரு விமானம் 21 பயணிகளுடனும், 6 ஊழியர்களுடனும் சனிக்கிழமை புறப்பட்டது.

அந்த விமானம் கடலின் மேல் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென்று வெடித்துச் சிதறியது. இந்த விபத்தின்போது, விமானத்திலிருந்த 27 பேரும் பரிதாபமாக இறந்தனர். கடலில் மிதக்கும் அவர்களின் சடலங்களை இந்தோனேஷியக் கடற்படையினர் மீட்டு வருகிறார்கள். (ம)


## கண்ணீர் அஞ்சலி



**அமரர் யோகீஸ்வரக் குருக்கள் பிரபாகரேஸ்வரக் குருக்கள்**

எமது ஊர் மக்களையும் எமது ஆலயத்தையும் சிறந்த முறையில் வழிநடத்திய மகோன்னத எமது பிரதம குரு யோ.பிரபாகரேஸ்வரக் குருவுக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் துணைவியாருக்கும் குடும்பத்தினருக்கும் எமது துயர்கலந்த ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சகோதரர்–
சி.கிருபாகரக்குருக்கள். (4012)(39)

ஆலய பரிபாலன சபை, நல்லூர் தெற்கு.
ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கயிலாயபிள்ளை



மீசாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கயிலாயபிள்ளை 06.05.2011இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்லாச்சியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-இளையபிள்ளையின் அன்பு மருமகனும் நாகேஸ்வரி (ஜேர்மனி) காலஞ்சென்ற் இராஜேஸ்வரி மற்றும் விஜயரட்ணம் (ஜேர்மனி), யோகேஸ்வரி (ஜேர்மனி), புவனேஸ்வரி (அமெரிக்கா), விஜயகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் குணபாலசிங்கம், ரூபி, அருணகிரிநாதன், அருளானந்தம், சிவகுமார் ஆகியோரின் அன்பு மாமனாருமாவார். மீசாலையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு இறுதிக் கிரியைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணியளவில் தகனக் கிரியைக்காகப் பூதவுடல் அல்லாரை கொப்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அல்லாரை வீதி,
மீசாலை கிழக்கு . 0773028689 (1676) (39)

தகவல்:
பிள்ளைகள்.

## எட்டாவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

கோப்பாய் இலுப்பையடிப் பிள்ளையார் திருவருளை வேண்டி



தவப்பேறு: 21.12.1918
சிவப்பேறு: 08.05.2003

கோப்பாய்-இறுவில்
அமரர்
**க.ஆறுமுகம்** (ஆசிரியர்)

இமைப் பொழுதும் எம் நெஞ்சில்
இறவாத அன்புத் தந்தையே!
உங்கள் நினைவு நாளில்
நன்றிகூறி ஆசி வேண்டுகிறோம்.

(4002)(39)

மனைவி-திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியை),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்.

28,கைலாசபிள்ளையார்
கோயில் வீதி, நல்லூர்.

**Browns** Tours
a travel experience like no other




எமது அலுவலகத்தில் பின்வரும் வசதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

- உலகில் எந்த நாடுகளுக்குமான விமானப் பயணச் சீட்டுக்கள்.
- உங்கள் விமானப் பயணச் சீட்டுக்களை முன் பதிவு செய்து கொள்ளலாம்.
- வீசா சம்பந்தமான ஆலோசனைகள் வழங்கப்படும்.
- மற்றும் இந்தியா, சிங்கப்பூர், பாங்கொக், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்கும்.
- மத்திய கிழக்கு நாடுகள் டோகா (கட்டார்), டுபாய், குவைத், சவுதி, போன்றநாடுகளுக்கு உரிய விமானச் சீட்டுக்களை மிகமலிவாகவும் உடனுக்குடனும் பெற்றுக்கொள்ளலாம்.

(4927)

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
இல.46, மணிக்கூட்டு கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

தொலை பேசி: 0777328684, 0212220930.

## தேவை

சாவகச்சேரி நீதிமன்ற கட்டடத்தில் கீழ்க் காணும் வேலைகளுக்கு சப் கொன்றாக்ரர்கள் (Sub-Contractors) உடன் தேவை. மேசன், தச்சுவேலை, கம்பிவேலை.

(1675)(22-24)

தொடர்பு:- 0212270117


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஷாரப்பைக் கைது செய்ய இரண்டு வார காலக்கெடு

இஸ்லாமாபாத், மே 10

பெனாஸிர் பூட்டோவுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கத் தவறிய பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி முஷாரப்பை கைது செய்ய புலனாய்வுத்துறைக்கு, பயங்கரவாத வழக்கு விசாரணை விசேட நீதிமன்றம் இரண்டு வாரக் காலக்கெடு விதித்துள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, 2007 ஆம் ஆண்டு தற்கொலைப் படையினரால் கொல்லப்பட்டார். இது தொடர்பான வழக்கு, இஸ்லாமாபாத்தில் இதற்கான விசேட நீதிமன்றத்தில் நடக்கிறது.

பெனாஸிர் பூட்டோவுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கத் தவறினார் என முஷாரப் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தும்படி, சிறப்பு நீதிமன்ற நீதிபதி ராணா நிசார் அகமது உத்தரவிட்டிருந்தார்.

கடந்த பெப்ரவரி மாதம் முஷார புக்கு கைது அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது. அது முதல் கொண்டு ஒவ்வொரு முறையும் அரசு சட்டத்தரணி இந்த விடயத்தில் கால அவகாசம் கோரி வந்தார்.

குற்றவாளிகளை ஒப்படைக்கும் ஒப்பந்தம், பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுடன் செய்யப்படாததால் முஷாரபை கைதுசெய்யும் விடயத்தில் இந்த நாடுகள் ஒத்துழைக்க மறுக்கின்றன என அரசு சட்டத்தரணி குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, அரசு சட்டத்தரணி மேலும் அவகாசம் கோரினார். ஆனால், இதற்கு மேல் முஷாரப்பை கைதுசெய்ய கால அவகாசம் அளிக்க முடியாது. இரண்டு வாரத்துக்குள் அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் என எவ்.ஐ.ஏக்கு நீதிமன்றம் எச்சரித்துள்ளது.(ம)

# ஓசாமா பின்லேடனின் இடத்துக்கு அல் - ஜவாஹிரியே தகுதியானவர்

## அரேபிய அல்-குவைதா கொமாண்டர் தெரிவிப்பு

டுபாய், மே 10

அல்-குவைதாவின் தலைவராக இருந்த ஒசாமா பின்லேடனின் இடத்திற்கு வர அல்-ஜவாஹிரிக்கு முழு தகுதி உள்ளது என்று அரேபிய தீபகற்பத்திற்கான அல்-குவைதா கொமாண்டர் அபு அல்-பிடா கூறியுள்ளார்.

பாகிஸ்தானில் பதுங்கியிருந்த சர்வதேச தீவிரவாதியும், அல்-குவைதா பயங்கரவாத இயக்கத்தின் தலைவருமான ஒசாமா பின்லேடன், அமெரிக்க இராணுவத்தால் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அல்-குவைதா இயக்கத்திற்கு அடுத்து யார் தலைமை பொறுப்பு ஏற்பார் என்பது குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகி வருகின்றன.

ஒசாமாவின் இடத்திற்குப் பொருத்தமான நபர் அய்மன் அல்-ஜவாஹிரிதான் என அரேபிய தீபகற்பத்திற்கான அல்-குவைதா கொமாண்டர் அபு அல்-பிடா கூறினார் என ஏமனிலிருந்து வரும் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.(ம)



தென்னாபிரிக்காவில் சூலு கிங் குட்வில் வெலிதினி(இடது), தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சுமா, வெலிதினியின் தாய் ராணி தோமோசிலி ஜெஷன்கனி சூலு ஆகியோர் பத்திரிகையாளர்களுக்கு 'போஸ்' கொடுக்கின்றனர்.

# பின்லேடனின் மாளிகை குண்டு வைத்துத் தகர்ப்பு?

அபோதாபாத், மே 10

பாகிஸ்தானில் அபோதாபாத்தில் பின்லேடன் பதுங்கி இருந்ததால், அந்த நகரம் உலகம் முழுக்கப் பேசப்படும் நகரமாகிவிட்டது.

குறிப்பாக அபோதாபாத்தில் பின்லேடன் தங்கியிருந்த மாளிகை பற்றி தெரிந்துகொள்ள உலகில் எல்லா தரப்பு மக்களும் ஆர்வம் காட்டுகிறார்கள்.

பின்லேடன் மாளிகை பற்றிய பிரத்தியேகத் தகவல்களை வெளியிட பத்திரிகை நிருபர்களும், புகைப்படக்காரர்களும் அங்கு செல்ல முயற்சி செய்த வண்ணம் உள்ளனர்.

இதற்கிடையே பின்லேடன் மாளிகையை வழிபாட்டுத் தலமாக மாற்றிவிட சிலர் முயல்கின்றனர் என சந்தேகம் எழுந்துள்ளது. இதனால் பின்லேடன் தங்கியிருந்த மாளிகையை இடித்துவிட பாகிஸ்தான் அரசு முடிவு செய்தது.

அந்தக் கட்டடத்தை தரையோடு தரைமட்டமாக்கப் போகின்றனர் என பாகிஸ்தான் அரசு அறிவித்தது.

அபோதாபாத் நகரில் ஞாயிற்றுக்கிழமை அடுத்தடுத்து இரண்டு குண்டுகள் வெடித்தன. சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்த சத்தம் பல மைல் தொலைவுக்குக் கேட்டது. அபோதாபாத் நகரில் எந்தப் பகுதியில் இந்த குண்டு வெடிப்பு நிகழ்ந்தது என்று தெரியவில்லை.

அபோதாபாத் நகருக்குள் நுழைய நிருபர்கள், புகைப்படக்காரர்கள் ஆகியோருக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் என்ன நடந்தது என்று தெரியவில்லை. பின்லேடன் தங்கியிருந்த மாளிகை குண்டு வைத்து தகர்க்கப்பட்டு இருக்கலாம் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன. இதை உறுதி செய்ய பாகிஸ்தான் அதிகாரிகள் மறுத்துவிட்டனர். (ம)

# சிரியாவில் கலவரம்; இதுவரை 800 பேர் மரணம்

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல்-ஆசாத்துக்கு எதிராகப் பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். கடந்த 50 நாள்களாக நடந்துவரும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

இப்போராட்டத்தில் இதுவரை 800 பேர் பலியாகியுள்ளனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். போராட்டத்தை அடக்க ஜனாதிபதி ஆசாத் இராணுவ டாங்கிகளைப் பயன்படுத்தி வருகிறார்.

சிரியாவின் 3ஆவது பெரிய ஹோம்ஸ் நகருக்குள் டாங்கி படைகள் புகுந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இது தலைநகர் டமாஸ்கஸிலிருந்து 165 கி.மீற்றர் தொலைவில் உள்ளது.

இங்கும், அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் சுமார் 10 இலட்சம் மக்கள் வசிக்கின்றனர். ஹோம்ஸ் நகரைச் சுற்றியுள்ள பொப் செபா, பொப் அம்ரோ, தல் அல்-சோர்ம் மாவட்டங்களில் நடத்திய தாக்குதலில் பலர் உயிரிழந் தனர் எனக் கூறப்படுகிறது. காயமடைந்த பலர் வைத்தியசாலை களில் சேர்க்கப்பட்டுள்ளனர்.(ம)

# ஆப்கானிஸ்தானில் படையினர் திடீர் வேட்டை; 23 தற்கொலைக் குண்டுதாரிகள் சுட்டுக் கொலை!

காபூல், மே 10

ஆப்கானிஸ்தானில் காந்தகர் மாகாணத்தில் தலிபான்களுக்கு எதிராகப் பாதுகாப்புப் படையினர் நடத்திய வேட்டையில் 23 தற்கொலை குண்டுதாரிகள் கொல்லப்பட்டனர். 4 தற்கொலை குண்டுதாரிகளும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சர் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தான் உள்துறை அமைச்சர் ஜமாரா பாஷ்ஹாரி, காபூலில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியவை வருமாறு:-

காந்தகார் மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய வேட்டையில் 23 தற்கொலை குண்டுதாரிகள் கொல்லப்பட்டனர். மேலும் 4 குண்டுதாரர்கள் கைது செய்யப்பட்டனர். இவர்கள் கடந்த ஏப்ரல் மாதம் காந்தகர் சிறையில் சுரங்கப்பாதை அமைத்து தப்பியோடியவர்களாவர்.

நாட்டில் பன்முக தாக்குதல் நடத்தப்படும் என தலிபான்கள் கூறிவருகின்றனர் என உளவு அமைப்புகள் எச்சரித்து வருகின்றன. தலிபான்களை ஒழித்துக் கட்ட நேட்டோப்படையினருடன், ஆப்கான் பாதுகாப்புப் படையினரும், தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர் - என்று அவர் கூறினார். (ம)

# ஈராக் சிறையில் தீவிரவாதிகள் திடீரெனக் கலவரம் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 11 பேர் உயிரிழப்பு

பக்தாத், மே 10

ஈராக் தலைநகர் பக்தாத்தில் மத்திய சிறைச்சாலை உள்ளது. இங்கு அல்-குவைதா தீவிரவாதிகளும், மற்ற கைதிகளும் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை சிறையிலுள்ள அல்-குவைதா தீவிரவாதிகள் திடீரென கலவரத்தில் ஈடுபட்டனர். அப்போது சிறையில் அடைக்கப்பட்டிருந்த அல்-குவைதா தீவிரவாதி ஹுதையா அல்-படாவி திடீரென தீவிரவாத எதிர்ப்பு பொலிஸ் ஜெனரல் சாலே அறைக்குள் புகுந்து அவரை சுட்டுக் கொன்றார்.

பின்னர் அங்கிருந்த துப்பாக்கி, வெடிகுண்டு ஆகிய ஆயுதங்களைக் கைப்பற்றி தாக்குதல் நடத்தினர். அங்கிருந்த மற்ற தீவிரவாதிகளை தப்பிக்க வைத்து அவர்களை பொலிஸ் வான் மூலம் தப்பிக்கச் செய்ய முயன்றார். அதற்குள் சிறை அதிகாரிகள் சுதாரித்துக்கொண்டனர்.

தீவிரவாதிகளை தப்பிக்க விடாமல் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் இரு தரப்புக்குமிடையே கடும் துப்பாக்கிச் சண்டை நடந்தது.

அப்போது தப்பிக்க முயன்ற தீவிரவாதிகள் 11 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இவர்கள் தவிர பொலிஸ் தரப்பில் அதிகாரிகள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் நடவடிக்கையாக தீவிரவாதிகள் இக்கலவரத்தில் ஈடுபட்டனர் என உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கலவரத்தை ஆரம்பித்த படாவி கடந்த ஒக்டோபர் மாதம் கிறிஸ்தவ தேவாலயத்தில் தாக்குதல் நடத்தி 46 பொது மக்களையும், பாதுகாப்பு அதிகாரிகளையும் கொன்றவர். அல்- குவைதா தீவிரவாதியான இவர் கைதுசெய்யப்பட்டு பக்தாத் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்.

பின்லேடன் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து ஈராக்கில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. இருந்தும் பக்தாத்தில் தீவிரவாதிகள் வெறியாட்டம் நடத்தினார்கள்.

அண்மையில் பொலிஸ் வானை குண்டு வைத்து தகர்த்து அதில் பயணம் செய்த 24 பொலிஸாரை கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காப்புறுதி நன்மைகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்த மே 5 காப்புறுதி விழிப்புணர்வுத் தினமாகப் பிரகடனம்

காப்புறுதியினால் கிடைக்கும் நன்மைகள் பற்றி மக்கள் சரிவர அறிந்திருக்கவில்லை. காப்புறுதி பற்றி மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு இலங்கைக் காப்புறுதிச் சங்கம் மே, 5 ஆம் திகதியை ''காப்புறுதி விழிப்புணர்வுத்தினம்'' ஆகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய காப்புறுதி விழிப்புணர்வுச் சங்கத்தின் தலைவர், ராமால் ஜயசிங்க, பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கையில் காப்புறுதிச் செயற்பாடுகள் நிலவுகின்றன என்றும் தெரிவித்தார். ''இன்று இக்காப்புறுதித் தொழிற்றுறையில் ஆயுட் காப்புறுதி அல்லது பொதுக் காப்புறுதி அல்லது இரண்டையும் வழங்கும் 18 கூட்டுக் காப்புறுதி நிறுவனங்கள் உள்ளன. ஆனால், சந்தையிலுள்ள ஏனைய நிதிச் சேவைகளுடன் ஒப்பிடுகையில் 'காப்புறுதி' எனும் பண்டம் சாதகமான முறையில் மக்களால் விளங்கிக் கொள்ளப்படவில்லை என்றே குறிப்பிட வேண்டும். காப்புறுதி செய்யபட வேண்டியவர்களிடம் அது பற்றிய விழிப்புணர்வு குறைவாகவுள்ளமையே அதற்கான காரணமாகும்'' என்றும் அவர் கூறினார்.

காப்புறுதியின் தேவை பற்றிய மக்களின் விளக்கமின்மை நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமலிருக்கும் ஒரு குறைபாடெனவும் காப்புறுதி பற்றிப் போதிய விளக்கமிருப்பின் காப்புறுதியின் எண்ணற்ற நன்மைகள் பற்றி பொது மக்கள் அறிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும் என்றும் காப்புறுதிக் குறைகேள் அதிகாரி டொக்டர் வீரசூரியா தெரிவித்தார்.

இலங்கைக் காப்புறுதிச் சங்கத்தின் செயலாளர் தீப்தி லொக்கு ஆராய்ச்சி இதுபற்றிக் கூறுகையில், இலங்கையின் சனத்தொகையில் 104 சதவீதமானோர் மாத்திரமே ஆயுட் காப்புறுதி செய்துள்ளனர். இது காப்புறுதி மக்கள் மத்தியில் மிகக் குறைந்தளவிலான ஊடுருவலைக் கொண்டிருப்பதையே காட்டுகின்றது. ஆனால், பொதுக் காப்புறுதி எனும் பண்டம் குறித்து அனேகமானோர் அறிந்து வைத்திருக்கின்றனர். இலங்கைச் சட்டங்களின் பிரகாரம் வாகனச் சொந்தக்காரர்கள் அதற்குக் காப்புறுதிச் செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளதால், அதிக எண்ணிக்கையானோர் அது பற்றி அறிந்துள்ளனர்'' என்றார்.

''காப்புறுதி வாங்கப்படுவதில்லை. மாறாக வாடிக்கையாளருக்கு அது விற்கப்படுகின்றது'' என்றார் ஜயசிங்க.

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள், வெளிப்புற விளம்பரப் பதாகைகள் என்பனவற்றின் மூலமும், வாகனங்களின் மூலமாகவும், காப்புறுதியின் நன்மைகளை எடுத்துச் செல்லத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 'காப்புறுதி விழிப்புணர்வை'' ஏற்படுத்தும் தினமாக மே மாதம் 5 ஆம் திகதி, இலங்கைக் காப்புறுதிச் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும், வெளிக்கள விழிப்புணர்வுத் திட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவர். காப்புறுதியின் முக்கியத்துவத்தைக் குறிக்கும் வகையிலும் அதன் நன்மைகளைக் குறிக்கும் வகையிலும் நாடெங்கிலும் பொதுமக்கள் மத்தியில் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பர்.

# மாணவர்களுக்கு மாதாந்தம் ரூ.2,500 'டயலொக்' வழங்கும் கல்வி நிதி உதவி



மாணவர் ஒருவருக்கு கல்வி நிதி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

ஜி.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் 2009 ஆம் ஆண்டு கணித பாடத்தில் மாவட்ட ரீதியிலும் தேசிய மட்டத்திலும் திறமைச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு டயலொக் ஆசிஆட்டா நிறுவனம் அவர்களின் உயர் கல்வி நிறைவுபெறும் வரை மாதந்தோறும் ரூபா 2,500 கல்வி நிதிஉதவித் தொகையாக ஒவ்வொருவருக்கும் வழங்குகிறது.

இந்த உதவித் தொகை கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன டயலொக் ஆசிஆட்டா வின் குழுமப் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஹான்ஸ் விஜயசூரிய ஆகியோரினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

டயலொக் வழங்கிவரும் இந்த கல்வி உதவி நிதித்திட்டம் தற்போது 8 ஆவது வருடமாக செயற்படுத்தப்படுகிறது. இதன் மூலம் நாடு முழுவதிலும் 400 இற்க்கு மேற்பட்ட மாணவர்கள் சலுகைகளைப் பெற்றுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் சாதாரண தரப் பரீட்சையில் கூடிய புள்ளிகளைப் பெற்ற முதல் ஐந்து மாணவர்களுக்கும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கூடிய புள்ளிகளைப் பெற்ற 25 மாணவ மற்றும் மாணவிகளுக்கும் இந்தத் திட்டத்தின் ஊடாக கல்வி உதவிநிதித் தொகை வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்கு அப்பால் உயர்தரப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சிபெறும் மாணவர்களுக்கு டயலொக் ஆசிஆட்டா நிறுவனம் அவர்கள் பொறியியல் துறையில் கல்வி கற்பதற்காக நிதியுதவிகளை வழங்கிவருகின்றது.

# கணக்கியலில் அடிப்படைகளை அறிமுகம் செய்கிறது ACCA

கணக்கியல் துறையில் உலகளாவிய ரீதியில் காலடி பதித்துள்ள பட்டயக் கணக்காளர் சங்கமான ACCA திறமை வாய்ந்தவர்களுக்கு அவர்களது பின்னணியையோ அல்லது அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள கல்வியறி வையோ கருத்தில் கொள்ளாது அவர்களைக் கணக்கியல் துறையில் பிரகாசிக்க வைப்பதற்கான சந்தர்ப்பங்களை வழங்குகிறது.

நிபுணத்துவம் பெற்ற கணக்காளர்களாக அவர்களை உருவாக்கும் நோக்கில் புதிய நுழைவு - மட்டத் தகுதிகளை (கணக்கியலின் அடிப்படைகள் -FIA ) அறிமுகம் செய்கிறது. இதன் முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

கணக்கியலின் அடிப்படைகள் பாடநெறி (FIA) சான்றிதழ்கள், டிப்ளோமா பட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்ட Certified Accounting Technician (CAT) தராதரம் ஆகியவற்றை உள்ளடக்குகிறது.

கணக்கியல் அடிப்படை (FIA) பாடநெறி நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில்: நிதியியல் மற்றும் முகாமைத்துவ கணக்கியலின் அறிமுகச் சான்றிதழ் (Introductory Certificate in Financial and Management Accounting), நிதியியல் மற்றும் முகாமைத்துவ கணக்கியலின் இண்ரர் மீடியட் அறிமுகச் சான்றிதழ், கணக்கியலிலும் வர்த்தகத்திலும் டிப்ளோமா சான்றிதழ் கணக்கியல் தொழில்நுட்பவியலாளர்களின் சான்றிதழ் CAT ஆகியவை அடங்குகின்றன.

கணக்கியலின் அடிப்படை (FIA) தகுதியின் மூலம் விண்ணப்பதாரிகள் கனிஷ்ட கணக்கியல் (Junior Accounting) அல்லது தொழில் நுட்பவியலாளர் பதவியில் (Technician) பதவியின் போதுமான நிபுணத்துவத்தையும் நீதி நெறித்திறமைகளையும் கொண்டிருப்பதை தொழில் தருநர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வழி வகுக்கிறது. இந்தப் பாடநெறியின் பாடவிதானம் நிதி கணக்கியலின் எல்லா மட்டங்களிலும் அடிப்படைத் தகுதியை வழங்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் வர்த்த கத்தில் கணக்காளர் டிப்ளோமா தகுதியைப் பெற்றுக் கொள்ளும் பரீட்சையையும் உள்ளடக்கியுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் சட்டரீதியானதும் பொருளாதார நீதியானதுமான சீரான புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுத் தருகிறது.

உலகளாவிய ரீதியில் உள்ள தராதரங்களில் இந்தப் பாடநெறி மிகவும் தீவிரமானதும் உயர்ந்த தகுதிகளை வழங்குவதுமான ஒரு பாடநெறியாக அமைகிறது. ACCA எப்போதும் மாணவர்களின் களத்தை விஸ்தரிக்கவும் சர்வதேச மட்டத்தில் மாணவர்கள் நிதியியல் பயிற்சியில் சிறந்த சந்தர்ப்பங்களையும் தராதரங்களையும் பெற்றுக்கொள்ளும் வகையில் முனைப்புடன் செயற்படுகிறது. அந்த ரீதியில் (FIA) இந்த இலக்கை அடைய மேலும் உதவுகிறது.



சாவகச்சேரி மக்கள் வங்கிக் கிளையில் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று 'வனிதா வாசனா', 'ஆச்சார்யா' அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு இடம்பெற்றது. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி உப அதிபர் திருமதி லூட்ஸ் ராஜு சீட்டிழுப்பை மேற்கொள்கிறார். அருகில் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம், உதவிப் பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன் ஆகியோர் உள்ளனர். (த-207)

# பாடசாலை மாணவர் ஒருவர் CIMA பயில முடியுமா?

CIMA பாடநெறியானது சிறப்பாக முகாமைத்துவக் கணக்கீடு தொடர்பாகத் தொழில்சார் தகைமையை வழங்குகின்ற ஒரு பாடநெறியாகும். இத் தொழில் சார் தகைமையானது பிரித்தானியாவின் பட்டய முகாமைக் கணக்காளர் நிறுவனத்தால் (Charted Institute of Management Accountants) வழங்கப்படுவதோடு, இது இலங்கையைப் போன்று பல்வேறு நாடுகளிலும் விசேடமாகவும் சிறப்பாகவும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. உலகின் அரச மற்றும் தனியார், அரசசார்பற்ற பல நிறுவனங்களின் பல துறைகளில் உயர் வேலை வாய்ப்பு மட்டத்தைப் பெறுவோரிடையில் காணப்படும் பிரதான தொழில்சார் தகைமையாக இது காணப்படுகின்றது.

பதினாறு வயது தொடங்கியே CIMA கற்பதற்கும் CIMA பரீட்சையில் தோற்றுவதற்கும் மாணவர்களுக்கு சர்ந்தர்ப்பம் கிடைக்கிறது. CIMA பாடநெறியின் முதலாவது அலகில் ஐந்து பாடங்கள் காணப்படுவதோடு, இது வியாபாரக் கணக்கீட்டுச்சான்றிதழில் CBA முறையிலான பரீட்சையாகும். இது வணிக பாடப்பரப்பினை கற்றவரொருவருக்கு இலகுவாக முகம் கொடுக்கக் கூடிய ஒரு பரீட்சையாகவே அமைகின்றது. உயர்தர வணிகப் பிரிவில் கற்கின்ற மூன்று பாட அலகுகளுக்கு மேலதிகமாக "Fundamental of Business Mathematics" மற்றும் " Fundamental of Ethics, Corporate Governance and Business Ethics" ஆகிய இரண்டு புதிய இலகுவான பாடங்கள் மிக இலகுவான விளக்கங்களோடு வழங்கப் படுவது குறிப்பிடத்தக்கது. ஆகவே உயர்தரத்தில் நாம்பெற்றுக் கொண்ட அறிவை வைத்துக் கொண்டு CBA பயில ஆரம்பிப்பது மிக இலகுவானது என்பதோடு சாதாரண ஆங்கில அறிவு காணப்படுவது ஓர் அடிப்படைத் தேவையாகும். முதலாவது கட்ட CBA முறையிலான பரீட்சையை முகம்கொடுக்க ஆறு மாத காலம் போதுமானதாகின்றது. அத்தோடு இப்பாடநெறியின் அடுத்த பாடங்களை இரண்டு அல்லது மூன்று வருடங்களில் முழுமையாக பூர்த்தி செய்ய முடியும். இப்பாடநெறியை முழுவதுமாகப் பூர்த்தி செய்வதனூடாக எதிர்காலத்துக்குத் தேவையான ஒரு முகாமைக் கணக்காளராக உங்களை உருவாக்கிக் கொள்ள முடியுமென்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. க.பொ.த.(சா/த) பெறுபேறுகள் வெளியான உடனேயே CIMA பாடநெறியை பயிலத் தொடங்கினால் நிகழ்காலத்தில் நீங்கள் CIMA இன் இறுதிக்கட்ட பரீட்சைகளை நெருங்கிய ஒரு மாணவராக இருப்பதோடு ஜீ.சி.ஈ. (உ/த) இல் நீங்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டாலும் அது ஒரு வரலாற்று ரீதியாக இருப்பதோடு நீங்கள் சாதாரண தரத்திலேயே CIMA பயில தொடங்கியிருப்பின் உங்களது உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளுடன் CIMA யையும் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு உங்களுக்குக் கிட்டியிருக்கும்.

உலகம் முழுவதும் 165 நாடுகளில் 172,000 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை கொண்டு CIMA முகாமைத்துவ நிறுவனம் செயற்படுவது மிகப் பெருமை தரக்கூடிய ஒரு விடயமாகும். இலங்கையில் தற்போது CIMA பயின்ற உறுப்பினர்கள் 12,000 இற்கும் மேற்பட்டு காணப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்த அளவிலான வளர்ச்சி உங்களுக்கு வியப்பை ஊட்டினாலும் நீங்களும் நாளைய முகாமைத்துவக் கணக்காளராக வர வேண்டுமெனில் தெரிவு செய்ய வேண்டிய ஒரே பாடநெறியாக CIMA திகழ்வது சந்தேகத்துக்கு இடமற்றதாகிறது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மஹிந்தவைப் போர் குற்றவாளியாகப் பிரகடனப்படுத்தக்கோரி

# நியூயோர்க்கில் நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத்தினரும் பங்கேற்பர்



## தஞ்சைக் கூட்டத்தில் வீரமணி அறிவிப்பு

தஞ்சாவூர், மே.10

ராஜபக்ஷவை போர்குற்றவாளியாக பிரகடனப்படுத்தக்கோரி எதிர்வரும் 18 ஆம் திகதி அமெரிக்காவில் உள்ள நியூயோர்க் நகரில் அமெரிக்க தமிழர்கள் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகள் சார்பில் நடத்தப்படும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழகத்தினரும் பங்கேற்கவுள்ளதாக கழகத் தலைவர் கி.வீரமணி தெரிவித்துள்ளார்.

ஈழத்தமிழர் படுகொலை பற்றிய ஐ.நா. குழுவினரின் அறிக்கையும், மத்திய அரசின் கடமை பற்றியும், தஞ்சை நகர, ஒன்றிய திராவிடர் கழகம் சார்பில் சிறப்பு பொதுக்கூட்டம் தஞ்சையில் நடைபெற்றது. கூட்டத்தில் திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி சிறப்புரை ஆற்றுகையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்:

இந்த ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் கழக தலைமை நிலைய செயலாளர் அன்புராஜ் தலைமையில் பெரியார் பன்னாட்டு அமைப்பினரும், திராவிடர் கழகத்தினரும் பங்கேற்கிறார்கள்.

இலங்கையில் நடைபெற்ற ஈழப் படுகொலையை மறைத்த செய்தி இன்று வெளிச்சத்துக்கு வந்துள்ளது. உலகத்துக்கே பொது அமைப்பான ஐ.நா. ஒரு குழுவை அமைத்து அந்தக்குழு 240 பக்க அறிக்கை தயாரித்து உள்ளது. அதில் இலங்கையில் போர்குற்றம் நடைபெற்றுள்ளது என்று ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வாதிகாரியான ஹிட்லரை தோற்கடிக்கும் அளவிற்கு ராஜபக்ஷ கொடுமையை நிகழ்த்தி உள்ளார். இலங்கையில் தமிழர்கள், தங்கள் உரிமைக்காகத் தான் போராடினார்கள். உலகத்திலேயே சொந்த நாட்டு மக்களை குண்டுவீசி கொன்ற சம்பவம் இலங்கையில் தான் நடைபெற்றுள்ளது.

தமிழ்இனம் அழிப்பு நடைபெற்றபோது நாங்கள் கண்டு கொள்ளாமல் இருப்போம் என்று மத்திய அரசு இருந்தது. இப்போது அவர்களின் நிலை என்ன?. இலங்கையில் தமிழர்களின் மீதான கொடுமை இன்னும் தொடர்கிறது என்று ஐ.நா. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மத்திய அரசு இன்னும் ஏன் மௌனம் சாதிக்கிறது. இனியாவது இதற்கு பரிகாரம் தேட மத்திய அரசு முயற்சிக்க வேண்டும். இலங்கை தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு தமிழ் ஈழம்தான்.

இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்குற்றவாளியாக அறிவித்து சர்வதேச கூண்டில் நிறுத்த வேண்டும்என்று உலகம் முழுவதும் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள்.


எனவே தமிழ் ஈழத்தை பிரகடனப்படுத்த உதவ வேண்டும். ராஜபக்ஷவை போர்குற்றவாளியாக அறிவித்து சர்வதேச கூண்டில் நிறுத்த வேண்டும் என்று உலகம் முழுவதும் குரல் கொடுக்க ஆரம்பித்து விட்டார்கள் இவ்வாறு அவர் கூறினார். (வ)

# இங்கிலாந்து செல்வந்தர் பட்டியலில் இந்தியர்

இங்கிலாந்து நாட்டின் மிகப் பெரிய செல்வந்தர்கள் பட்டியலில், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த தொழிலதிபர் லட்சுமி மிட்டல் தொடர்ந்து 7ஆவது வருடங்களாகவும் முதல் இடத்தைப் பிடித்துள்ளார்.

லண்டனில் இருந்து வெளியாகும் தி சண்டே டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள 2011ஆம் ஆண்டுக்கான பணக்காரர்கள் பட்டியலில் இது வெளி வந்துள்ளது. அவருடைய சொத்து மதிப்பு சுமார் ஒரு லட்சத்து 26 ஆயிரம் கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.

இது கடந்த வருடத்தை விடவும் சுமார் ரூ.35 ஆயிரத்து 500 கோடி குறைவாகும் என அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



லோக்பால் மசோதா குழுவில் இடம்பெற்றுள்ள தகவல்ஒலிபரப்புத்துறை அமைச்சர் கபில் சிபில், உள்துறை அமைச்சர் சிதம்பரம்,சட்டத்துறை அமைச்சர் வீரப்ப மொய்லி,மற்றும் சல்மான் குர்ஷித் ஆகியோர் லோக்பால் மசோதா கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக வருகின்றனர்.

# அயோத்திப் பிரச்சினை; உயர் நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடை உத்தரவு

டில்லி, மே 10

அயோத்தி பிரச்சினையில் சர்ச்சைக்குரிய இடத்தை மூன்றாகப் பிரிப்பதற்கான அலகாபாத் உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. மேலும், உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ''புதிரானது'' என்றும் கருத்துத் தெரிவித்துள்ளது.

''இடத்தை பிரிக்குமாறு மனுதாரர்கள் யாருமே கோரவில்லை. இந்த நிலையில், எவரும் கோரிக்கை விடுக்காத வகையில் புதிய தீர்வினை அலகாபாத் உயர் நீதிமன்றம் வழங்கியது ஆச்சரியமாகவும் உள்ளது'' என்றும் உச்சநீதிமன்றம் கூறியுள்ளது.

அயோத்தியில் ராம ஜென்ம பூமி அமைந்துள்ள சர்ச்சைக்குரிய 2.77 ஏக்கர் இடம் தொடர்பான வழக்கில் அலகாபாத் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை எதிர்த்து, நிர்மோகி அகாரா, அகில பாரத இந்து மகா சபா, ஜமாத் உல் அமாஹி ஹிந்த், சன்னி சென்ட்ரல் வஃக் போர்டு உள்ளிட்ட அமைப்புகளின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கின் விசாரணை, நீதிபதிகள் அப்தாப் ஆலம், ஆர்.எம். லோதா ஆகியோர் அடங்கிய குழு முன்னிலையில், நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதில், சர்ச்சைக்குரிய நிலத்தை மூன்றாகப் பிரிப்பதற்கான உயர்நீதிமன்றத்தின் முன்னைய தீர்ப்புக்கு இடைக்காலத் தடை விதித்து உச்சநீதிமன்ற நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# வைத்தியர்கள் வேலை நிறுத்தம்; சிகிச்சை இன்றி 8 குழந்தைகள் பலி!

## மருத்துவமனையை உறவினர்கள் முற்றுகை

ஐதராபாத்தில் உள்ள அரச மருத்துவமனையில் கனிஷ்ட வைத்தியர்கள் தமக்குப் பாதுகாப்புக் கேட்டு நேற்று இடம் பெற்ற வேலை நிறுத்தத்தால் உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படாததால் 8 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந் துள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தால் அங்குள்ள காந்தி, உஸ்மானியா, நீலோபர் மருத்து வமனைகளில் நோயாளிகள் பலர் சிகிச்சை கிடைக்காமல் அவதிப்பட்டனர்.

நீலோபர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஜூனியர் வைத்தியர்கள் இல்லாததால் அவசர சிகிச்சைக்கு வந்த குழந்தைகள் பலருக்கு உரிய நேரத்தில் சிகிச்சை அளிக்கப்படவில்லை. இதனால் 8 குழந்தைகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

இதையறிந்ததும் அவர்களது பெற்றோர் மற்றும் உறவினர்கள் கதறி அழுதனர். சிலர் மருத்து வமனையை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினார்கள். இதையடுத்து அங்கு அதிரடிப் படை பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

போராட்டத்தில் ஈடுபடும் வைத்தியர்கள் கூறுகையில்:

கடந்த சில மாதங்களாக அரசு மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி யாராவது இறந்துபோனால் நோயாளியின் உறவினர்கள் வைத்தியர்களைத் தாக்குகிறார்கள். இதனால் பாதுகாப்புக் கேட்டு போராட்டம் நடத்தி வருகிறோம். ஆனால் ஆந்திர அரசு உரிய பாதுகாப்பு அளிக்க வில்லை. எங்களுக்கு பாது காப்பு அளித்தால் போராட்டத்தை திரும்ப பெறுவோம் என்றனர். (வ)

# வெளிநாடுகளில் கறுப்புப் பணம்; வரித்துறை ரகசியமாக ஆய்வு

இந்தியாவை சேர்ந்த சிலர் சுவிட்ஸர்லாந்து, வெர்ஜீன் தீவுகள் மற்றும் பனாமஸ் நாடு களில் உள்ள வங்கிகளில் தங்கள் கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்துள்ளமையால் இந்தியாவின் பொருளாதாரம் கேள்விக் குறியாக உள்ளதால் இது தொடர் பாக இந்திய வருமான வரித்துறை ஆய்வு செய்யவுள்ளது.

இதன்படி சுவிட்சர்லாந்து, பனாமஸ், வெர்ஜீன் தீவு ஆகிய நாடுகளுக்கு தனிப்பட்ட முறையிலோ அல்லது வியாபார ரீதியாகவோ சென்று வருவோரை ரகசியமாகக் கண்காணித்து வருகிறது.

இதில் வருமானவரித்துறையின் விமான உளவுப் பிரிவு ஈடுபட்டுள்ளது. இந்த பிரிவு சிவில் விமான போக்குவரத்து அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நாட்டின் பல்வேறு விமான நிலையங்களில் இருந்து பயணம் செய்தவர்களின் விவரங்களைத் திரட்டியுள்ளது. (வ)

# ராஜபக்ஷவைக் கைது செய்யுங்கள்; விஜய் ரசிகர்கள் உண்ணாவிரதம்



இலங்கையில் அப்பாவி தமிழர்களை கொன்று குவித்து போர்க்குற்றம் புரிந்த இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை கைது செய்ய வலியுறுத்தி சேலத்தில் நடிகர் விஜய் ரசிகர்கள் சங்கம் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

இலங்கையில் நடைபெற்ற போரில், அப்பாவி ஈழத் தமிழர்களை இரக்கமே இல்லாமல் சிங்கள ராணுவம் கொன்று குவித்தது. இதுபற்றி விசாரணை நடத்திய ஐ.நா.சபையின் விசாரணைக் குழு இலங்கை போரில் போர்விதிகளைக் கடைபிடிக்காமல் போர்க்குற்றம் புரியப்பட்டுள்ளதாக அறிக்கை அளித்தது.

அதனைத்தொடர்ந்து இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை கைது செய்ய வேண்டும், அவர் மீது சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை நடத்தி தண்டனை வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தமிழ்நாட்டில் வலுப்பெற்று வருகின்றன.

இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி சேலத்தில் நடிகர் விஜய் ரசிகர்கள் சார்பில் உண்ணாவிரத போராட்டம் சேலம் பழைய நாட்டாண்மை கழக கட்டடம் அருகே நடைபெற்றது. சேலம் மாவட்ட இளைய தளபதி விஜய் நற்பணி இயக்க மாவட்ட தலைவர் த்மிழன். ஆ.பார்த்தீபன் இந்த உண்ணாவிரதத்துக்கு தலைமை தாங்கி ஆரம்பித்து வைத்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் நிபுணர் குழுவினர் வழங்கிய அறிக்கை

## பகுதி - 10

101. அச்சமயம், ''பொதுமக்கள் காயமடைவதைத் தடுப்பதற்காக எம்மிடையே காயமேற்படுகிறது'' எனப் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டார். 'இந்த விடயம் எமக்கு மிகவும் கவலையளிப்பதாக இருக்கிறது. இல்லாவிடின், சரமாரியாக குண்டுகளை வீசி எம்மால் அப்படியே முன்னேறிச் சென்றிருக்க முடியும்.' பெப்ரவரி 25 ஆம் திகதியும் அதன் பின்னர் ஏப்ரல் 27ஆம் திகதியும் இலங்கை இராணுவம் தொடர்ந்தும் இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்த சூன்ய வலயங்கள் மீது கனரக ஆயுதங்களைப் பாவிக்கவில்லை என அரசு அறிவித்தது. ஆனால் களத்தில் நடப்பது இதற்கு மாற்றமானதாகவே இருந்தது. ஆரம்பத்தில் இருந்தே தீவிரமாகப் பீரங்கிகளைப் பிரயோகிப்பது இலங்கை இராணுவத்தின் இராணுவ நடவடிக்கையின் அடிப்படை அணுகுமுறையாக இருந்தது. வெற்றி நெருங்கிய போதும் கூட இப்பழக்கம் கைவிடப்படவில்லை. மாறாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை நகரவிடாது அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் உள்ள பிரதேசத்தில் சுற்றிவளைக்கப்பட்டுள்ள நிலையிலும் அது தொடர்ந்தது. தீவிர ஷெல் வீச்சு காரணமாக அந்தப் பிரதேசத்தில் இருந்து தப்பியோடப் பல பொதுமக்கள் முயற்சித்த போது, பொதுமக்கள் அங்கிருந்து செல்வதற்கு அவர்கள் மீது அழுத்தத்தைப் பிரயோகிக்கும் இன்னுமொரு அரச நோக்கம் நிறைவேறுவதாக அமைந்தது. தொடர்ந்து யுத்தசூனிய வலயத்தை இலக்கு வைப்பதற்காக இலங்கை இராணுவத்தின் பீரங்கிக் குண்டுப் பிரிவுகள் தக்கவாறு அமைத்துக்கொள்ளப்படுவதை அரச அறிவிப்புக்கள், செய்மதிப்படங்கள் எடுத்துக்காட்டுகின்றன. ஒப்பீட்டளவில் தமிழீழ விடுதலைப் புலியினரிடம் குறைவான கனரக ஆயுதங்களே எஞ்சியிருந்ததோடு, அவற்றைப் பாவிப்பதற்கான இடவசதியும் குறைவாகவே இருந்தது.

102. சிறிய கடலோரப் பகுதியில் நெரிசல் அதிகமாகி அங்கு வாழக்கூடிய இடவசதியும் மிகக் குறைவாகியிருந்தது. இடம்பெயர்ந்தோர் தம் கூடாரங்களை அமைத்திருந்த பெரும்பாலான பிரதேசம் நீர் கசியும் கடலோர மணல் தரையாக இருந்ததோடு அது குடியிருப்புக்கு ஏற்றதாகவும் இருக்கவில்லை. அத்தோடு, இடம்பெயர்ந்தோர் அங்கு தம் பாதுகாப்புக்காகத் தற்காலிக பதுங்கு குழிகளை அமைத்துக்கொள்வதும் கஷ்டமாகவே இருந்தது. அக்கால கட்டத்தில் இடம்பெயர்ந்தோரின் அன்றாட வாழ்க்கை பதுங்கு குழிகளிலேயே கழிந்ததோடு, சிலர் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காகத் தம் இருப்பிடங்களுக்கு மேலே வெள்ளைக் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தனர். நன்னீர் அரிதாக இருந்ததோடு உணவுக்கும் தட்டுப்பாடு நிலவியதால் சிலர் பசியினால் மரணித்தனர். பருவகால மழை ஆரம்பித்ததும் பல பதுங்கு குழிகளில் நீர் நிறைந்து மக்களின் வாழ்க்கை மேலும் மோசமடைந்தது.

### 7. புதுமாத்தளன் ஆஸ்பத்திரி மீதான ஷெல்லடித் தாக்குதல்

103. புதுக்குடியிருப்பு ஆஸ்பத்திரி புதுமாத்தளனுக்கு இடம்பெயர்ந்த போது, ''வன்னியின் மீட்கப்படாத பிரதேசங்களில் இப்போது எந்தவொரு ஆஸ்பத்திரியும் செயற்படவில்லை'' என அரசு அறிவித்தது. இருந்தபோதிலும், இரண்டாவது யுத்த சூன்ய வலயத்தில், புதுமாத்தளன் உள்ளிட்ட மூன்று தற்காலிக ஆஸ்பத்திரிகளும், வேலாயன்மடத்தில் சிறிய வைத்தியசாலையொன்றும் முள்ளிவாய்க்காலில் ஒரு ஆஸ்பத்திரியும் இருந்தன. அவற்றின் அமைவிட எல்லைகள் அனைத்தும் அரசுக்குத் தெரிந்தே இருந்ததோடு, அவற்றின் மீது சின்னங்கள் இடப்பட்டு அவை தெளிவாகவே குறிக்கப்பட்டிருந்தன. அங்கு அரச வைத்தியர்களே தொடர்ந்தும் சேவையாற்றிவந்தனர். புதிதாகக் காயமடைந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் நிரம்பியிருந்தனர். அடிப்படை மருத்துவப் பொருள்களை வன்னிக்குள் அரசு அனுமதிக்காததால், புதுமாத்தளன் ஆஸ்பத்திரியின் நிலைமை மிக மோசமாக இருந்ததோடு, அங்கு காயமடைந்தோரின் உறுப்புக்கள் கசாப்புக் கடைக் கத்திகளைக் கொண்டே மயக்க மருந்து இன்றிச் சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டன. சுகாதாரத் துவாய்கள் மற்றும் பருத்தித் துணிகள் புண்கட்டுத் துணியாகப் பாவிக்கப்பட்டன. நரம்பு ஊடாகச் செலுத்தும் சேலைன் போத்தல்கள் மரங்களில் கட்டித் தொங்கவிடப்பட்டு பாரிய காயமடைந்தோர் மரங்களுக்குக் கீழே படுக்கவைக்கப்பட்டனர். அங்கிருந்த சில வைத்தியர்களின் கடுமையான உழைப்புக்கு மத்தியிலும் போதிய மருத்துவ வசதிகள் இன்மையால் பல நோயாளிகள் மரணித்தனர். சடலங்கள் தினமும் ஆஸ்பத்திரிக்கு முன்னால் குவித்து வைக்கப்பட்டன.

104. 2009 பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் ஷெல் வெடிகள் விழுந்ததால் குறைந்த பட்சம் 16 நோயாளிகள் அங்கு கொல்லப்பட்டனர். வீதியில் அமைந்திருத்த இலங்கை இராணுவத்தின் தளங்களில் இருந்தே ஷெல் வெடிகள் வந்தன. ஆனால், பின்னர் ஏரிக்கு அப்புறம் இருந்த இலங்கை இராணுவ நிலைகளிலிருந்தும் (அங்கிருந்த இலங்கை இராணுவத்தினருக்கு ஆஸ்பத்திரி தெளிவாகப் பார்வைக்குத் தெரிந்த போதிலும்) ஷெல் வெடிகள் செலுத்தப்பட்டன. சில காயமடைந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் புதுமாத்தளன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்தபோதிலும், அவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவாக இருந்ததோடு அவர்கள் தனியானதொரு பிரிவில் வைக்கப்பட்டிருந்தனர். பின்னர் பெப்ரவரியிலும் மார்ச்சிலும் புதுமாத்தளன் ஆஸ்பத்திரி பலமுறை ஷெல் தாக்குதலுக்கு உள்ளாகியது. மாரச் 27 ஆம் திகதி அளவில் ஆர்.பிஜிக்கள் ஆஸ்பத்திரி மீது செலுத்தப்பட்டபோது பல பொதுமக்கள் கொல்லப்பட்டனர். பொதுமக்களுக்கு விளைந்த சேதத்துக்குப் புறம்பாக, சத்திரசிகிச்சை கூடம், தற்காலிக வார்ட்டுக்கள் மற்றும் கூரையும் சேதமடைந்தன.

105. தினமும் பல உயிர்களைப் பலி கொண்டு பல குடும்பங்களை நிர்க்கதியாக்கும் ஷெல் வெடிகள் மற்றும் துப்பாக்கிச் சூடுகள் நடைபெற்று வந்த போதிலும், ஆளில்லா விமானம் மூலம் இனங்கண்டுகொள்ளக்கூடிய, பொதுமக்கள் திரண்டிருந்த இடங்கள் மீது இலங்கை இராணுவம் ஷெல் வீச்சுக்களை மேற்கொண்டது. மார்ச் 25 ஆம் திகதி அம்பலவன்பொக்கணை மீதான பல்குழல் ரொக்கட் தாக்குதலில் குழந்தைகள் உள்ளிட்ட சுமார் 140 பேர்கள் உயிரிழந்தனர். 2009 ஏப்ரல் 8 ஆம் திகதி, பிரதேச சுகாதார சேவைகள் அத்தியட்சகர் ஒழுங்கு செய்திருந்த பால் மா விநியோக வரிசையொன்றில் இருந்த அதிக எண்ணிக்கையிலான பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது அம்பலவன் பொக்கணையில் ஷெல் வெடித்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இறந்த சில பெண்கள் தமது குழந்தைகளுக்குப் பால் மாவைப் பெற்றுக் கொள்ளும் அட்டைகளைக் கைகளில் வைத்திருந்தனர்.

### 8. ஐ.சி.ஆர்.சி. கப்பல்கள் மூலம் மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான முட்டுக்கட்டைகள்

106. 2009 பெப்ரவரி 10 ஆம் திகதி முதல் கரையோரப் பகுதியிலிருந்து காயமடைந்த பொதுமக்களைக் கப்பல் மூலம் பாதுகாப்பான இடங்களுக்குக் கொண்டு சென்று வன்னியில் உள்ள பொதுமக்களின் கஷ்டங்களைக் குறைப்பதற்காக ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் முன்னணிப் பங்களிப்பை வழங்கியது. இறுதி மாதங்களின்போது மொத்தம் 16 ஐ.சி.ஆர்.சி கப்பல்கள் யுத்த வலயத்துக்கு வந்து சென்றன. புதுமாத்தளனிலிருந்து ஐ.சி.ஆர்.சி இன் சர்வதேச ஊழியர்கள் முதலாவது கப்பல் மூலம் அங்கிருந்து சென்ற போதிலும், ஒவ்வொரு தடவையும் கப்பல்கள் வந்தபோது, அவர்கள் மீண்டும் சில மணி நேரங்கள் கரையில் இருந்தனர். ஐ.நா. ஊழியர்களை அரச கப்பலில் இருக்கவில்லை.

107. காயமடைந்த பொதுமக்களுக்கும் அவர்களைச் சார்ந்த சிலருக்கும் ஐ.சி.ஆர்.சி. கப்பல்கள் மூலம் அப்பிரதேசத்தில் இருந்து செல்ல அனுமதிச் சீட்டுக்களைத் தமிழீழ விடுதலைப்புலி வழங்கிய போதிலும், கரையில் இருந்து 1 கிலோ மீற்றருக்குள் கப்பல்களை வர விடாததால் காயமடைந்தோரைசிறு படகுகள் மூலம் எடுத்துச் செல்ல வேண்டியிருந்தது. காயமடைந்தோர் கரையில் வரிசையாக நிறுத்தப்பட்டபோது பல தடவை இலங்கை இராணுவத்தின் தாக்குதலுக்கு உள்ளானார்கள். இலங்கை இராணுவத்தினரால் செலுத்தப்பட்ட ஷெல்வெடிகள் சில சமயங்களில் கடலில் ஐ.சி.ஆர்.சி. கப்பல்களுக்கு அருகில் வந்து விழுந்தன. ஏப்ரல் 22 ஆம் திகதியளவில் ஷெல் வெடி காரணமாக மாலுமி கப்பலை ஆழமான இடத்துக்குச் செலுத்த நிர்ப்பந்திக்கப்பட்டார்.

108. உணவுப் பொருள்கள் போக்குவரத்துச் செய்யும் ஒரே வழியாக ஐ.சி.ஆர்.சிக் கப்பல்கள் இருந்தபோதிலும், ஏற்றி வருவதற்கு அவற்றுக்கு அனுமதியளிக்கப்பட்ட உணவுப் பொருள்கள் போதியளவாக இருக்கவில்லை. யுத்த சூனிய வலயத்தில் நிலைமை படுமோசமாக மாறிய நிலையில் கரைக்கு வந்த ஐ.சி.ஆர்.சி ஊழியர் ஒருவரைச் சூழ்ந்து கொண்ட அதிக எண்ணிக்கையிலான இடம்பெயர்ந்த மக்கள் தம்மை வன்னியில் இருந்து அழைத்துச் செல்லுமாறு கெஞ்சிக் கேட்டுக்கொள்ள ஆரம்பித்தனர். தமிழீழ விடுதலைப்புலியினர் அந்தக் கூட்டத்தை முரட்டுத்தனமாகக் கலைத்தனர். இறுதி ஐ.சி.ஆர்.சி கப்பல் 2009 மே 9 ஆம் திகதி வன்னிக்கு வந்தது. 2009 மே 15 ஆம் திகதி மேலுமொரு கப்பல் வந்த போதிலும் யுத்தத்தின் தீவிரத்தன்மை காரணமாகத் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. மொத்தம் 14,000 காயமடைந்தோரையும் அவர்கள் உறவுகளையும் இரண்டாம் மற்றும் மூன்றாம் யுத்த சூன்ய வலயங்களில் இருந்து ஐ.சி.ஆர்.சி. அகற்றியதோடு சுமார் 2,350 மெட்ரிக் தொன் உணவுப் பொருள்களையும் முள்ளிவாயக்காலுக்கு எடுத்து வந்தது. தமிழீழ விடுதலைப்புலிகள் அதன் உறுப்பினர்களை யுத்த களத்திலிருந்து சிகிச்சைக்காகச் செல்ல அனுமதிக்காததால், பாதுகாப்பாக அகற்றப்பட்ட அனைவரும் பொதுமக்களாகவே இருந்தனர்.

### 9. முள்ளிவாய்க்கால் உள்ளிட்ட இலங்கை இராணுவத்தின் ஷெல் தாக்குதல்

109. 2009 ஏப்ரல் ஆரம்பத்தில், ஆனந்தபுரத்தில் நேர்ந்த தோல்விக்குப் பின், எஞ்சியிருந்த தமிழீழவிடுதலைப் புலிகளின் படைப்பிரிவுகள் அனைத்தும் கரையோரப் பகுதிக்குப் பின்வாங்கின. சூனிய வலயத்தினுள் அரசின் ஷெல் தாக்குதல் உக்கிரமடைந்தது. இறுதிக் கட்டம்வரை மோதல் முழுவதிலும் அரச படைகள் மோட்டார்களைச் சார்ந்திருந்தனர்.

பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் பொதுமக்களை விடுவிப்பதற்காக 'மனிதாபிமான நடவடிக்கை' ஒன்றை மேற்கொள்வதாக அந்தக் கட்டத்தில் அரசு கூறிய போதிலும், அது பல்குழல் குண்டு செலுத்திகள் மற்றும் விமானக் குண்டு வீச்சு போன்ற கனரக ஆயு தங்களைத் தொடர்ந்து போர்க் களத்தில் பயன்படுத்தி வந்தது.

2009 ஏப்ரல் 19 ஆம் திகதி, புதுமாத்தளன் மற்றும் அம்பலன்பொக்கணை ஆகியவற்றுக்கு இடையிலான பிரதேசம் தீவிரமற்றவை. ஷெல் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டன. இலங்கை இராணுவத்தின் 58 ஆவது படைப்பிரிவு, யுத்த சூன்ய வலயத்தினூடாக தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பு அரண்களைத் தாண்டி முதற் தடவையாகக் கரையோரப் பகுதியை அண்மித்தது. இதனால் யுத்த சூனிய வலயம் இரு கூறாக்கப்பட்டு பொதுமக்களிடையே பலத்த சேதத்தை ஏற்படுத்திய யுத்த சூனிய வலயம் இவ்வாறாக கூறபட்டதை அடுத்து, ஏற்கனவே தப்பியோடிய சுமார் 70,000 பேர்களுக்கு மேலதிகமாக மேலும் ஒரு 100,000 பொதுமக்கள் அரச கட்டுப் பாட்டுப் பகுதிக்குத் தப்பிச் செல்ல முடிந்தது. குறைந்த பட்சம் மேலுமொரு 130,000 பொதுமக்கள் தென் பகுதியில் சிக்குண்டு இருந்தனர். (43)

110. யுத்த சூன்ய வலயத்தின் வட பகுதியை இலங்கை இராணுவம் கைப்பற்றிய பின்னர், யுத்த வலயத்தில் முள்ளிவாய்க்கால் ஆஸ்பத்திரி மாத்திரமே எஞ்சியிருந்த ஒரேயொரு ஆஸ்பத்திரி. சீருடை அணிந்த தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர் ஒருவரும் அந்த ஆஸ்பத்திரியில் இருக்கவில்லையென்பதோடு, ஒருவரும் அங்கு ஆயுதங்களைக் கொண்டும் வரவில்லை.

இப்போது நிலைமைகள் மிக மோசமாக இருந்தன. ஆஸ்பத்திரியில் நான்கு வைத்தியர்கள்இருந்ததோடு அங்கு இடத்துக்கு ஏற்றவாறு இரண்டு சத்திர சிகிச்சை கூடங்கள் செய்ற்படுத்தப்பட்டன. பாரிய தலைக் காயங்கள் மற்றும் ஏனைய உயிரைப் பறிக்கக் கூடிய காயங்கள் உள்ளிட்ட நோயாளிகள் நோவு தணிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தார்களே அன்றி அவர்களைக் காப்பாற்ற முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சிறிய எண்ணிக்கையிலான கட்டில்கள் மாத்திரமே இருந்ததால் காயமடைந்தவர்கள் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் மண் தரையிலும் தனியாக அல்லது தம் உறவுகளின் அரவணைப்பிலும் இருந்தனர். புண்களைக் கட்டுவதற்கான துணிகள் கிடைக்காததால், பழைய துணிகள் அல்லது சாறிகள் புண்களைக் கட்டுவதற்காகப் பயன்படுத்தப்பட்டதோடு, சுத்தமின்மையினால் நோய்கள் பரவும் ஆபத்தும் அதிகமாக இருந்தது.

அநேகமாக சத்திர சிகிச்சை மயக்க மருந்து இன்றி பெரிய கத்திகளால் மேற்கொள் ளப்பட்டதோடு துண்டிக்கப்பட்ட உறுப்புகள் குவித்து வைக்கப்பட்டிருந்தன. பொதுவாக இரத்தத்துக்கான தட்டுப்பாடு நிலவியதால், மீண்டும் துணியால் வடிகட்டிப் பாவிப்பதற்காக நோயாளியின் இரத்தம் பைகளில் சேகரிக்கப்பட்டது.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜேம்ஸ் ஜான்சனின் அதிரடி வென்றது சென்றலைட்ஸ் வி.க.

யாழ்ப்பாணம், மே 10

ஜேம்ஸ் ஜான்சனின் அதிரடியினால் குளியாபிட்டிய சென்றல் விளையாட்டுக் கழகத்தை வெற்றிகொண்டது யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்.

இலங்கை கிரிக்கெட் பிரிவு III க்ககான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று கடந்த சனிக்கிழமை குருநாகல் குளியாப்பிட்டிய சென் றல் விளையாட்டுக்கழக மைதா னத்தில் இடம்பெற்றது.

இதில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குளியாப்பிட்டிய சென்றல் விளையாட்டுக் கழக அணி மோதியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி கொண்ட குளியாப்பிட்டிய சென்றல் விளையாட்டுக் கழகம் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

குளியாப்பிட்டிய சென்றல் விளையாட்டுக் கழக அணி 42:1


ஜேம்ஸ் ஜான்சன்

ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 160 ஓட்டங்களைப் பெற்றது.

ஜெயலத் 55 ஓட்டங்களையும் குமார 19 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக அணி வீரர்களான ஜெரி துஷந் 10 ஓவர்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் ஜெனோசன் நான்கு ஓவர்கள்பந்து வீசி 7ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் வியாஷன் ஏழு ஓவர்கள் பந்து வீசி, 26 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் நிஷாந்தன் எட்டு ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் சாள்ஸ் 9.1 ஓவர்கள் பந்துவீசி, 40 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

161 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 23.1ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றது.

வினோத்குமார் 22 ஓட்டங்களையும் ஜேம்ஸ் ஜான்சன் ஆட்டம் இழக்காமல் 48 பந்துகளில் ஆறு கிக்ஸர்கள், 14 பவுண்டரிகள் அடங்கலாக 120 ஓட்டங்களையும் பெற்றனர்.

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் 150 ஓட்டங்கள் பெற்ற நிலையில் தனது முதலாவது விக்கெட்டை இழந்து. இந்த போட்டிக்கு நடுவர்களாக எம்.ஆர்.வி. பி.விமலசேன, எஸ்.எ.வகிட் ஆகியோர் கடமையாற்றினர். (த-23)

# யாழ்.சென்றல், கன்னியர் மடம் கூடைப்பந்தாட்டத்தில் சம்பியன்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி, யாழ்.திருக்குடும்ப கன்னியர் மடம் அணிகள் வெற்றிபெற்றுச் சம்பியனாகின.

யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டதிடலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ்.மத்திய கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது.

இதில் யாழ்.மத்திய கல்லூரி அணி 37:27 என்ற புள்ளி அடிப்படையில் எதிர்த்து விளையாடிய யாழ். இந்துக் கல்லூரி அணியை வெற்றிகொண்டது.பெண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். திருக்குடும்ப கன்னியர்மட அணியை எதிர்த்து யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி அணி மோதியது. இதில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மட அணி தன்னை எதிர்த்து விளையாடிய வேம்படி மகளிர் கல்லூரி அணியை 39:26 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி கொண்டது. (த-23)

# வடமராட்சிக் கல்வி வலயத்தின் உடற்பயிற்சிப் போட்டி முடிவு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான உடற் பயிற்சிப் போட்டி கடந்த திங்கட்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் ஆண்கள் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி முதலாமிடத்தையும், பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம் இரண்டாமிடத்தையும், இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றது.

பெண்கள் பிரிவில் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும், வல்வை மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும், இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது. (த-190)

# இலங்கை 19 வயதுக் கிரிக்கெட் அணித் தெரிவுக்கு யாழ்.வீரர்கள்

யாழ்ப்பாணம், மே. 10

இலங்கை கிரிக்கெட்டின் 19 வயதுக்கு உட்பட்ட கிரிக்கெட் அணித்தெரிவுக்கான முதலாவது போட்டி நேற்றுத் திங்கட்கிழமை கொழும்பு என்.சி.சி மைதானத்தில் ஆரம்பமானது.

இதில் யாழ். மாவட்டத்திலிருந்து ரியூடர் (சென். பற்றிக்ஸ் கல்லூரி) ஜனந்தன் (மகாஜனாக் கல்லூர), மதுஷன் (யாழ். இந்துக் கல்லூரி), சிலோவின் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோர் பங்கு பற்றுகின்றனர் என வடமாகாண கிரிக்கெட் பயிற்றுநர் ரவீந்திர புஸ்பகுமார தெரிவித்தார். (த-23)

# வெற்றிக் கிண்ணம் றொசாரியன் வி.கவுக்கு

கொழும்புத்துறை, மே 10

கொழும்புத்துறை றொசாரியன் சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் றொசாரியன் விளையாட்டுக் கழகம் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

அரியாலை ச.ச. நிலையத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் ஈச்சமோட்டை ச.ச. நிலை விளையாட்டுக் கழக அணியும் றொசாரியன் அணியும் மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய றொசாரியன் வி.க. அணி 4 இலக்குகளை இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஈச்சமோட்டை வி.க. அணி 4 இலக்குகளை இழந்து 35 ஓட்டங்களை பெற்றது.



6 வீரர்கள் பங்கு பற்றும் 5பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட இப்போட்டியில் 11 ஓட்டங்களால் றொசாரியன் அணி வெற்றிபெற்றது. இச் சுற்றுப் போட்டியில் 30க்கும் மேற்பட்ட கழகங்கள் பங்கு பற்றியிருந்தன.

சிறந்த துடுப்பாட்டத்துக்கான கிண்ணத்தை ஈச்சமோட்டை வி.க. அணி வீரர் எஸ். ஜனனும், பந்து வீச்சாளருக்கான கிண்ணத்தை றொசாரியன் கழக வீரர்களான ஏ.இறஞ்சித்தும் சிறப்பு ஆட்ட நாயகனுக்கான கிண்ணத்தை அ.றொசானும் பெற்றுக்கொண்டனர்.

வெற்றி பெற்ற அணிக்கான வெற்றிக்கிண்ணத்தை சமூக சேவையாளரும் தனு எலக்ரிக்கல்ஸ் உரிமையாளருமான எம். எம். றமீன் வழங்கினார்.

அருட்திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய அனைத்து வீரர்களுக்கும் சிறப்பு கிண்ணங்கள் வழங்கப்பட்டது. (த-135)

# அரையிறுதி ஆட்டம் நாளை

யாழ்ப்பாணம், மே. 10

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்டமட்டத்தில் நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் நாளை புதன்கிழமை 4.30 மணிக்கு பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

# உடற் பயிற்சிப் போட்டி

யாழ்ப்பாணம், மே. 10

தீவக வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உடற் பயிற்சிப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி ஊர்காவற்துறை சென் அன்ரனிஸ் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

# வென்றது ஊரெழு றோயல்

பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவையொட்டி மாவட்டமட்டத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் ஆட்டம் ஒன்றில் ஊரெழு றோயல் விளையாட் டுக்கழக அணி வெற்றிபெற்றது.

கடந்த வெள்ளிக்கிழமை பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மணற்காடு சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் ஊரெழு றோயல் வியைாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் எதிர்த்து விளையாடிய மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை வெற்றிகொண்டது. (த-23)

# போட்டிக்கான அட்டவணை தயாரித்தல்

யாழ்ப்பாணம், மே 10

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்கான அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி அட்டவணை தயாரித்தல் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஆகவே அழைக்கப்பட்ட கழகங்களை தவறாது கலந்துகொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (த-23)

# விஜய குணவர்த்தனவின் சதத்தால் வென்றது கொழும்புப் பல்கலை அணி

வலி வடக்கு, மே 10

கடும் போட்டியின் மத்தியில் கொழும்புப் பல்கலைக் கழகம் ஹசன் விஜய குணவர்த்தனவின் சதத்துடன் வெற்றியைப் பதிவு செய்தது.

அகில இலங்கைப் பல்கலைக் கழக அணிகளுக்கு இடையேயான 50 ஓவர்களுக்கு மட்டுப் படுத்திய கிரிக்கெட் ஆட்டம் யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

பூவா தலையா போட்டதில் வெற்றி பெற்ற கொழும்பு பல்கலைக்கழகம் களத்தடுப்பில் ஈடுபட பேராதனைப் பல்கலைக் கழகம் துடுப்பாட்டத்தில் ஈடுபட்டது.பேராதனைப் பல்கலைக் கழகம் 47.2 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

தசநாயக்கா 46 ஓட்டங்களையும் விஜயசேகரா 46 ஓட்டங் களையும் பெரேரா 20 ஓட்டங்க ளையும் மல்லவராச்சி 18 ஓட் டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 18 ஓட்டங்களும் பெறப் பட்டன.

கொழும்புப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முனிதாஸ 8.2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், அபயசிங்க 6 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்களுடன் 19 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், சீதுங்க 8 ஓவர்கள் பந்து வீசி 47 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.

192 ஓட்டங்களுக்கு வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொழும்புப் பல்கலைக்கழக அணி 30.5 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கான 192 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. ஹசன் விஜய குணவர்த்தன் 15 நான்குகள், 4 ஆறுகளுடன் ஆட்டமிழக்காது 116 ஓட்டங்களை பெற்றதுடன் அனுராதா ஜெயம்பதி 16 சாமல் ராஜபக்ஷ 15 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 24 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பேராதனைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வீரசிங்க 9 ஓவர்கள் பந்து வீசி 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், பத்மஸ்ரீ 6.5 ஓவர்கள் பந்து வீசி 38 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், பெரேரா 10 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவருடன் 65 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டையும் மல்லவராச்சி இரண்டு ஓவர்கள் பந்து வீசி 18 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
10 மே 2011 செவ்வாய்க்கிழமை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## அறிவித்தல்

ஈராண்டுப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதிநேரம் - 2009/11)
பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழுநேரம் - 2009/10)

**புதிய மாணவர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை பிற்போடல்**

*12.05.2011, 13.05.2011* ஆகிய திகதிகளில் நடைபெற விருந்த ஈராண்டுப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (பகுதி நேரம் - 2009/11) மற்றும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா (முழு நேரம் - 2009/10) ஆகிய கற்கை நெறிகளுக்கு புதிய மாணவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்தினால் மேற்படி திகதிகளில் நடைபெறமாட்டாது என்பதனை அறியத்தருகின்றோன்.

நேர்முகப் பரீட்சைக்கான புதிய திகதி பின்னர் பத்திரிகைகளில் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்**
**09.05.2011** (சி-575939)

## JAFFNA TECHNICAL INSTITUTE

No.46, CLOCK TOWER ROAD, JAFFNA.
REGD NO. 15251 - 1984 **ACCA**

**i) ACCA - Association of Chartered Certified Accountants**

- க.பொ.த (சா/த) 3 பாடங்களுடன் உ/தரத்தில் 2 பாட சித்திகள்.
- உயர் தரத்தில் எந்தத் துறை சார்ந்தவர்களும் கற்கமுடியும்.
- 16 வயதுக்கு மேற்பட்டவர்கள்.
- வெளிநாடு செல்வதற்கான இலகுவான வாய்ப்பினை வழங்குகின்றது.
- SBPS அடிப்படையில் கட்டண வசதியும் வங்கிக்கடன் வசதியும்.
- கற்கும் பொழுது வேலைவாய்ப்பு.
- வசதிக்கேற்ப கிளைகளில் பதிவுசெய்து கொள்ள முடியும்.

**ii) Foundation in Accountancy**

- அடிப்படைத் தகுதிகளை எதிர்பார்ப்பவர்கள்.
- 14 வயதிற்கு மேற்பட்டவர்கள்.
- வெளிநாடு செல்வதற்கான இலகுவான வாய்ப்பு.
- ACCA கற்கைக்குரிய அடிப்படைத் தகுதிகளை வழங்கும் சர்வதேச கற்கை.
- விசேட கட்டணங்கள்

**iii) Exemptions**

B.Com, BBA, HNDA, HNDM, HNDBS, BA போன்ற பட்டதாரிகளுக்கு விசேட பாட விலக்களிப்புகளுடன் பாட அடிப்படையிலான கட்டணங்கள்

DECEMBER 2011 **பரீட்சைக்குரிய**
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 14, 15, 21, 22/05/2011

**Regional Office**
JTI, No. 46, மணிக்கூட்டு வீதி, (பெருமாள் கோயிலருகில்) யாழ்ப்பாணம்.

**JTI@ACCA**
Senthuri Multi Spot
(NSB வங்கியருகில்) Atchchuveli
T.P.: 0773222712

**JTI@ACCA**
No.92/1, Ramanathan Road, Jaffna.
T.P.: 0215670345

**JTI@ACCA**
Menadchiamman Kovilady,
Chankathany,
Chavakachcheri.0777111205.
email: jticdu@gmail.com

**JTI @ ACCA**
Nugavil,
Karaveddy. 0776258034.

## மரண அறிவித்தல்

### *திருமதி ரெஜினா மேரி ஜோசப் (லீலா ரீச்சர்)*



யாழ். சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், புங்குடுதீவு துரைசாமி விதியாலயம், கொழும்புத்துறை புனித சூசையப்பர் தமிழ் வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியையும் கோயில் வீதியைப் பிறப்பிடமாகவும் வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ரெஜினா மேரி ஜோசப் (லீலா ரீச்சர்) கடந்த (06.05.2011) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கரம்பன் வைத்தியாம்பிள்ளை மேரி ஜோசப் அவர்களின் அன்பு மனைவியும் J.O.L. றிச்வே (ஒஸ்மன் -உதவி கல்விப் பணிப்பாளர் ஹட்டன்), ஹனிபல் விஜயபாஸ்கரன் (விஜி, ஜேர்மனி), ரெஜினோல்ட் சுவேந்திரன் (றெஜி, ஜேர்மனி), இக்னேசியஸ் செல்வராஜ் (ராஜீ, லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகேஸ்வரி (முன்னாள் ஆசிரியை, யா/சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், ஆசிரியை கொட்டக்கலை த.ம.வி.) ரீஸாமாலா (ஜேர்மனி), கனகேஸ்வரி(ஜேர்மனி), சறோ (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், யூட்சைனுஜன், கரோலின், டிஷாலினி, ரீனுஜன், விவியன், மனுஜன், புளோரியன், அனுஜன், யன்சிகா, டிலான் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான அல்பிறட், செல்வம், மற்றும் கமலா, நேசன் ஆகியோரின் சகோதரியும், கோவில் வீதி காலஞ்சென்ற சூசன் கிறேஸின் மகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (11.05.2011) புதன்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பிள்ளைகள்**

J.O.L.றிச்வே (ஒஸ்மன்)
975/19, வளன்புரம் கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.
0714212241/0773414939

**Email : richwaysir@gmail.com**
**jol.richway@yahoo.com**
**Skype : richway20**

## நோயாளருக்கு விழிப்புணர்வு

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் பிரதி வெள்ளிக்கிழமையில் காலை 8 மணி தொடக்கம் 8.30 மணி வரை சுகாதாரம் தொடர்பாக நோயாளர்களுக்கு விழிப்புணர்வு கருத்தூட்டல்கள் நடத்தப்படவுள்ளன.

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் மாணாகப் பணிப்பாளரின் வழிகாட்டலில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவற்றின் உத்தியோகத்தர்களால் கருத்துரைகள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை மலோரியாவின் தாக்கமும் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் தொடபான கருத்தரங்கு நடைபெறும் என்ற அறிவிக்கப்பட்டுள்ளது.

## பழைய ஓடுகள் விற்பனைக்கு

நீர்வேலியில் பழைய ஓடுகள் விற்பனைக்குண்டு.
**தொடர்புக்கு - 0775537349, 0213215710.**

## வேலை வாய்ப்பு

தாவடியில் அமைந்துள்ள மிக்சர் கொம்பனி ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த மிக்சர் தயாரிப்பாளர்கள், பொதிசெய்பவர்கள் உடனடியாகத் தேவைப்படுகின்றார்கள்.
தொடர்பு - **0777652012.**

## தவறிவிட்டது

சிவகுரு இராஜேஸ்வரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை 641802310V. C.T.B. அடையாள அட்டை, வாகன அனுமதிப்பத்திரம் மற்றும் ஆவணங்களுடன் சிறு தொகைப் பணம் அடங்கிய பேர்ஸ் மருதனார் மடத்துக்கும் மாதகலுக்கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாண பஸ்நிலையத்தில் ஒப்படைக்கவும் அல்லது கீழுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு - **0778694363.**

## சமையலாள்கள் தேவை

**யா/ இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலையில் உள்ள 150 மாணவிகளுக்கு 3 நேரமும் தங்கியிருந்து சமையல் செய்வதற்கு 3 பணியாள்கள் தேவைப்படுகிறார்கள். பொருத்த மானவர்கள் 13.05.2011 வெள்ளிக்கிழமைக்கு முன்விண்ணப்பிக்கவும் அன்று மு.ப. 11.00 மணிக்கு நேரில் வருகை தரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.**

**அதிபர்,**
யா/ இராமநாதன் கல்லூரி, சுன்னாகம்.

## தொலைந்துவிட்டது

NPVX 1403 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு நல்லூருக்கும் காரைநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். தொடர்புகளுக்கு - *0776653862*

## காணி விற்பனைக்கு

**கொக்குவில் மேற்கு, சேச் லேன், முதலி கோயிலடியில் ஒரு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (கே.கே.எஸ். வீதியில் இருந்து 200 மீற்றர் தூரம்)**

**தொடர்பு:- 0774536301** (41)

## விநியோகஸ்தர் தேவை

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல பத்திரிகை நிறுவனம் ஒன்றுக்கு பத்திரிகைகள் பிரதான வீதியூடாக கடைகளுக்கு விநியோகிப்பதற்கு விநியோகஸ்தர்கள் தேவைப்படுகின்றனர். விநியோகஸ்தர்களாகச் செயற்பட விரும்புவோர் உடன் தொடர்புகொள்ள [illegible]

*முகாமையாளர், 117, புகையிரத நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0215670100, 0776164901.*

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம்



தாவடியைப் பிறப்பிடமாகவும், இலக்சுமி இல்லம், உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி சுப்பிரமணியம் நேற்று (09.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கார்த்தி கேசு சுப்பிரமணியம் (பிரபல வர்த்தகர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான க.செல்லத்துரை, க.தில்லைநடராஜா ஆகியோரின் சகோதரியும், திருமதி சு.பரமேஸ்வரி (அமெரிக்கா), திருமதி செ.பரிமளம் (தேவி-ஜேர்மனி), திருமதி சி.காந்திமதி (மணி-உரும்பிராய்), திருமதி த.பராசக்தி (குஞ்சு-ஜேர்மனி), சு.வேலாயுதபிள்ளை (ஜேர்மனி), சு.வெற்றிவேலாயுதபிள்ளை (உரும்பிராய்), திருமதி தி.வசந்தராணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயும், காலஞ்சென்ற செ.நாகரத்தினம் மற்றும் திருமதி தி.சிவபாக்கியம் (பூபதி) ஆகியோரின் மைத்துனியும், சுப்பிரமணியம் (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான செல்வராஜா (ஜேர்மனி), சிவஞானசுந்தரம் (உரும்பிராய்) மற்றும் தருமலிங்கம் (ஜேர்மனி), திருமதி பூமாதேவி (ஜேர்மனி), திருமதி ஞானதேவி (உரும்பிராய்), திருஞானசம்பந்தர் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியா ரும், வசந்தராஜா-அருள்மதி (ஜேர்மனி), சுகந்தன்-ராஜி (அமெரிக்கா), அகிலன்- ராணி (கனடா), விஜிதா- செல்வம் (நோர்வே), வாசுகி-உதயசூரியன் (ஜேர்மனி), தேவகி - இராசேந்திரன் (ஈசன்-ஜேர்மனி), குமணன்-கௌசி (ஜேர்மனி), மைதிலி - ஜெயாதரன் (ஜேர்மனி), குந்தவி - ஜெயபாலச்சந்திரன் (ராயூ - லண்டன்), முரளி (ஜேர்மனி), கஜந்தி (உரும்பிராய்), ஜேசுதரன் (இத்தாலி), நிஜாந்தி (உரும்பிராய்), தபோதினி-முரளிதரன் (ஜேர்மனி), ரமணன் (ஜேர்மனி), சிந்துஜா (ஜேர்மனி), றதீசன் (ஜேர்மனி), விதூசன்-மதுரா (உரும்பிராய்), யூலியான் (ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியும், சத்தியன் (ஜேர்மனி), இலட்சுமி (ஜேர்மனி), பூஜா (அமெரிக்கா), கிரிசியன் (அமெரிக்கா), ஆசா (அமெரிக்கா), மாதங்கி (கனடா), பிரியந்தி (நோர்வே), ராகவன் (நோர்வே), துசாஜினி (நோர்வே), கிருசிகன் (ஜேர்மனி), சாருகன் (ஜேர்மனி), சாயிரன் (ஜேர்மனி), கீர்திகன் (ஜேர்மனி), கபிலன் (ஜேர்மனி), திலீபன் (ஜேர்மனி), இலக்கியா (ஜேர்மனி), ஆதித்தன் (ஜேர்மனி), அபிநயா (ஜேர்மனி), சிர்த்தாத் (ஜேர்மனி), பாரதி (ஜேர்மனி), ஹரி (லண்டன்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை அவரது மகளின் திருத்தணிகை இல்லத்தில் (சிவகுல வீதி, உரும்பிராய் தெற்கு) என்னும் முகவரியில் நடைபெற்று நண்பகல் 12 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பன் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகுல வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

தகவல்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**
(சி-575941)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணம் அத்தியடி பிள்ளையார் ஆலயப் பிரதம சிவாச்சாரியாரும் எமது நிறுவன ஞானபைரவர் ஆலய பிரதம சிவாச்சாரியாருமாகிய

*யோகீஸ்வரக் குருக்கள் பிரபாகரேஸ்வரக் குருக்கள்*

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த வேதனையடைவதுடன் அவர் தம் குடும்பதினரின் ஆறாத் துயரில் பங்கு கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

*பணிப்பாளர், பணியாளர்கள்,*
**தியாகி அறக்கொடை நிறுவனம்.**

*(4023)*

## மரண அறிவித்தல்

### திருமதி சபாநாயகம் சிவஞானரத்தினம்



வருணன், அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாவும் கொண்ட திருமதி சபாநாயகம் சிவஞானரத்தினம் நேற்று (9.05.2011) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சபாநாயகத்தின் அன்பு மனைவியும் திருமதி மயிவாகனம் ஜெயந்தியின் (சக்தி -ஆசிரியை, யா/கதிரிப்பாய் சுப்பிரமணிய வித்தியாலயம்) அன்புத் தாயும் மயில்வாகனத்தின் (யாழ்.பல் கலைக்கழகம்) அன்பு மாமியும் யரணிகா (ஆரணி-யா/வேம்படி மகளிர் கல்லூரி), மதுஷா (யா/அச்சுவேலி மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் நாகராசா (பிரான்ஸ்), சிவநேசன், கமலாம்பிகை (இந்தியா) காலஞ்சென்ற சிவசுப்பிர மணியம், வைகுந்தநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மயில்வாகனம் (மருமகன்),
ஜெயந்தி (மகள்).

வருணன்,
அச்சுவேலி. (சி/575936) (39)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிநாடுகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலி. வடக்கில் மேலும் சில பகுதிகளில் நேற்று மீள் குடியமர்வு இடம்பெற்றது. 9 கிராம சேவகர் பிரிவுகளில் 3,000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டன. அமைச்சர்கள் பசில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், அ.விநாயகமூர்த்தி, சி.சிறீதரன், அரசதரப்பு நாடாளுமன்ற உறுப்பினரான சில்வெஸ்திரி அலென்ரின் மற்றும் யாழ். மாநகர முதல்வர் ப.யோகேஸ்வரி ஆகியோர் இந்த மீள்குடியமர்வை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர்.

மக்களின் மீள்குடியமர்வுக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமார் மேற்கொண்டிருந்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் இடம்பெற்ற விசேட பூசை வழிபாடுகளை அடுத்து மக்கள் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். 20 வருடங்களின் பின்னர் சொந்த மண்ணுக்கும் வீடுகளுக்கும் சென்ற மக்கள், உணர்ச்சிப் பெருக்கோடு காணப்பட்டனர்.

### எதிரிக்கு இடமளியாதீர்

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பஸில், நாட்டின் எப்பகுதியிலும் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இல்லை; சமாதான வலயங்களே இல்லை என்கிற ஜனாதிபதியின் செய்தியுடனேயே தான் இங்கு வந்திருக்கிறார் என்று தெரிவித்தார். எதிரிகள் எவரும் இல்லாத காரணத்தால் ஒரே நாட்டில் எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்வதால் பாதுகாப்பு வலயங்களுக்குத் தேவை ஏதும் இல்லை என்றார் அவர்.

''மீண்டும் எதிரிகளுக்கு இடமளிக்கும் வகையில் வெளிநாட்டுச் சக்திகளுக்கு ஊக்கமளிக்கக்கூடாது. வெளிநாட்டின் உதவியுடன் வந்த ஒப்பந்தத்தால் இந்த நாட்டில் சமாதானம் வரவில்லை. 30 வருடங்களின் பின்னர் படையினர் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுத்தான் இந்த மண்ணை இன்று உங்களிடம் கையளிக்கிறார்கள். இங்கு மீளக்குடியமரும் மக்கள் வெளிநாடுகள் திணிக்கும் தவறான குற்றச்சாட்டுக்களுக்கு துணைபோகக் கூடாது. அது அழிவுக்கே வழி ஏற்படுத்தும்'' - என்று அமைச்சர் பஸில் கூறினார்.

### சிலர் சதி செய்தனர்

இந்தப் பகுதியில் மீள்குடியமர்வை நீண்டகாலத்துக்கு முன்பே செய்வதற்குத் திட்டமிட்ட போதும் சிலரின் சதி வேலை காரணமாக அது சாத்தியப்படாமல் போனதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். ஆனால் அந்தச் சிலர் யார் என்பதை அவர் குறிப்பிடவில்லை.

நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உடனிருந்தார்.

(உ-ஐ)

## மரணஅறிவித்தல்கள்



### திருமதி நாகரத்தினம் நடராசா

அத்தியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகரத்தினம் நடராசா 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் பத்மாவதி (கனடா), பத்மினி (பிரான்ஸ்), ரவீந்திரன் (லண்டன்), லலிதா, மீரா (பிரான்ஸ்), சுகுமார் (ஜேர்மனி), சந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற சற்குணராசா மற்றும் சண்முகராசா (பிரான்ஸ்), தர்மினி (லண்டன்), ஞானசேகரம் (C.T.B.), பாலேஸ்வரன் (பிரான்ஸ்), மாலா (ஜேர்மனி), வசந்தகுமார் (கனடா) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், ராசம்மா, ராசையா, நடராசா மற்றும் மகேஸ்வரி (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ராம்மோகன் (பிரான்ஸ்), ஹரிகரன், விஜயராணி (ஆஸ்திரேலியா), மேகலா (ஆஸ்திரேலியா), ஜானகி (கனடா), நிர்மலா (இந்தியா), நிஷாந்தி (பிரான்ஸ்), பிரியாந்தி (பிரான்ஸ்), கமல் (பிரான்ஸ்), அர்ச்சனா (லண்டன்), திலீப் (லண்டன்), சஞ்சீவன் (லண்டன்), விதுரா, சறா (பிரான்ஸ்), பமிலா (பிரான்ஸ்), மார்க் (பிரான்ஸ்), ரதீஸ் (ஜேர்மனி), ரிதூசன் (ஜேர்மனி), ருக்சன் (ஜேர்மனி), அபினா (கனடா), ராகவி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அபிராமி, சௌமியா, பிரியங்கா, பிருந்தன், ரம்மியா, கோபி, மயூரி, திவ்விய பாரதி, சாய்சுரேகா ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.ஞானசேகரம் (மருமகன்-C.T.B.)
தொ.பே. :021 222 5926

இல.104/5, அத்தியடி குறுக்குவீதி,
யாழ்ப்பாணம்.
(4033) (34)

### ஐயாமுத்து இராஜரெத்தினம்

(இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் சென்னையில் வசித்து வந்தவருமாகிய ஐயாமுத்து இராஜரெத்தினம் கடந்த 07.05.2011 சனிக்கிழமை சென்னையில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா ஐயாமுத்து-கமலநாயகி தம்பதியரின் மகனும், மாணிக்கரெத்தினத்தின் கணவரும், பாலராணி (ஆஸ்திரேலியா), ஆனந்தராணி (லண்டன்), இரத்தினராஜ் (கனடா), ஆனந்தராஜ் (நோர்வே), முத்துராஜ் (நோர்வே) ஆகியோரின் தந்தையும் காலஞ்சென்றவர்களான திருப்பதி, மகாலிங்கம் மற்றும் இரத்தினசிங்கம் (வல்வெட்டித்துறை), திருமதி இரத்தினகாந்தி சண்முகவடிவேல் (லண்டன்), காலஞ்சென்றவர்களான திருமதி சந்திரகாந்தி சண்முகசுந்தரம், திருமதி புஸ்பகாந்தி மயில்வாகனம், இரத்தினவடிவேல் ஆகியோரின் சகோதரரும், இரதத்தினவடிவேல் தனபாலசிங்கத்தின் (ஆஸ்திரேலியா) மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை சென்னையில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெணியம்பை,
வல்வெட்டித்துறை.
தொ.பே. இல. 0213217838,
0776638413.

தகவல்:
ஐ.இரத்தினசிங்கம்.
(107)



### அந்தோணிப்பிள்ளை ஜோன் சில்வஸ்டர்

(வவா ஆட்டோ மெக்கானிக்)

மன்னாரைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், சுன்னாகம், சூராவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோணிப்பிள்ளை ஜோன் சில்வஸ்டர் (வவா ஆட்டோ மெக்கானிக்) கடந்த 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அந்தோணிப்பிள்ளை-மேரிபற்றீமா ஜசிந்தா தம்பதியரின் செல்வப்புதல்வனும் சூராவத்தையைச் சேர்ந்த நமசிவாயம் கனகலிங்கம்-சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் ஆரணி சில்வஸ்டரின் அன்புக் கணவரும் மேரிபிரின்சியா, திருச்சுதன், விதுசன் ஆகியோரின் தகப்பனும் திருமதி மனுலா, ஜோன், மைக்கல், தனுஜா, சஞ்சீவன், தர்சினி ஆகியோரின் சகோதரரும் மன்னார் திருச்சபை போதகர் பத்திநாதன், செபஸ்ரியாம்பிள்ளை, அகஸ்ரின் (ஜேர்மனி), அருள்நாயகி, காலஞ்சென்ற ஜோன் பப்டிஸ்ற் மற்றும் றொபின்சன், அந்தோணியம்மா, காலஞ்சென்ற செல்வமாணிக்கம் ஆகியோரின் மருமகனும் ஜீயியஸ், திருமதி லதா, திருமதி டொறன்சியா ஆகியோரின் மச்சானும் ஆவார்.

அன்னாரின் பூவுடல் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு சூராவத்தை புனித தெரேசா தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு ஏழாலை சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை, சுன்னாகம்.
தொடர்புகளுக்கு :0716209118, 0773953787

தகவல்:
குடும்பத்தினர்.

## பல்கலைக்கழக..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலத்தில் தலைமைத்துவத்தை ஏற்று, பாரம்பரியத்தைக் காத்து, முன்னுதாரணமாகத் திகழ வேண்டிய மாணவர்கள் பொறுமையுடன் தமது பிரச்சினைகளைத் தாமே தீர்க்கவேண்டும். பொலிஸ், இராணுவ பிரசன்னத்துக்கும் தலையீட்டுக்கும் இடமளிக்காமல் பல்கலைக்கழக செயற்பாடுகளைத் தொடரவேண்டும் என்று அவர் நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

### விற்பனைக்கு

1 வயது நிரம்பிய ஜேர்மன் சப்பேட் அல்சேசன் ஆண், பெண் நாயும், டாசோன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 45 நாள்கள் பூர்த்தியான பொமேரியன் குட்டிகளும், நல்ல இன பால் ஆடுகளும் விற்பனைக்கு.

தொடர்பு- வி.மயூரன்,
இல. 209, ராஜா கிளாசா முன்பாக, கோண்டாவில்.

### வீடு வாடகைக்குத் தேவை

நல்லூர் அல்லது அதனை அண்டிய பகுதியில் மூவர் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு மூன்று அறைகள் மற்றும் வாகனத் தரிப்பிடத்துடன் கூடிய வீடு ஒன்று வாடகைக்குத் தேவை.

தொடர்பு-0771758494

### வீடு வாடகைக்கு

இல.24, சிவன் கோயில் வடக்கு வீதி, (வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு முன்பாக ) வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு .

தொடர்புகளுக்கு-0212228695

### தவறிவிட்டது

கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த இராசரத்தினம் சுதர்சன் என்பவரது தேசிய அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், மற்றும் மோட்டார் வாகன ஆவணங்கள் என்பன கோண்டாவில் [illegible]

தொடர்புகளுக்கு -0776176456, 0779597291

## கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்களுக்குத் தெரியப்படுத்தப்படாத பேச்சுகள் சட்டபூர்வமான பேச்சுகள் அல்ல. பேச்சுகளின் விவரங்கள் மக்களைச் சென்றடையாமல் தடுப்பது மக்களுக்குச் செய்யப்படுகின்ற துரோகமாகும்.

கடந்த 2002 ஆம் ஆண்டில் இருந்து இந்த நாட்டில் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச் சுகளின்போது பகிரங்கமாகச் சொல்லப்பட்ட விடயங்களில் எந்தத் தோல்வியும் இடம்பெறவில்லை என்றும் இரகசியமாக நடத்தப்பட்ட பேச்சுகளில் காணப்பட்ட உடன்பாடுகளால் பேச்சுகள் தோல்வியடைந்தன என்றும் பஷீர் சேகுதாவூத் சுட்டிக்காட்டி யுள்ளார்.

உலக முஸ்லிம் இளைஞர் தொழுகையினதும் கல்வி அபிவிருத்தி அமைப்பினதும் ஏற்பாட்டுக்குழு ஒழுங்கு செய்திருந்த ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு அண்மையில் மாத்தளை ஸாஹிராக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதி அமைச்சர் பஷீர் சேகுதாவூத்.

மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:-

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களின் விவரங்களை இரகசியமாக வைத்திருக்க அரசு முடிவு செய்துள்ளது. ஆனால் கல்வியில் எவ்வாறு ஒரு பகிரங்கத் தன்மை தென்படுகிறதோ அவ்வாறு இந்த நாட்டின் அனைத்து விடயங்களிலும் பகிரங்கத்தன்மை அவசியமாகும். விசேடமாகப் பேச்சுகளில் பகிரங்கத்தன்மை மிக முக்கியமானது. 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற பேச்சுகள் முடிவுற்று, மீளவும் ஆரம்பிக்கப்பட்ட யுத்தமும் முடிந்துள்ள நிலையில், தமிழ் மக்களிடையே பெரும்பான்மை ஆதரவைப் பெற்ற, தமிழர் தரப்பு ஜனநாயக சக்தியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு அரசு பேச்சுகளை நடத்துகிறது.

வளர்ச்சிப் பாதையில் நாடு முன்னேறுவதற்கு சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்பதில் சந்தேகம் இல்லை.

தற்போது அச்சம் அகன்று நிம்மதியான வாழ்வு கிடைத்திருக்கின்ற சூழ்நிலையில் இந்த நாட்டை முன்னேற்றுவதாக இருந்தாலும், நாட்டின் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்த்து ஒன்றுபட்ட சமுதாயங்களாகவும், சமத்துவம் உள்ள மக்களாகவும், இலங்கையர் என்ற உணர்வுடன், தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர், மலாயர், மலையக மக்கள் அனைவரும் வாழவேண்டுமாக இருந்தால் பகிரங்கத் தன்மையும், சமத்துவமும், கல்வி முன்னேற்றமும் மிகமிக முக்கியமானவை.

- இப்படி அவர் கூறினார்.

## 13 ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படவேண்டும் என்று கூட்டமைப்புக் கோருகிறது. ஆனால், இந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை அரசிடம் உள்ளது.

ஏற்கனவே, தமிழ் இளைஞர்கள் பொலிஸ் பிரிவில் இணைக்கப்பட்டு வருகின்றனர். மேலும் 700 பேர் விரைவில் சேர்த்துக்கொள்ளப்படுவர். இதனை 10 ஆயிரமாகவும் அதிகரிக்க முடியும். கூடுதல் தமிழ் இளைஞர்களை பொலிஸ் பிரிவில் உள்வாங்கி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு செனட் சபையை உருவாக்கும் திட்டம் குறித்தும் ஆலோசிக்கப்பட்டுவருகிறது. செனட் சபையில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமான சிறுபான்மை மக்களை உள்ளடக்குவது குறித்தும் பரிசீலனை செய்யப்பட்டுவருகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நல்லதொரு வாய்ப்புக் கிடைத்துள்ளது. இந்த வாய்ப்பைத் தவறவிட்டால் பின்பு ஒருபோதும் வாய்ப்பு ஏற்படாது.

நாட்டின் நன்மை கருதி அனைவரும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். ஐக்கிய இலங்கைக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வந்துள்ளதால் தற்பொழுது தீர்வுக்கான சாதகமான சூழ்நிலை காணப்படுகிறது.

- இப்படி அவர் கூறினார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலங்கை வரும் இந்திய உயர்மட்டக் குழு குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

வழமையான பரஸ்பர நல்லெண்ண அடிப்படையிலேயே இந்தியக் குழு வருவதாகக் கூறினார்.

நிபுணர் குழு அறிக்கை குறித்து விவாதிக்கவே இக்குழு வருவதாக வெளியான செய்திகளை அவர் மறுத்தார்.

வடக்கு, கிழக்கு அபிவிருத்தி குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்வதன் மூலமும் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது மூலமும் நாட்டின் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும். வடக்கு, கிழக்கு அபிவிருத்தியில் கூட்டமைப்பு அதிக கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

(சி)

## நிபுணர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கத் தூதரகத்துக்கு அருகிலுள்ள பல்கலைக்கழக வளாகத்தில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனை கனேடியத் தமிழ்க் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது.

நிபுணர் குழுவின் அறிக்கையை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு மேற்கு நாடுகள் அழுத்தம் கொடுக்க வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று கனேடிய தமிழ்க்காங்கிரஸின் பேச்சாளர் டேவிட் பூபாலபிள்ளை தெரிவித்தார்.

வன்னியில் இறுதிக்கட்டப் போர் உச்ச நிலையில் இருந்த வேளை இதே இடத்தில் இவ்வாறானதொரு ஆர்ப்பாட்டத்தை கனடாவில் உள்ள தமிழர்கள் நடத்தி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

(உ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் தெளிவான வானிலை நிலவுவதற்கான சாத்தியம் உள்ளது.



வலி.வடக்குப் பகுதியில் மீள்குடியமர்வு நடவடிக்கைகளை மங்கள விளக்கேற்றி கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராசாவும் யாழ். அரச அதிபர் இமெல்டா சுகுமாரும் ஆரம்பித்து வைத்தனர். அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, டக்ளஸ் தேவானந்தா, கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறீதரன், ஈ. சரவணபவன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# அடிப்படை வசதிகள் இன்றி வலி.வடக்கில் அல்லாடும் மீள்குடியமர்ந்தோர்

யாழ்ப்பாணம், மே 10

கீரிமலை, வலித்தூண்டல் கிராமத்தில் மீளக் குடியமர்ந்த 150 குடும்பங்கள் வாழ்வாதார உதவியோ அடிப்படை வசதிகளோ இன்றி அல்லற்படுகின்றன. அவற்றை நிவர்த்தி செய்து மக்களின் வாழ்வினை மீளக்கட்டியெழுப்ப உரிய தரப்புகளிடம் எங்கள் பிரச்சினைகளை எடுத்துரையுங்கள்.

இவ்வாறு நேற்று மாலை கீரிமலை, வலித்தூண்டல் பகுதிகளுக்குச் சென்ற கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் அந்தப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய மக்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன், எஸ். சிறிதரன் ஆகியோர் அந்த மக்களுடன் கலந்துரையாடி, அவர்களின் பிரச்சினைகள், தேவைகள் என்பன குறித்து கேட்டறிந்தனர்.

இதன்போது

அவர்களிடம் அப்பகுதிகளில் மீள்குடியமர்ந்துள்ள மக்கள் தெரிவித்தவை வருமாறு:-

* மீளக்குடியமர்ந்து 3 1/2 மாதங்கள் கழிந்த போதும் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவில்லை. அண்மையில் உள்ள கடலில் இறங்கி தொழில் செய்ய வசதியில்லை.
* மீன்பிடி உபகரண வசதிகள் எவையும் தரப்படவில்லை.
* உலர் உணவு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை.
* மலசல கூட வசதிகள் செய்யப்படவில்லை.
* தற்காலிக கொட்டில் களில் தங்கியிருப்பதால் உதவவேண்டும்.
* கல்வி வசதி செய்யப்படவில்லை.

மீள்குடியமர்ந்த மக்களுக்கு மேற்குறித்த வாழ்வாதார உதவிகள் எதுவும் செய்யபடாததால் பெரும் நிர்க்கதிக்கு உள்ளாகி உள்ளோம். எனவே இவற்றை நிவர்த்திக்க உதவுங்கள் - என்று தெரிவித்தனர். (ஐ-14)

# சிதைந்துபோன தம் இருப்பிடங்களைக் கண்டு கண்ணீர் விட்டழுதனர் வலி.வடக்கு மக்கள்

யாழ்ப்பாணம், மே.10

வலி.வடக்கில் மீளக்குடியமர நேற்று அனுமதிக்கப்பட்ட மக்கள் தமது அழிவடைந்த சிதைந்த வீடுகளை நேற்று பார்த்து விட்டு கண்ணீரும் கவலையுமாகத் திரும்பினர்.

நேற்றுக்காலை முதல் வலி வடக்கு பிரதேச செயலர் அலுவலகத் துக்கு முன்னால் கூடிய ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பஸ்கள் மூலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

மதிய உணவு இன்றி இவர்கள் நீண்டநேரம் காத்துக்கிடந்தனர். மக்களை மீளக்குடியமர்த்தும் நிகழ்வு 3.30 க்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் வருகையில் தாமதம் ஏற்பட்டதால் ஒரு மணித்தியாலம் தாமதித்தே இந் நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வு முடிவடைந்து அமைச்சர் கள் புறப்பட்டுச் சென்ற பின் அங்கு சமூகமளித்திருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் எஸ்.சிறீதரன் ஆகியோரிடம் இதுவரை மீளக் குடியமர அனுமதிக்கப்படாத மக்கள் தம்மையும் சொந்த நிலங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறு கோரினர்.

இது தொடர்பாகப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரனுடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடினர்.

குறிப்பிட்ட இடங்களில் கண்ணிவெடிகள் முற்றாக அகற்றப்பட்டதால் மக்கள் அந்த இடங்களுக்குச் சென்று பார்வையிடலாம் என்றும், ஆயினும் மண்டிக்கிடக்கும் மரங்களை வெட்டி அகற்றி மீளக்குடியமர்த்த ஒருவாரம் செல்லும் எனவும் பிரதேச செயலர் தெரிவித்தனர்.

மக்கள் மயிலிட்டி வீதி, கீரிமலை வீதி, கே.கே.எஸ். வீதி மாவிட்டபுரத்தில் இருந்து தெல்லிப்பழை வரை) சென்று வீடுகளைப்பார்வையிட்டனர்.

வீடுகளின் அழிவுகளைக் கண்டு மக்கள் கண்ணீர் மல்கினர். இதேவேளை ஒன்பது கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 3511 குடும்பங்களைச் சேர்ந்த 12, 274 பேர் நேற்று மீளக் குடியமர அனுமதிக்கப்பட்டனர்.

இதில் நகுலேஸ்வரம், கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், மாவிட்டபுரம் தெற்கு, தந்தை செல்வபுரம், தெல்லிப்பழை கட்டுவன் மேற்கு ஆகிய பகுதிகள் முழுமையாக விடுவிக்கப்பட்டு, அங்கு மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட் டனர்.

கட்டுவன் ஏற்கனவே கட்டுவன் மேற்கின் ஒரு பகுதியில் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டிருந்தது. என வலிவடக்குப் பிரதேச செயலர் எஸ்.முரளிதரன் தெரிவித்தார்.

மேலும் வீமன் காமம் வடக்கு வீமன் காமம் தெற்கு, வறுத்தனை, விளான், கட்டுவன் ஆகிய இடங்களில் குறித்த சில பகுதிகளில் மீளக் குடியமர நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

வீமன் காமம் வடக்கு பகுதியில் அரைவாசிப் பகுதியில் வீமன் காமம் தெற்குப் பகுதியிலும் முக்கால் பகுதியிலும் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்டுள்ளனர். வறுத்தளை விளான், கட்டுவன் ஆகிய பகுதிகளில் மிகச் சிறியவை. அங்கு சுமார் 30 குடும்பங்கள் தான் அந்தப் பகுதியின் பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்பட்டுள் என எனவும் வலி.வடக்கு பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ஐ-14)

# நிகழ்வுகள்

## வீரமணி ஐயர் நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், மே.10

யாழ். தேசியக் கல்வியற்கல்லூரியின் 11 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டி பிரம்மஸ்ரீ த.வீரமணி ஐயாவின் நினைவு நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ''சத்தியவான் சாவித்திரி'' 'பூதத் தம்பி' ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்படவுள்ளன என நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (10)

## வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே.10

கும்பழாவளை ஐங்கரனின் இசைப் பேழை வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை இரவு 9 மணிக்கு கும்பழாவளை விநாயகர் ஆலய முன்றிலில் நடைபெறவுள்ளது.

தர்மகர்த்தா சபைத் தலைவர் ம.பத்மநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவுக்குப் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்துகொள்வார்.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி [illegible] திருநாவுக்கரசு நிகழ்த்தவுள்ளார். (ற)

## நிகழ்ச்சித் திட்டம்

இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவகப் பிரதேசத்துக்கான புண்ணிய கிராம நிகழ்ச்சித்திட்டம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உதவியாளர் எஸ்.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கெ.தவராசா கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் பிரமசாரி யாக்கிரத் சைத்தன்ய சுவாமிகள், ஆசிரியர் இரா.செல்வவடிவேல், ந.நவராஜ் ஆகியோர் விரிவுரைகளை நிகழ்த்தவுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசுக்கு எதிரான கருத்தரங்குகளை வெளிநாடுகளில் தமிழினி நடத்தியுள்ளாராம்

## இரகசிய பொலிஸார் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளின் மகளிரணித் தலைவி தமிழினி வெளிநாடுகளில் இலங்கை அரசுக்கு எதிரான மகளிர் கருத்தரங்குகளை நடத்தியுள்ளதாக இரகசியப் பொலிசார் குற்றம்சாட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகளுடனான இறுதி யுத்தம் முடிவடைந்திருந்த நிலையில் புலிகளின் மகளிரணித் தலைவி தமிழினி கடந்த 2009ஆம் வருடம் மே மாதம் 20ஆம் திகதி படையினரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

அதன் பின் அவர் மீதான விசாரணைகள் முடிவடைந்துள்ள போதிலும் வழக்குத்தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் இது வரை மேற்கொள்ளவில்லை.

அவ்வாறான நிலையில் அவரது விளக்கமறியலை நீடிப்பதற்கான மனு மீதான விசாரணை நேற்று நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இரகசியப் பொலிசார் மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அரசப் படைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடியது மாத்திரமன்றி விடுதலைப் புலிகளின் பணத்தில் வெளிநாடுகளுக்குச் சென்று அரசுக்கு எதிரான மகளிர் கருத்தரங்குகள் பலவற்றை நடத்தியுள்ளதாக இரகசியப் பொலிசார் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டினர்.

அத்துடன் அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அறிக்கை சட்ட மா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ள போதும் இன்னும் வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் இரகசியப் பொலிசார் சுட்டிக்காட்டினர்.

அதனையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் 06ஆம் திகதி அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது. (10)

# சிறைச்சாலை ஆணையாளர் நீதிமன்றில் ஆஜரானார்


முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின்போது பொன்சேகாவை நீதிமன்றத்தில் ஆஜராக்கத் தவறியமை தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகி விளக்கமளித்தார்.

தன்னை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து சரத் பொன்சேகா தாக்கல் செய்த மனு தொடர்பாக மே 3 ஆம் திகதி நடைபெற்ற விசாரணையின்போது பொன்சேகாவை நீதிமன்றில் ஆஜராக்கத் தவறியமை குறித்து விளக்கமளிக்குமாறு சிறைச்சாலை ஆணையாளருக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அதன்படி சிறைச்சாலை ஆணையாளர் நேற்று நீதிமன்றில் ஆஜரானார். போக்குவரத்து நெரிசல் காரணமாக பொன்சேகாவை உரிய நேரத்திற்கு நீதிமன்றம் அழைத்துவர முடியவில்லை என அவர் விளக்கமளித்தார்.

அவரின் விளக்கத்தை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம், அவ்வாறான சம்பவம் இனி நடைபெறக்கூடாது என வலியுறுத்தியது.

போக்குவரத்து நெரிசல் ஏற்படலாம் என்பதைக் கருத்திற் கொண்டு, விசாரணைகளுக்காக மனுதாரரை உரிய நேரத்தில் நீதிமன்றுக்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (10)




'லங்கா ஈ நியூஸ்' இணையதளத்தின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டமை மற்றும் அந்த இணையதளத்தின் ஊடகவியலாளர் சாந்த விஜேசூரிய கைது செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து நேற்று புறக்கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஜனநாயகத்துக்கான ஊடக இயக்கம் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

# இராணுவப் பயிற்சி வழங்கும் திட்டத்துக்கு பல்கலை. மாணவர் ஒன்றியம் எதிர்ப்பு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்கும் அரசின் திட்டத்துக்கு நாம் கடும் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றோம். அதேவேளை, பெற்றோர் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு அரசின் இந்தத் திட்டத்துக்கு எதிர்ப்பைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

- இவ்வாறு அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் சஞ்சீவ பண்டார தெரிவித்தார்.

மருதானையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி வழங்கல் மற்றும் ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புவதற்காகவே அரசு இராணுவப் பயிற்சி வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளது எனக் கூறப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர்கள் ஒழுக்கமாகவே நடந்துகொள்கின்றனர். நாட்டில் இடம்பெறும் ஒழுக்கமற்ற செயற்பாடுகளை அரசு முதலில் தடுத்து நிறுத்த வேண்டும்.

உயர்கல்வி அமைச்சர் எமது ஒழுக்கத்தைப் பற்றிப் பேசுகின்றார். அவரிடம் ஒழுக்கம் இருக்கின்றதா என நாம் கேள்வி எழுப்புகின்றோம்.

இராணுவத்தினரை நம்பி நாம் எப்படி மாணவ மாணவிகளைப் பயிற்சிக்காக முகாம்களுக்கு அனுப்புவது? - என்று கேள்வி எழுப்பினர்.

# இலங்கை விளையும் அரிசியில் ஆர்சனிக் நச்சுப்பொருள்?

## மக்கள் புதற்றம்

இலங்கையின் சில பகுதிகளில் விளையும் நெல் வகைகளில் ஆர்சனிக் என்ற நச்சுப்பொருள் அதிகளவு காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளதை தொடர்ந்து மக்கள் மத்தியில் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையின் மதவாச்சி, பதவியா மற்றும் சிறீபுர ஆகிய பகுதிகளில் விளையும் நெல்களில் ஆர்சனிக் என்ற இரசாயனப்பொருள் அதிகளவில் காணப்படுவதாகக் களனி மற்றும் இராஜரட்டை பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் ஆய்வின் மூலம் கண்டறிந்துள்ளனர்.

மதவாச்சிப் பகுதியில் விளையும் நெல்களில் ஒரு கிலோ அரிசியில் 258 மைக்ரோ கிராமும், பதவியா பகுதியில் விளையும் அரிசியில் ஒரு கிலோவுக்கு 326 மைக்ரோ கிராமும், சிறீபுர பகுதியில் விளையும் அரிசியில் ஒரு கிலோவுக்கு 550 மைக்ரோ கிராமும் ஆர்சனிக் நச்சுப் பொருள் உள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இராஜரட்டை பகுதியில் உள்ள மக்களில் பலர் நீரழிவு மற்றும் இருதய நோய்களால் பாதிக்கப்பட்டு வருவதை தொடர்ந்தே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பொதுவாக ஆர்சனிக் இரசாயனப்பொருள் மனித உடலில் நச்சுத்தன்மையை உண்டுபண்ணும். அத்துடன் புற்றுநோய், இருதய நோய்கள் மற்றும் நீரழிவு நோய் போன்றவற்றை ஏற்படுத்துவதுடன் அவற்றினை தீவிரப்படுத்தும் காரணியாகவும் அமைகிறது. நெல் வயல்களில் தெளிக்கப்படும் பூச்சி நாசினிகள் மூலமே இந்த நச்சுப்பொருள் அரிசியில் சேர்ந்திருக்கலாம் என விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

பூச்சிகளையும், களைகளையும் கொல்வதற்கு இலங்கையில் பயன்படுத்தப்படும் பூச்சி மற்றும் களை நாசினிகளில் ஆர்சனிக் இரசாயனப்பொருள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. உலக நாடுகள் பலவற்றிலும் ஆர்சனிக் இரசாயனப் பயன்பாடு விவசாய நடவடிக்கைகளில் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பிஸ்கட் வகைகளிலும் தடை செய்யப்பட்ட மெலமன் என்ற நச்சுப்பொருள் உள்ளதாக தெரிவித்து அதன் இறக்கு மதிக்கு ஐரோப்பிய ஒன்றியம் அண்மையில் தடை விதித்திருந்தது.

இதேவேளை ஐரோப்பிய நாடுகளில் காணப்படும் பல ஆசிய நாட்டவர்களின் கடைகளில் இலங்கையில் இருந்து கொண்டுவரப்படும் பிஸ்கட்டுக்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்படுவதை தற்போதும் காணமுடிவதாக பிரிட்டனைச் சேர்ந்த தமிழர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கைப் பொருள்களைப் புறக்கணியுங்கள் என பல அமைப்புகள் தொடர்ந்து கோரிவரும் நிலையிலும், அப் பொருள்கள் சில வற்றில் நச்சுத்தன்மை இருப்பது உறுதிசெய்யப்பட்ட பின்னரும் தமிழர்கள் அதனை வாங்குவது குறிப்பிடத்தக்கது.

(அதிர்வு)

# இணையச் செய்திகள்

## இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பான கருத்தரங்கு

இலங்கையின் இடம்பெற்ற போர்க்குற்றங்கள்- ஐ.நாவின் அறிக்கையும், அதன் சம்பந்தப்படுத்தல்களும் என்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று புதுடெல்லியில் இன்று நடைபெறவுள்ளது.

புதுடெல்லி உச்சநீதிமன்றத்துக்கு எதிரேயுள்ள கிருஸ்ண மேனன் பவானில் இன்று பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 7.30 மணிவரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் ஐ.நாவின் போர்க்குற்ற அறிக்கையும் வெளியிடப்படவுள்ளது.

இதில் முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், எழுத்தாளர்கள், நீதிபதிகள், ஊடகவியலாளர்கள் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (புதினப்பலகை)

## சிறந்த தாய்களின் நாடு: இலங்கைக்கு 86ஆம் இடம்

ஒரு தாயாக இருப்பதற்கு சிறந்த நாடு என்ற கருப்பொருளில் சேவ் த சில்ரன் நடத்திய ஆய்வொன்றில் 164 நாடுகள் அடங்கிய பட்டியலில் இலங்கை 86ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இதேவேளை இந்த ஆய்வு 'குறை அபிவிருத்தி நாடு' என்ற வகுதிக்கும் தனியாக நடத்தப்பட்டது. இதில் 79 நாடுகளுள் இலங்கை 43ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. இதில் இந்தியா 75ஆவது இடத்தையும் பாகிஸ்தான் 77ஆவது இடத்தையும் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த ஆய்வில் நோர்வே முதலாவது இடத்தைப் பிடித்துள்ள நிலையில், குண்டுத் தாக்குதலால் இறப்பதற்கான வாய்ப்பைவிட குழந்தை பிறப்பின்போது ஒரு பெண் 200 மடங்கு நிகழ்தகவு (சாத்தியம்) காணப்படும் ஆப்கானிஸ்தான் கடைசியாக வந்துள்ளது.

நோர்வே, அவுஸ்திரேலியா, ஐஸ்லாந்து, சுவீடன், டென்மார்க் ஆகியவை அதி சிறந்த 5 நாடுகளாக வந்துள்ளன.

மிக மோசமான 5 நாடுகளாக ஆப்கானிஸ்தான், நைகர், கினியத் பிஸோ, யேமன், சாட் ஆகிய நாடுகள் காணப்பட்டுள்ளன. (தமிழ்மிரர்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சம்பள உயர்வுகோரி யாழ். பல்கலைக்கழகத்திலும் துறைத் தலைவர்கள் ராஜினாமாப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.10

இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் சேர்ந்த துறைத்தலைவர்கள் சம்பள உயர்வு கோரி நேற்றுத் தமது பதவிகளை ராஜினமாச் செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த போராட்டத்துக்கு ஆதரவாக யாழ்பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும்சேர்ந்த துறைத்தலைவர்கள், விடுதிக்காப்பாளர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள் ஆகியோர் நேற்று தமது பதவிகளை இராஜினமாச் செய்தனர்.அத்துடன் அனைத்து பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் போராட்டத்துக்கு தாம் பூரண ஆதரவு தெரிவிப்பதாக யாழ். பல்கலைக்கழக ஆசியர் சங்கத் தலைவர் பேராசிரியர் விக்னேஸ்வரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

அனைத்து பல்கலைக்கழகங்களிலும் இடம் பெறும் இந்தப் போராட்டத்துக்கு யாழ் பல்கலைக்கழக ஆசியர் சங்கமும் ஆதரவு தெரிவித்துள்ளது. பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்களையும் சேர்ந்த துறைத்தலைவர்கள் சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்து பூரண ஆதரவை வெளிப்படுத்தினர்.

நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் சில இந்த போராட்டத்தால் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இந்தப் போராட்டம்தொடருமானால் யாழ் பல்கலைக்கழகமும் ஸ்தம்பிதமடையும் சூழல் உருவாகும் - என்றார். இதேவேளை ராஜினாமா செய்வதனால் 3 மாதங்களுக்கு முன் அறிவித்தல் கொடுக்கப்படவேண்டுமென சுற்று நிருபம் ஒன்று கடந்த மூன்றாம் திகதி பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்டது தொடர்பாக அவரிடம் கேட்போது அது தவறான ஒரு சுற்று நிருபம் என்று தெரிவித்தார்.

இதே வேளை, கடந்த சனிக்கிழமை மாணவர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து பல்கலைக்கழகத்தை சுற்றிவர குவிக்கப்பட்ட பொலிஸாரின் கண்காணிப்புப் பணி நேற்றும் தொடர்ந்தது. பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மாணவர்கள் இருவரும் நேற்று இரவு வரை விடு விக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (319)

# செந்நிறமாக மாறுகிறது கடல் நீர்; கலக்கத்தில் வடமராட்சி மீனவர்கள்

பருத்தித்துறை இன்பருட்டி கடற் பகுதியில் மீன்பிடியில் ஈடுபடும்வேளை சிவப்பு மற்றும் கலங்கிய சேற்று நிறத்தில் கடல்நீர் மாறிவருவதாக அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கரையிலிருந்து 6 கடல் மைல் தூரத்திலுள்ள பகுதியில் விரித்த வலைகளை வெளியில் எடுத்த சமயத்தில் கடல்நீர் சிவப்பாகவும், சேற்று நிறமாகவும் மாறியது. அத்துடன் வலையும் முழுதுமாகச் சிவப்பு நிறமாக மாறியிருந்தது என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இக்காலப்பகுதியில்தான் அதிகளவு மீன்கள் பிடிபடுவது வழமையாகும். எனினும் கடந்த ஒரு மாத காலமாக பிடிக்கப்படும் மீன்களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடல் நீர் செந்நிறமாக மாறுகின்ற அசாதாரண நிகழ்வு இயற்கை அனர்த்தங்கள் ஏதும் ஏற்படுவதற்கான அறிகுறியாக இருக்குமோ என மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

(323)

ஆர்கி என்ரப்பிறைசஸ்


150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

## திறப்புவிழா ஒத்திவைப்பு

நெல்லியடி மத்திய மகாவித்தியாலயக் கலையரங்கத் திறப்பு விழாஏற்கனவே அறிவித்தபடி இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறமாட்டாது என பாடசாலை அதிபர் எஸ்.சேதுராஜா அறிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவிருந்த வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பிறிதொரு நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளமையாலே இந்தநிகழ்வு ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(323-236)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 03.10.1944

இறப்பு: 10.04.2011

அமரர் சின்னப்பு நடராசா
(SLAS)
(முன்னாள் உதவித் தேர்தல் ஆணையாளர், யாழ்ப்பாணம்)

நற்பண்புகள் நிறைந்த - என்றும்
ஆடம்பர வாழ்வில்லாது - எப்போதும்
ராஜாவாகத் திகழ்ந்த - எங்கள்
சாயாத கோபுரம் சாய்ந்ததேனோ?

பிரசாத் லேன்,
நவாலி தெற்கு, மானிப்பாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்

(48,27,22)

## தமிழரை...

(முதலாம் பக்கத் தொடரச்சி)

பெற்றமை கவலைக்குரியதாகும்.

நிபுணர் குழு அறிக்கையைத் தமிழ் மக்களின் சார்பில் வரவேற்பாதாக கூட்டமைப்பு அறிவித்துள்ளது. இந்நிலையில் தமிழ் மக்களின் கருத்துக்கு மாறாக வெளியிடங்களில் இருந்து வந்து கையொப்பத்தை பெறுவது மக்களின் உண்மையான கருத்தை வெளிப்படுத்தாது.

இந்தச் சம்பவம் படையினர், பொலிஸார் ஆகியோரின் பிரசன்னத்துடன், நிர்ப்பந்தத்துடன் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படுகின்றது. இது ஒரு ஜனநாயக விரோதச் செயற்பாடு.

கருத்துக்களை சுதந்தி ரமாகவும், சுயாதீனமாகவும் வெளிப் படுத்துவதே நியாய மானது. மக்களை நிர்ப்பந்தித்து கையொப்பம் பெற்ற இந்தச் செயலை நாம் கண்டிப்பதுடன், இந்த நடவடிக்கைக்கு துணை போக வேண்டாம் என இங்குள்ள நிறுவனங்கள், அமைப் புகளை வேண்டுகிறோம்- என்றுள்ளது.

hp நளினில்...

Dual Core, Core i3, Core i5, Core i7, PC கள் மற்றும்
HP laptop கள்
எந்தக் காட்சியறையிலும் இல்லாத விலையில்..
மேலும் பல புதிய வடிவங்களில் Laptops அறிமுகப்படுத்தப்படுகின்றன
முந்துங்கள்
NALIN Information Technologies Pvt Ltd.
Nalin information Technologies
இல:-195/2 பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி.
T.P 021 222 1066, 0777667974

## விற்பனையாகிறது

மே 21,22 இல் நடைபெறவுள்ள SLAS பரீட்சைக்கான விசேட கையேடு
இலங்கை நிருவாக சேவை பரீட்சை (SLAS) இற்கும் யூன் மாதம் அளவில் நடைபெறவுள்ள இலங்கை கல்வி நிருவாக சேவை (SLEAS) பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகளுக்கும் ஏற்றது.
ஆக்கம்:- வே.தயேந்திரன் M.A விலை- 75 ரூபா
நாடெங்கிலும் உள்ள பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
ஏக விநியோகஸ்த்தர்கள்-
ஸ்ரீலங்கா புத்தகசாலை- யாழ்ப்பாணம்
தொலைபேசி-0212222573
லங்கா புத்தகசாலை (தனியார்) வரையறுக்கப்பட்டது
தொலைபேசி-0112341942

## மரண அறிவித்தல்கள்

### சபாரட்ணம் சறோஜினிதேவி

(ஓய்வுநிலை எழுதுவினைஞர், யாழ். பல்கலைக்கழகம்)



ஊரெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரட்ணம் சறோஜினிதேவி நேற்று (09.05.2011) திங்கட்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரட்ணம் - பாக்கியம் தம்பதியரின் புதல்வியும் சந்திராதேவி, தவனேஸ்வரி, கணேசலிங்கம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2011) செவ்வாய்க்கிழமை அவரின் ஊரெழு இல்லத்தில் காலையில் நடைபெற்று பூதவுடல் ஊரெழு பொக்கனை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி,
ஊரெழு கிழக்கு.

(4037)

தகவல்:
ச. கணேசலிங்கம்
(சகோதரன்).

### குமாரசாமி குலசேகரம்பிள்ளை



புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி குலசேகரம்பிள்ளை 08.05.2011 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற தம்பிஐயா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற தவமணியின் அன்பு கணவரும் பாலகுமாரின் (பிரான்ஸ்) பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் பெறாமகனும் யோகேஸ்வரி, ரவி, பத்மாவதி, காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கமலாதேவி ஆகியோரின் உடன் பிறவா சகோதரரும் பரமேஸ்வரி, சீவரெத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அன்னலெட்சுமி (நிலா), சந்திராதேவி, (காந்தி), சாரதாமணி, யோகமலர், தேன்மொழி, மாலினி, நிமலராணி, தேவரஞ்சினி, காலஞ்சென்ற தர்மசீலன் ஆகியோரின் சிறிய தந்தையும் காலஞ்சென்ற பூபாலசிங்கம் மற்றும் சோமசுந்தரம், சண்முகசுந்தரம், சிவசூரியதாஸ், ரஜீவன், மேகவர்ணன் ஆகியோரின் அன்பு மாமனும் மயூரன், அகிதா (தாதிய உத்தியோகத்தர், யாழ்ப்பாணம்), தர்சிதா (யாழ். பல்கலைக்கழக மாணவி), பவிராஜ், ருஷியந்தன் (பதுளை பல்கலைக்கழக மாணவன்), பிரசாந், டயகாந், சகானா, திஷாந், சண்சனா, பிரணவி,மேகவி, ராகவி, சதுர்ஜன், றொசானி, நிரோசா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2011) செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

(4038)

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

14/6, சீனியர் லேன்,
கலட்டி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கு. பாலகுமார் (மகன்), பூ. அன்னலெட்சுமி (நிலா), சோ.சந்திராதேவி (காந்தி), (பெறாமக்கள்)

### பொன்னன் சின்னத்துரை

(முன்னாள் கப்பல் தொழிலாளர் சங்கத் தலைவர்)



காங்கேசன்துறை சிக்னல் மரத்தடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் புகையிரத வீதி, கோண்டா விலை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னன் சின்னத்துரை 07.05. 2011 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னன்- கதிரி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் சின்னவன் - வள்ளி தம்பதியரின் மருமகனும் அருமைநாயகியின் (அழகி) பாசமிகு கணவரும் காலஞ் சென்றவர்களான கிட்ணன், துரையப்பா, சின்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம், அழகரத்தினம் மற்றும் இராசரத்தினம் (நூலக பொறுப்பாளர், அளவெட்டி), வசந்தாதேவி (ஜேர்மனி), பரமநாயகம், சுசீலாதேவி, கமலாதேவி, விமலாதேவி (சுவிஸ்), ரவிச்சந்திரன் (ஜேர்மனி), நிர்மலாதேவி (சுவிஸ்), விஜய நிர்மலாதேவி (சுவிஸ்), சீதாதேவி (ஆசிரியர், யா/கனகரத்தினம் மகா வித்தியாலயம்), சோதிராஜா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கமலாதேவி, சாந்தினி, அருள்நந்தி (ஜேர்மனி), ராகினி, பரமநாதன், பரமசிவம் (நூலக உதவியாளர், யாழ்.பல்கலைக் கழகம்), சாம்பசிவம் (சுவிஸ்), புஸ்பமாலா (ஜேர்மனி), இரத்தின லிங்கராசா (சுவிஸ்), சிவசுப்பிரமணியம் (சுவிஸ்), செல்வகுமார் (முகாமையாளர், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்-நல்லூர்), அற்புதமேனி (நோர்வே) ஆகியோரின் அருமை மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2011) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் . இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நவரட்ணராஜா வீதி,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
0214925158, 0714846223

(4034)

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org